janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூலை 10 - 16 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 14






**வலம் வரும் செங்கொடி!**

ஜனநாயகத்தின் மீது சிறிதும் நம்பிக்கையற்ற திருவாளர் மோடிஜி, அவ்வப்போது திடீர், திடீர் அறிவிப்புகளைச் >>>



ப 02

**பழங்குடியினருக்கு பரிசா? பாதகமா?**

இந்திய ஜனநாயகத்தின் ஆகச் சிறந்த அணிமகுடம் குடியரசுத் தலைவர். நாட்டின் சட்டங்கள், உலக நாடுகளுடனான >>>



ப 03

**உள்ளாட்சியில் நல்லாட்சி எப்போது?**

மக்கள் சுகாதாரத்துடன் வாழ தூய்மை பணியாளர்கள் தங்கள் மதிப்பை இழந்து மிக மோசமான சூழலில், தங்கள் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் >>>



ப 10


# பாஜக அரசை அகற்ற செயல் திட்டத்தை வகுப்போம்!



## விருதுநகர் மாவட்ட மாநாட்டில் டி.ராஜா முழக்கம்

**திருவில்லிபுத்தூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட மாநாடு பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. தலைமை வகித்தார். வத்திராயிருப்பு பேரூராட்சி தலைவர் தவமணிபெரியசாமி முன்னிலை வகித்தனர். தேசியபொதுச் செயலாளர் டி.ராஜா எக்ஸ்.எம்.பி. கலந்து கொண்டு பேசுகையில்,**

இந்தியா பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி உள்ளனர். மக்களின் கோபத்தை திசை திருப்ப பாஜக நாட்டில் மத சண்டையை ஏற்படுத்தி மக்களை பிளவுபடுத்த முயற்சிக்கிறது. இதை முறியடிக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்பட்டு வருகிறது. குடியரசுத் தலைவர் தேர்தல் இரு கொள்கைகளுக்கு இடையே நடக்கும் தேர்தலாகும். மதசார்பற்ற கூட்டணி கட்சிகளுக்கும், மதவாத அரசியலை முன்னிருத்தும் பாஜக கூட்டணி கட்சிகளுக்கும் இடையே நடைபெறக்கூடிய தேர்தலாகும்.

தமிழக ஆளுநர் ரவி அரசியல் அமைப்பு சட்டத்தை ஏற்று பொறுப்பேற்றுக் கொண்டவர். ஆனால் சனாதன மனுதர்ம கொள்கைகளை பேசி வருகிறார். மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டு பெரும்பான்மை மக்களுக்கு எதிராக அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிராக பேசிவருவது கண்டிக்கதக்கது. ஆர் எஸ் எஸ் கொள்கைகளை பேச வேண்டுமோனால் ஆளுநர் பவியை ராஜினாமா செய்துவிட்டு அவர்கள் மேடையில் பேச வேண்டும் ஜனநாயகத்திற்கு எதிராக பாஜக அரசு மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆட்சிகவிழ்ப்பு செய்துள்ளது. ஏற்கனவே மத்தியபிரதேசம், கோவாவில் செய்தது. இது தொடர வாய்ப்புள்ளது. இதை கண்டிக்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு அக்டோபரில் விஜயவாடாவில் நடைபெற உள்ளது. அதில் நாட்டின் நெருக்கடி, பாஜக மதவாத அரசியல் பற்றியெல்லாம் விவாதித்து 2024 பாராளுமன்ற தேர்தலில் பாஜக அரசை அகற்ற செயல் திட்டத்தை வகுப்போம். இவ்வாறு டி.ராஜா பேசினார். மாநில செயலாளர் இரா.முத்தரசன், தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி ஆகியோர் பேசினர்.

முன்னதாக பிஆர்சி பணிமனை முன்பிருந்து மாநாட்டு செம்படை பேரணி புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக சென்று பொதுக் கூட்ட மேடையை வந்தடைந்தது. 5000க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். பேரணியில் டி.ராஜா, இரா.முத்தரசன் ,சி.மகேந்திரன்,தி.இராமசாமி, பி.லிங்கம், வி.அழகிரிசாமி, எஸ்.பழனிக்குமார், செந்தில்குமார், பாலமுருகன், வி.பொன்னுபாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாட்டுக்கு

# பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், மாணவர்களை அணிதிரட்டுவோம்

## இளைஞர், மாணவர் பெருமன்ற மாநிலக்குழுக் கூட்டத்தில் முடிவு





அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக்குழுக் கூட்டம் மாநிலத் தலைவர்கள் த.கு.வெங்கடேசன், மௌ.குணசேகர் தலைமையில் சென்னை பாலன் இல்லத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலசெயலாளர் இரா. முத்தரசன், மாநிலத் துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு மாநில மாநாட்டின் செந்தொண்டர் அணிவகுப்பிலும், பேரணியிலும், இளைஞர்கள், மாணவர்கள் பங்கேற்பதின் அவசியம் குறித்து விளக்க உரையாற்றினர்.

இளைஞர் பெருமன்ற மாநிலசெயலாளர் க.பாரதி, மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் சீ.தினேஷ் ஆகியோர் செந்தொண்டர் அணிவகுப்புக்கான இளைஞர், மாணவர்களின் பங்களிப்புகள் குறித்தும் ஏற்பாடுகள் குறித்தும் உரையாற்றினர்.

பின்னர் கூட்டத்தில் திருப்பூரில் நடைபெறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில மாநாட்டு செந்தொண்டர் அணிவகுப்பில் எழுச்சியுடன் இளைஞர் மாணவர்களை பங்கேற்க வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து ஏராளமான மாநிலக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக சாலைவிபத்தில் உயிரிழந்த அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலக்குழு உறுப்பினர் மு.செல்லமுத்து அவர்களின் படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




**வங்க கடலல்ல, வர்க்கப் போரின் செங்கடல்! மங்காத மதச்சார்பின்மை காக்க**

# செஞ்சட்டையோடு அணிவகுப்பீர்!

**ஆகஸ்ட் 6, 7, 8, 9 இல் திருப்பூரில்**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு அழைக்கிறது**






# வலம் வரும் செங்கொடி!

**பேரன்புமிக்க தோழர்களே!**

**ஜனநாயகத்தின் மீது சிறிதும் நம்பிக்கையற்ற திருவாளர் மோடிஜி, அவ்வப்போது திடீர், திடீர் அறிவிப்புகளைச் செய்து, நாட்டையே பதற்றத்திற்கு உள்ளாக்கி மக்களை திசை திருப்புவதில் வல்லவர்.**

உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று திடீர் என்று அறிவித்தார்.

கறுப்பு பணம் முழுவதையும் கைப்பற்றுவோம் என்றார், சில மாதங்களுக்கு இதனால் பிரச்சினைகள் இருக்கும் பின் அனைத்தும் சரியாகிவிடும், அவ்வாறு ஆகவில்லை எனில் என்னை நடுத்தெருவில் நிற்க வைத்து பெட்ரோல் ஊற்றி கொளுத்துங்கள் என்றார்.

கறுப்புப் பணம் பிடிபட்டதா? ஒரே ஒரு ரூபாய் கூட கருப்புப் பணம் பிடிபட வில்லை, மாறாக பெரும் முதலாளிகளும், தவறான அரசியல்வாதிகளும், தாங்கள் பதுக்கி வைத்திருந்த பல ஆயிரம் கோடி ரூபாய்களை வெள்ளைப் பணமாக சட்டபூர்வமாக மாற்றிக்கொள்ள வகை செய்தது.

மோடியின் திட்டத்தால் அப்பாவி மக்கள், ஏழை, எளியவர்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். அப்பாவி மக்கள் பலரின் உயிர் பறிக்கப்பட்டது.

தன்னை தீயிட்டு கொளுத்துங்கள் என்று கூறினாரே அவ்வாறு செய்திட இயலுமா? முடியாது, ஏனெனில் அவர் நாட்டின் தலைமை அமைச்சர்!

அதிரடி மன்னர் அறிவித்த வேளாண் மக்களுக்கு எதிரான சட்டங்கள்.

அதனை எதிர்த்து நடைபெற்ற விவசாயிகளின் உறுதிமிக்க போராட்டம். ஏறத்தாழ ஒன்றேகால் ஆண்டு நடைபெற்றது. பணியை, கடும் குளிர், மழை, வெப்பம், கொடிய கொரோனாவின் பாதிப்பு, எழுநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளின் விலைமதிக்க முடியாத உயிர் பறிப்பு. இவைகளுக்கு பின்னரே மோடியின் வேளாண் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன.

அப்போதுகூட சட்டத்தின் நன்மைகளை விவசாயிகளுக்கு எங்களால் புரியவைக்க முடியவில்லை என்றுதான் கூறினார்! கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று மாவீரன் கூறுவது போன்று கூறினார் மோடி.

தற்போது நாட்டையே அக்னியாக்கிய அக்னிபாத் திட்டத்தை அறிவித்து நாட்டை பெரும் பதற்றத்திற்கு ஆளாகியுள்ளார்!

கடந்த 2014ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவேன் என உறுதிபட வாக்குறுதி தந்தார்.

வேலையின்மைக்கு ஆளாகி, கடும் குடும்ப நெருக்கடியில் உள்ள இளைஞர்களுக்கு மோடியின் திட்டம் காந்தம் போல் ஈர்த்ததில் வியப்பு இல்லை.

மோடியின் எட்டு ஆண்டுகால ஆட்சியில் 16 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்க வேண்டும் – அளித்தாரா?

16 பேருக்குக் கூட வேலை அளிக்க வில்லை என்பது மட்டுமல்ல, வேலையில் இருந்தவர்களையும் வீட்டுக்கு அனுப்பிய மகா புண்ணியவான்!

மோடி அக்னிபாத் என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்! இத்திட்டத்தின்படி இராணுவத்தின் முப்படைகளுக்கும் ஆள் சேர்க்கப்படுமாம்.

தங்களுக்கு ஏதாவது ஒரு வேலை கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் உள்ள இளைஞர்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி இராணுவத்திற்கு அழைக்கின்றார்கள்.

17 வயது முதல் 23 வயதுக்குட்பட்ட இளம் பிஞ்சுகளே வாருங்கள் இராணுவத்திற்கு, உங்களை நான்காண்டு காலத்திற்கு வேலைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

நான்கு ஆண்டுகளில் முதல் ஆண்டில் மாதம் ரூ.30 ஆயிரம், இரண்டாம் ஆண்டில் மாதம் ரூ.33 ஆயிரம், மூன்றாம் ஆண்டில் மாதம் ரூ.36,500, நான்காம் ஆண்டில் மாதம் ரூ.40 ஆயிரம் ஊதியம் வழங்குகிறேன்.

நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் நீ பணிபுரிய முடியாது; வீட்டுக்குப் போ. போகும் போது சும்மா போக மாட்டாய் உன் ஊதியத்தில் மாதம் தோறும் 30 சதவீதம் பிடித்தம் செய்த ரூ. 11.71 லட்சத்தை வாங்கிக் கொள் என்பதுதான் அக்னித் திட்டம்.

அக்னி தீட்டம் அறிவித்த நாள் முதலாய் நாடே அக்னியாகி விட்டது. நாட்டின் பல இடங்களில் வன்முறை, தீவைப்பு என்று பெரும் தீ, சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகிவிட்டது. லட்சக்கணக்கான இளைஞர்கள் தன்னெழுச்சியாக போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இளைஞர்களின் நியாயமான போராட்டம் கொச்சைப்படுத்தப் படுகின்றது. அரசியல் கட்சிகள் தூண்டிவிடுகின்றன என்று, அரசியல் கட்சிகள் மீது பழி போடுகின்றார்கள்.

இவை மட்டுமின்றி, ஒன்றிய அரசு அறிவிக்கும் நல்ல திட்டங்கள் தற்போது பயன் இல்லாமல் இருக்கலாம் – பிற்காலத்தில் அதன் பயனை அறிய முடியும் என்று மோடி உபதேசம் செய்கின்றார்.

உன் வாழ்க்கையில் தற்போது நீ சிரமப்பட்டாலும், பிற்காலத்தில் அதாவது நீ செத்த பின் மோட்சம் அடைவாய் என்று மோடி உபதேசம் செய்கின்றார்!

இத்தகைய மோசமான ஆட்சிக்கு முடிவு இல்லையா? ஒவ்வொரு நாளும் மக்கள் விலைவாசி உயர்வால் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகி வருகின்றார்கள்.

வேலையின்மையால் இளைஞர்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். விலைவாசி உயர்வு – வேலையின்மை என்கிற இரு பெரும் பிரச்சினைகள் தலை தூக்கி நிற்கின்றது. இவைகளுக்கு தீர்வு உண்டா?

இல்லை மாறாக மக்கள் கவனத்தை திசை திருப்புவதுதான் வழி.

**ஒன்றுபட்டு சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை மதரீதியாக, சாதி ரீதியாக மோதவிட்டு தங்களின் அற்பத்தனமான, குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.**

நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தி பேசியது, எதேச்சையானது அல்ல – வேண்டுமென்றே தெரிந்தே திட்டமிட்டு மேற்கொண்ட செயல்.

மக்களின் கவனத்தை திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட இழி செயல்.

இத்தகைய இழிவான, மலிவான அரசியலைத் தான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் செல்லக் குழந்தைகளான பா.ஜ.க.வின் ஆட்சி தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு எது குறித்தும் கடுகளவும் கவலை கொள்ளாத காவிக் கூட்டம், நயவஞ்சக, குள்ளநரி காவிக் கூட்டத்தினர் நாட்டையும், மக்களையும் வஞ்சிக்கும் வஞ்சகக் கூட்டத்தினை தோலுரிக்க நமது கவிஞர் பாரதி முழங்கியது போன்று,

**"பாதகம் செய்பவரைக் கண்டால் &– நாம்**
**பயங் கொளளலாகாது பாப்பா**
**மோதி மிதித்து விடு பாப்பா &– அவர்**
**முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"**

என முழங்கினாரே, அதனை செயல்படுத்த வேண்டாமா?

ஆம்! வஞ்சகக் கூட்டத்திற்கு எதிராக சிந்திய இரத்தத்தில் தோய்ந்து எடுக்கப்பட்ட செங்கொடி வருகின்றது – பவனி வருகின்றது. கம்பீரமாய் சிங்க நடை போட்டு சிலிர்தெழுந்து வருகின்றது.

தியாகத்தின் விளை நிலமான தியாகபூமி மன்னார்குடியில் இருந்து புறப்பட்டு பவனி வருகின்றது.

தஞ்சை தரணி என்றால் அது வெறும் நிலத்தையும், நீரையும் மட்டுமல்ல–

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என போற்றப்படும் பூமி அல்லவா?

மிக நீண்ட, அகண்ட சமவெளிப் பிரதேசம் அல்லவா?

வற்றாத ஜீவ நதியாம் காவிரித் தாயின் வளம் கொழிக்கும் பூமி அல்லவா?

சமவெளி நிலப்பகுதியும், வற்றாத காவிரி நீரும் இருந்தால் போதுமா? நெற்களஞ்சியம் ஆகிவிடுமா?

நிலத்தையும், நீரையும் பயன்படுத்திட உழைப்பு வேண்டாமா? அத்தகைய உழைப்பைத் தந்திட்ட விவசாயத் தொழிலாளர்களை மறந்துவிட முடியுமா? அவர்கள் சிந்திய வியர்வையை ஒதுக்கி ஓரம் தள்ளிவிட்டு நெற்களஞ்சியம் என புகழ் பாட முடியுமா?

அவர்கள் இரத்தத்தை, வியர்வையாக சிந்தியல்லவா இப்புகழை உருவாக்கினார்கள்!

புகழ் சேர்த்த பெரு மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது?

அவர்கள் எத்தகைய சமூகக் கொடுமைகளுக்கு உள்ளானார்கள்.

சூரிய உதயத்திற்கு முன்பே வேலை– மறைந்த பின்னரும் வேலை – வரவில்லை எனில் சாட்டையடி – சவுக்கடி – சாணிப்பால் என்ற உலகம் காணாத, கேளாத கொடும் தண்டனை.

நிலபிரபுத்துவ கொடுமதியாளர்களின் உத்தரவு– குடிசை வீடுகள் அகற்றம்.

மண் சுவர், குடிசை வீடு, எஜமானரின் உத்தரவுக்கு இணங்க இடித்து தரைமட்டமாக்குவது–

என்ன, என்ன வகை தண்டனைகள்– கொடுமைகள் – கொடுங்கோல்கள்–

பார்ப்பார் இல்லையா? கேட்பார் இல்லையா? எங்களின் தலைவிதியை மாற்ற எந்த குலதெய்வமும் எங்களுக்கு கருணை காட்டாதா? வேண்டாத தெய்வம் இல்லை, கும்பிடாத சாமி இல்லை– எந்த தெய்வமும் – சாமியும் கண்திறந்து பார்க்காத, கேட்காத நேரத்தில்தான்–

அஞ்சாதே – கவலை கொள்ளாதே, கதறி அழாதே – இதோ வருகிறேன் – இப்போதே வருகிறேன் என பி.எஸ்.ஆரின் பெரும் படை வந்தது–

ஏழைகளின் வீட்டை இடிக்கின்றாயா? இடித்தால் உன் வீட்டை நாங்கள் இடிப்போம் என முழக்கமிட்டான் ஓர் மாவீரன்–

நாட்டின் விடுதலைக்கு தூக்குக் கயிற்றை முத்தமிட்ட மாவீரன் பகத்சிங் பெயரைக் குறிப்பிட்டால், கேட்டால் இளைஞர்கள் மெய் சிலிர்த்து நிற்பார்கள்.

சிவராமன் என்ற பெயரைக் கேட்டால் தஞ்சை மாவட்ட மக்கள் மெய்சிலிர்த்து நிற்பார்கள்.

அடித்தால் திருப்பி அடிப்போம் என முழக்கமிட்டது மன்னார்குடியில் நடைபெற்ற பேரணி–

சிவராமன், இரணியன், களப்பால் குப்பு, ஆம்பலாபட்டு ஆறுமுகம், கோட்டூர் ராசு என தியாகப் பட்டாளம்–

தஞ்சை மக்களைத் தலைநிமிரச் செய்த பட்டாளம்–

அத்தகைய தியாக பூமியில்தான், மன்னார்குடியில் தான் சென்ற மாநாடு, ஆம் 24 வது மாநாடு 2018 மார்ச் 28, 29, 30, 31 நாட்களில் நடைபெற்றது. அங்கிருந்து தான் நமது 25வது மாநாட்டு செங்கொடி புறப்படுகின்றது.

திருவாரூர், நாகை, தஞ்சை, திருச்சி, கரூர், ஈரோடு என மாவட்டங்களில் வலம் வருகின்றது.

வழியெங்கும் மக்களின் எழுச்சிமிகு வரவேற்பை பெற்று, கொடி காத்த திருப்பூர் குமரன் நகருக்கு செங்கொடி வருகின்றது.

மாநில 25 ஆவது மாநாடு நடைபெறும்– திருப்பூர் நகரில், தோழர் தா.பாண்டியன் நகரில், தோழர்கள் பி.சேதுராமன், டாக்டர் வே.துரைமாணிக்கம் அரங்கின் முகப்பில், கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் கொடிமரத்தில், தியாகசீலர் விடுதலைப் போராட்ட வீரர். நாம் அனைவருக்கும் வழிகாட்டியாய், பொது வாழ்வுக்கு முன்னுதாரண புருஷராய் விளங்கி வரும் நமது மூத்த தோழர், நமது பெருமதிப்பிற்குரிய தலைவர், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களாலும், மக்களாலும் போற்றுதலுக்குரிய தலைவர், நாம் அனைவரும் ஆர்.என்.கே. என அன்புடன் அழைக்கும், தோழர் ஆர்.நல்லகண்ணு அவர்கள் செங்கொடியினை ஏற்றுகிறார். விண்ணதிர முழக்கங்கள் எழ தியாக பூமியில், இருந்து எடுத்து வரப்படும் கொடி – வானளாவ பறக்க உள்ளது.

கொடி பறப்பது மட்டுமல்ல – பட்டொளி வீசி பறக்கும் செங்கொடி நாட்டு மக்களுக்கு விடியலைத் தரும் – வஞ்சகக் கூட்டத்திற்கு முடிவு கட்டும்–

சங்கமிப்போம், திருப்பூரில் சிவப்பு சட்டையுடன் – செங்கொடி உயர்த்தி – சங்கநாதம் எழுப்பி அணிவகுப்போம் அலைகடலாய்–

**மீண்டும் சந்திப்போம்.**


**தோழமைமிக்க**

**இரா. முத்தரசன்**

# குடியரசுத் தலைவர் பதவி: பழங்குடியினருக்கு பரிசா? பாதகமா?



த.லெனின்




**இந்திய ஜனநாயகத்தின் ஆகச் சிறந்த அணிமகுடம் குடியரசுத் தலைவர். நாட்டின் சட்டங்கள், உலக நாடுகளுடனான ஒப்பந்தங்கள், அரசின் அறிவிப்புகள் அனைத்தும் அவர் பெயரிலேயே வரும். முப்படைகளின் தளபதியாகவும் செயல்பட்டவர் குடியரசுத் தலைவர். ஆனால், மோடி அரசு இதையும் மாற்றி இராணுவத்தைச் சார்ந்த ஒருவரையே அந்தப் பதவிக்கும் அமர்த்தியுள்ளது. இது நமது பெருமைமிகு ஜனநாயகத்திற்கு பெரும் கரும்புள்ளியை ஏற்படுத்திற்று.**

இஸ்லாமியர்களுக்கு எதிரான ஒரு இனப் படுகொலையை கடந்த 2002ஆம் ஆண்டு இன்றைய பிரதமர் மோடி, அன்றைய குஜராத் மாநில முதல்வராக இருந்தபோது நிகழ்த்தியதை நாடே அறியும். உலகச் சமூகமே அதிர்ந்துபோன அந்நிகழ்வுக்குப் பிறகுதான், ஒரு இஸ்லாமியரான ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களை குடியரசுத் தலைவருக்கான வேட்பாளராக அறிவித்து தன்னை புனிதராக்கிக் கொள்வதற்கான முயற்சியை பா.ஜ.க. எடுத்தது.

விண்வெளித்துறையில் வியத்தகு சாதனைகளை நிகழ்த்தியவர் நமது தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்றெல்லாம் பிரச்சாரங்கள் அதற்கு பக்கபலமாக எழுந்தபோது, இந்த ஆரவாரத்தில் பா.ஜ.க.– ஆர்.எஸ்.எஸ்.–ன் இஸ்லாமிய இன அழிப்பை கரைத்துவிடக்கூடாது என்றுதான் இடதுசாரிகள் முடிவெடுத்தனர்.

இதன் விளைவாக தோல்வி நிச்சயம் என்றாலும், வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடிய நேதாஜி சுபாஷ் சந்திர போசின், இந்திய இராணுவப் படையின் பெண்கள் அணி கேப்டனாக பணியாற்றிய விடுதலைப் போராட்ட வீரர் லட்சுமி ஷேகலை குடியரசுத் தலைவர் வேட்பாளராக அறிவித்து தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியது.

கும்பல் வன்முறைக் குண்டர்களால் மாட்டுக்கறி உணவுப் பிரச் சினையில் சிறுபான்மையினர் அடித்துக் கொல்லப்படுவதும், தலித் துகள் நரவேட்டையாடப்படுவதும், அதனை கனத்த மவுனத்தின் மூலம் ஆமோதித்த மோடி, அமித்ஷா கூட்டாளிகளின் முந்தைய ஆட்சியில்தான் ஒரு தலித்தான ராம்நாத் கோவிந்தை வேட்பாளராக அறிவித்தது.

காங்கிரஸ் கட்சியும் மற்றும் எதிர்க்கட்சிகள் இணைந்து புகழ்பெற்ற தலைவரான பாபு ஜெகஜீவன் ராவின் மகளான மீரா குமாரை வேட்பாளராக அறிவித்தன. ராம்நாத் கோவிந்த் வெற்றி பெற்றார். ஆனால் நாட்டின் முதல் தலித் குடியரசுத் தலைவராக காங்கிரஸ் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.கே. ஆர்.நாராயணன் அவர்களே ஆவார். 90 களில் மிக வீச்சோடு உலகமய, தனியார்மய, தாராளமய பொருளாதாரச் சீர்திருத்தங்களை அன்றைய காங்கிரஸ் ஆட்சி அமல்படுத்தியபோது குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் “உலகமயம் என்கிற அதிவிரைவுச் சாலையில் ஏழை எளியவர்களும் பயணம் செய்ய வேண்டும். அவர்களை அழித்துவிடக் கூடாது” என்று தனது கருத்தைப் பதிவு செய்தார். ஆனால் ராம்நாத் கோவிந்தோ நாட்டின் குடியரசுத் தலைவராக ஆனபோதும், பூரி ஜெகநாதர் ஆலயத்தில் வழிபாடு செய்யும் உரிமைகூட அவருக்கும் அவரது துணைவியாருக்கும் மறுக்கப்பட்டதை நாடே அறிந்து அதிர்ந்தது.

நாடு முழுவதும் கும்பல் வன்முறையும், வெறுப்பு அரசியலின் வெப்பமும் பெரும் வீச்சாக கிளம்பிய போதும், தன்னை தேர்ந்தெடுத்தவர்களுக்கு நன்றி பாராட்டும் விதமாக அமைதி காத்து நாட்டின் அரசியல் சாசன விழுமியங்களை காக்கும் தனது பொறுப்பை கைவிட்டவர்தான் அவர்.

**<u>இஸ்லாமியர்கள் படுகொலையானபோது, அதிலிருந்து தப்பிக்க இஸ்லாமியர் ஒருவரை வேட்பாளராக அறிவித்தது பா.ஜ.க. தலித்துகள் வேட்டையாடப்பட்ட போது ஒரு தலித்தை குடியரசுத் தலைவர் வேட்பாளராக்கியது. நாடு முழுவதும் வனத்தில் வாழும் பழங்குடி மக்கள் வனத்திலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்ட பிறகும், பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கனிம வள வேட்டைக்காக வனங்களிலிலிருந்து பழங்குடிகளை வெளியேற்றி, சுமார் 45 லட்சம் பழங்குடிகளை உள்நாட்டிலேயே அகதிகளாக ஆக்கியது பா.ஜ.க. ஆட்சி. ஆனால், இப்போது பழங்குடியினத்தைச் சார்ந்த ஒருவரான திரௌபதி முர்மு என்பவரை வேட்பாளராக்கி தனது “மாரிச”த்தனத்தின் அடுத்த ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது.</u>**

சொல்லி வைத்தார்போல, ஊடகங்கள்தோறும் பா.ஜ.க.வினரும், சங் பரிவாரத்தினரும் சமூக நீதி, சமூக நீதி என்று ஆரவாரம் செய்கின்றனர். ஆனால், உண்மை என்ன? சமூக நீதிக்கும் இவர்களுக்கும் என்ன சம்மந்தம்? சமூக நீதி தகுதியற்றவர்களை வேலைக்கு அமர்த்திவிடும், திறமைக்கு எதிரானது என்று ஆரவாரக் கூச்சலிட்டவர்கள்தான் இவர்கள். ‘மண்டல் குழு’ பரிந்துரைகளை அமல்படுத்தக் கூடாது என்று டெல்லியை இரத்த களறியாக்கியது இந்த வானரப் படைதான்!

உயர்கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம்., எய்ம்ஸ் உள்ளிட்ட அனைத்திலும் இன்றுவரை தலித்துகள், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட்டவர்கள் தங்களின் சட்டரீதியான இடஒதுக்கீடை பெற முடியவில்லை. இதற்காக பா.ஜ.க. அரசு செய்தது என்ன?

மருத்துவப் படிப்பில் நீட் தேர்வை கொண்டுவந்து சாதாரண ஏழை, எளிய மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவை சிதைத்தது. அதுவும் மருத்துவ மேற்படிப்பில் ஏற்கனவே இருந்த இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இடஒதுக்கீடை அமல்படுத்த மறுத்தது. உச்சநீதிமன்றம் சென்று அந்த உரிமையைப் பெற்ற பிறகே இன்று அத்துறையில் இடஒதுக்கீடு உறுதிப்பட்டுள்ளது.

அரசு வேலை வாய்ப்புகளை, காலிப் பணியிடங்களை இன்றும் நிரப்பாது “வேலை தடையாணையை” தொடர்வதன் மூலம் ஒன்றிய அரசின் சுமார் 60 லட்சம் காலிப் பணியிடங்கள் அப்படியே கிடப்பில் போடபட்டுள்ளது. இதுதான் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.சின் சமூக நீதி!

திரௌபதி முர்மு ஒடிசாவின் மயூர்பஞ் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். இப்பகுதிதான் புலிகளின் நிலம் என்று அழைக்கப்படுகிறது. இந்திய விடுதலைப் போராட்டத்திற்காக பிரிட்டிஷ் இராணுவத்தை எதிர்த்து போராடிய சந்தால் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்தான் இவர்.

முதலில் பள்ளி ஆசிரியராகவும், பின்பு அரசுப் பணியிலும் இருந்த அவர், அதிலிருந்து ராஜினாமா செய்து பா.ஜ.க.வில் இணைந்தார். பா.ஜ.க.வின் பழங்குடிகளுக்கான துணை அமைப்பான பழங்குடி மோர்ச்சாவின் துணைத் தலைவராக இருந்து செயல்பட்டவர். இவர் ராய்ரங்பூரில் கவுன்சிலராக இருந்த போதுதான், அப்பகுதியில் பழங்குடி மக்களுக்காக பணியாற்றி, தொழு நோயாளிகளுக்கு சேவை செய்த கிரஹாம் ஸ்டெயின்ஸ் பாதிரியாரும், அவரது இரண்டு குழந்தைகளும் ஜீப்பில் வைத்து சங் பரிவார குண்டர்களால் உயிரோடு கொளுத்தப்பட்டு உயிரிழந்தனர்.

ஆனால், பழங்குடி பெண்ணான இவர் இதற்காக மனம் பதைபதைக்கவில்லை. ஒரு சிறு கண்டனத்தைக் கூட இந்தச் சம்பவத்திற்கு எதிராக இவர் பதிவு செய்யவே இல்லை.

2000–2009ல் ராய்ரங்பூரில் இரண்டுமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பா.ஜ.க. – பிஜூ ஜனதா தள கூட்டணி அரசில் இரண்டுமுறை அமைச்சராகவும் இருந்தார். முதல் முறை சட்டமன்ற உறுப்பினர் வேட்பு மனு பிரமாண பத்திரத்தில் தனக்கு வீடு இல்லை, வங்கியில் சிறிய இருப்பு கொஞ்சமும், கொஞ்சம் நிலமும் இருப்பதாக அன்று அவர் அறிவித்தது அன்று பேசுபொருளாக ஆனது.

பின்பு அவர் ஜார்கண்ட் மாநிலத்தின் கவர்னராக செயல்பட்டார். கடந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி கொண்டு வந்த வன உரிமைச் சட்டம் பழங்குடிகளுக்கு மிகச் சிறந்த உரிமைகளை வழங்கியது. அந்தச் சட்டத்தை நீர்த்துப் போக வைக்கும் விதத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்து வன வளத்தை அம்பானி, அதானிகளுக்கு பந்தி வைப்பதற்கு முயற்சி செய்தது. அதற்காக 45 லட்சம் பழங்குடியினர் வனப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். 12 இலட்சம் பழங்குடியினருக்கு மேல் வாழ்விட பட்டா மறுக்கப்பட்டது. இந்தச் சட்டம் நீதிமன்றத்தில் தோல்வி அடைந்த நிலையில் பா.ஜ.க. ஆட்சி வனப் பகுதிகளில் ஒரு உள்நாட்டுப் போரையே உருவாக்கியது. அந்தப் போரில் வனங்களின் இயற்கை வளங்களையும், விலங்குகளையும், வனங்களின் பாதுகாவலர்களான பழங்குடியினரையும் பலியிட்டு தனது கார்ப்பரேட் விசுவாசத்தை நிரூபித்தது பா.ஜ.க.

ஜார்கண்டில் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம், சந்தல் பர்கானா குத்தகைச் சட்டம் ஆகியவற்றைக் கொண்டு வந்து முந்தைய காங்கிரசின் வன உரிமைச் சட்டத்திற்கு எதிராக அம்மாநில பா.ஜ.க. அரசு முயற்சித்தபோது, வாய்மூடி நின்றவர்தான் இவர். இதற்கு எதிராக வலுவான போராட்டங்கள் நடைபெற்றபோதும், அதனை நிறைவேற்ற குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பியது. ஆனால் குடியரசுத் தலைவர் அதை திருப்பி அனுப்பி வைத்தார்.

**<u>சிறையில் இறந்துபோன, ஸ்டேன் சுவாமி கடந்த 40 ஆண்டுகளாக ஜார்கண்ட் மற்றும் ஒரிசாவில் வாழும் பழங்குடி மக்களுக்காக அரும்பாடுபட்டவர். அவர்களது சுயச்சார்பு பொருளாதார மேம்பாட்டிற்காக துணை நின்றவர். 1997ல் சமத்தா வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு பழங்குடியினரின் நிலங்களில் உள்ள கனிம வளங்களை எவரும் அபகரிக்க முடியாத அளவிற்கு பாதுகாப்பு அளித்தது. ஆனால், ஜார்கண்ட் மாநில பா.ஜ–.க. அரசு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வந்து நல்ல வளமான பழங்குடியினரின் நிலங்களை அரசே தனியார் நிறுவங்களுக்கு அளித்து கனிம வளங்களை அபகரிக்க வழி வகுத்தது. இதை எதிர்த்துதான் ஸ்டேன் சாமி தொடர்ந்து போராடினார். ஆனால் அன்றைய கவர்னர், இன்றைய குடியரசு வேட்பாளர். இந்த பகல் கொள்ளைக்கு பக்கபலமாக நின்றார். இதில் எங்கே இருக்கிறது சமூக நீதி?</u>**

சரி அது இருக்கட்டும் ஜார்கண்ட் முழுக்க முழுக்க பழங்குடிகள் நிறைந்த மாவட்டம். பா.ஜ.க.தான் ஆட்சி செய்தது. ஆனால், பழங்குடி அல்லாத ரகுபார் தாஸை தான் முதல்வராக ஆக்கி அழகு பார்த்தது பா.ஜ.க. அப்போது எங்கே போனது சமூக நீதி? பா.ஜ.க.வின் இந்த குடியரசுத் தலைவருக்கான வேட்பாளர் அறிவிப்பு நடைபெற உள்ள ஐந்து மாநிலத் தேர்தலோடு ஒட்டிப் பிணைந்தது.

ஜார்கண்டை ஒட்டியுள்ள குஜராத், மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர் உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் சந்தால் பழங்குடியினர் அதிக அளவில் வசித்து வருவதை கவனத்தில் கொண்டே இந்த காய் நகர்த்தல் நிகழ்ந்திருக்கிறது. இதற்கு பெயர் சாணக்கியத்தனமல்ல. சகுனித்தனம்.

ஒரு கோமாளி அரண்மனைக்கு சென்றால் அவர் அரசராகிவிடுவது இல்லை. ஆனால், அரண்மனைதான் சர்க்கஸ் கூடாரமாகி விடுகிறது என்ற துருக்கிய பழமொழிதான் நினைவில் நிழலாடுகிறது!

ஆனால், மறுபக்கத்திலோ, எதிர்க்கட்சிகள் அறிவித்த குடியரசுத் தலைவர் வேட்பாளர் யஸ்வந்த் சின்கா, இந்திய ஆட்சிப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர். ஒன்றிய அமைச்சராக இருந்து அனுபவம் பெற்றவர், தான் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நின்று செயல்படுவேன் என்று உறுதியளித்துள்ளார். அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒருங்கிணைந்து இவரை ஆதரிப்பதன் மூலம் பா.ஜ.க.வின் அடாவடி அரசியலுக்கு முடிவு கட்டிட ஒரு ஆரோக்கியமான பாதையை ஏற்படுத்தியுள்ளன. குடியரசுத் தலைவர் தேர்தல் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்குகளின் மூலம் அந்தந்த மாநில மக்கள் தொகைக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையில் நடத்தப்படும் தேர்தல் ஆகும்.

இந்திய ஜனநாயகத்தைப் பலப்படுத்த குடியரசுத் தலைவர் தேர்தலில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் வாக்களித்து தேர்ந்தெடுக்கும் விதத்தில் உரிய மாற்றங்கள் வேண்டும் என்ற கோரிக்கையும் இன்றைய ஜனநயாகத்தை வலுப்படுத்தும் வாதமே ஆகும். எனவே, குடியரசுத் தலைவர் தேர்தல் வெற்றித் தோல்விக்கான ஒரு தேர்தல் அல்ல. நாட்டின் கண்ணியம், ஜனநாயகம், சமத்துவம், சமயச் சார்பின்மை ஆகியவற்றைக் காக்கும் ஒரு உன்னதப் போர்! ஜனநாயகமா? மதவெறி சர்வாதிகாரமா? என்பதற்கான போர்! அதற்கான பிரச்சாரங்களை மேற்கொள்ள இது மிகச் சரியான தருணம்.

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 14

## கொலையாளி பிஜேபி உறுப்பினர்?!

உதய்பூரைச் சேர்ந்த கணையா லால் கொடூரமாக கொலை செய்யப்பட்டதை இந்தியாவில் உள்ள அத்தனை கட்சிகளும் கடுமையாக கண்டனம் செய்தன. ஆனாலும் ஆர்எஸ்எஸ் பிஜேபிகாரர்கள், 'இந்தக் கொலையை யாராவது கண்டித்தார்களா' எனப் பொய்க் கேள்வியை எழுப்பி ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் வசைபாடித் தீர்க்கின்றனர்.

பிஜேபி செய்தி தொடர்பாளராக இருந்த நூபுர் ஷர்மாவின் மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் வந்த போது, "உங்களுடைய கட்டுப்பாடற்ற பேச்சினால், நாடே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது" என்று நீதிபதிகள் கண்டித்தனர். அவ்வளவுதான்! சங்கப் பரிவாரம் பொங்கி எழுந்து விட்டது. நீதிபதிகள் மீது கடுமையான கண்டனங்கள், ஆர்ப்பாட்டங்கள்.

நீதிபதிகள் அலுத்துப் போய், நாங்கள் வழக்கை ஆய்வு செய்து தீர்ப்பு கூறவா அல்லது உங்கள் சமூக வலைத்தளங்களை பார்த்து எழுதவா! நீதிமன்றங்கள் பற்றி நியாயமான ஆட்சேபனைகள் மற்றும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வைக்கலாம். ஆனால் குறிப்பிட்ட நீதிபதியை தனிப்பட்ட வகையில், தனக்கென ஒரு செயல் திட்டத்தை வைத்துக்கொண்டு தாக்குவது தடை செய்யப்பட்டதாகும். பாதி உண்மைகளை வைத்துக் கொண்டு நீதித்துறை நடவடிக்கைகளை சரியா தவறா என ஆய்வு செய்யும் செயலைப் பொறுத்துக் கொள்ள இயலாது" என நீதிபதி ஜே பி பர்டிவாலா நீதிமன்றத்தில் பேசும் அளவிற்கு சங்கிகளின் ஆர்ப்பாட்டம் சென்றது.

தமக்கு வேண்டியதை நீதிமன்றம் சொன்னால், அதை கொண்டாடுவதும், தமது விருப்பங்களை மறுத்து நீதிமன்றம் தீர்ப்பளித்தால் கடுமையாக கண்டித்து தீர்ப்பை அமலாக்க விடாமல் செய்ய ஆடுவதும் சங்கிகளுக்கு கைவந்த கலை..

ஐயப்பன் கோவிலில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என்று நீதிமன்றம் சொன்ன தீர்ப்பை அமுல் நடத்த கேரள இடதுசாரி அரசு முனைந்த போது, எதிர்த்து கலகம் செய்து தடுத்ததை, விடாமல் தடுத்ததை நாடறியும்.

இப்போது, கணையா லால் கொலையாளிகளில் ஒருவரான ரியாஸ், ராஜஸ்தான் மாநில எதிர்க்கட்சித் தலைவரான குலாப்சந்த் கட்டாரியா பக்கத்தில் நின்று கொண்டிருக்கும் புகைப்படம் வெளிவந்திருக்கிறது.

முதலில் "இது உண்மையான புகைப்படம் அல்ல. வெட்டி ஒட்டப்பட்டது. நான் இதன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன்" என வாய் நீளம் காட்டிய கட்டாரியா "நான் பிஜேபி தலைவராகவும், சட்டப்பேரவை உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்திருக்கிறேன். என் பக்கத்தில் யாராவது நின்று புகைப்படம் எடுத்தால் நான் பொறுப்பா? என் மீது கிரிமினல் வழக்கு தொடர்ந்து பாருங்கள்" என்று கீழிறங்கினார்.

அவரோடு சேர்ந்து "எங்கள் தலைவர், அவர் ஒரு புகழ் பெற்ற தலைவர், தன்னோடு சேர்ந்து புகைப்படம் எடுக்க வேண்டும் என்று ஒரு உறுப்பினர் கூறினால் அவரால் மறுக்க முடியாது" என பிஜேபி மாவட்ட தலைவர் கார்னிசிங் சகாவத் ஒத்தூதினார்.

இதே ரியாஸ், காங்கிரஸ் தலைவர் பக்கத்திலோ, இடதுசாரிகள் பக்கத்திலோ நின்று ஒரு புகைப்படம் வந்திருந்தால் சங்கிகள் என்ன குதி குதித்து இருப்பார்கள்! நாடே அதிர்ந்திருக்காதா!

நேருவும் அவரது சகோதரி விஜயலட்சுமி பண்டிட்டும் கட்டிப்பிடித்தது போல இருந்த படத்தை வெளியிட்டு, அவர் 'பெண் பித்தர்' என்று வெட்கமின்றி பரப்புரை செய்த பேசிய அறம் பிறழ்ந்த கூட்டம் அல்லவா அது!

வெறுமனே பக்கத்தில் நின்று படமெடுத்தவர் அல்லர்; பிஜேபியின் உறுப்பினர்தான் என்பதற்கான ஆதாரமும் வெளியானது. உடனே 'மிஸ்டு கால் மூலம் நாங்கள் உறுப்பினர்களை சேர்க்கிறோம். எங்களுக்கு யார் சேர்ந்தார் என எப்படி தெரியும்' என இன்னொரு படி இறங்கினார் சக்காவத்.

யாரெனத் தெரியாது என்று சொன்னது பொய் என நிரூபிக்க, ரியாஸ், பிஜேபி கழுத்துப்பட்டையை அணிந்து கொண்டு, இதே சகாவத்திடமிருந்து பிஜேபி உறுப்பினர் அட்டையை 2019ல் வாங்கிக் கொள்ளும் புகைப்படத்தை வெளியிட்டு. பிஜேபியின் ஐடி பிரிவிலும் இருக்கிறார், கட்டாரியாவுக்கு சாவடி முகவராக பணிபுரிந்துள்ளார், பிஜேபியின் பல நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டதற்கு ஆதாரம் உண்டு

என மாநில உள்துறை துணை அமைச்சர் ராஜேந்திர சிங் யாதவ் வெளிச்சப்படுத்திவிட்டார்.

மாநில காவல்துறை விசாரித்தால் இவையெல்லாம் வெளிவந்து விடும் என்பதால்தான், மாநில அரசின் காவல்துறை விசாரித்த இந்த வழக்கை உடனடியாக மாற்றி. ஒன்றிய அரசு தனக்குக் கீழ் உள்ள தேசிய புலனாய்வு முகமையை விசாரிக்க சொல்லி இருக்கிறது என்று காங்கிரஸ் அரசு குற்றம் சாட்டியிருக்கிறது.

ஒரு நாள் வெளியாகும், அதற்கு பொய்யும் புரட்டும் பலியாகும்.

# சித்தாந்த ஞானத்தந்தை எம்.கே. ரங்கநாதன்

## நூற்றாண்டு நிறைவு விழாவில் டி.எம்.மூர்த்தி புகழாரம்!



ஏஐடியூசியின் முன்னாள் மாநிலச் செயலாளர் மறைந்த எம்.கே.ரங்கநாதன், மதராஸ் டிராம்வே தொழிற்சங்கத்தில் சக்கரை செட்டியார், சிங்காரவேலர் ஆகிய முதுபெரும் ஆளுமையர்களுடன் செயல்பட்டவர். தொழிற்சங்க சித்தாந்த ஞானத் தந்தையரில் ஒருவரான எம்.கே. ரங்கநாதனின் நூற்றாண்டு நிறைவு படத் திறப்பு நிகழ்வை, உழைக்கும் மக்கள் மாமன்ற மாநாட்டில் திறந்து வைப்பது சிறப்புக்குரியது என ஏஐடியுசியின் பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி பேசினார்.

உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் 32 வது மாநாடும், தொழிற்சங்கத் தலைவர் குசேலரின் 87வது பிறந்த நாள் தொழிற்சங்க ஜனநாயக நாளாகவும், பொதுவுடமை தோழர் எம்.கே. ரங்கநாதன் நூற்றாண்டு நிறைவு படத்திறப்பு விழாவும், சென்னை எழும்பூர் பெரியார் திடல் எம்.ஆர்.ராதா மன்றத்தில் ஜூலை 4 அன்று மன்ற பொருளாளர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது.

உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் தலைவர் குசேலர் மற்றும் ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி முன்னிலையில் நடைபெற்ற மாநாட்டு நிகழ்வில், மாமன்ற பொதுச் செய லாளர் என்.துரைராஜ், துணைச் செயலாளர் ஆர்.சம்பத் ஆகியோர் பேசினர்.

சிறப்புரையாற்றிய டி.எம்.மூர்த்தி பேசியதாவது:

கே.டி.கே.தங்கமணி, ஏ.எம்.கோபு, வி.பி.சிந்தன் உள்ளிட்ட செயலூக்கமிக்க தொழிற்சங்க தலைவர்களின் பழைய தலைமுறை மறைந்து, புதிய தலைமுறை யினர் முன்வந்திருக்கிறார்கள். பழைய தலைமுறை தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த குசேலர் இன்று நம்மோடு இருக்கிறார்.

ஐஎன்டியுசி தலைவர் ஜி.காளான் அவர்களின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட போது, அவர் குறிப்பிட்டு சொன்னதாக அவரைப் பற்றிய செய்திகளை மலராக வெளியிட்டுள்ளார்கள். வி.பி.சிந்தன், கே.டி.கே. தங்கமணி, குசேலர் போன்ற சமகால தொழிற்சங்கத் தலைவர்களோடு பல முரண்பாடுகள் இருந்தாலும் இணைந்து செயல்பட்டிருக்கிறோம் என்பதாக அவரது கருத்தை பதிவு இருக்கிறார்கள்.

அதுபோல ஏஐடியுசியும், உழைக்கும் மக்கள் மாமன்றமும் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்பட்டு வந்திருக்கிறோம். ஏஐடியுசி அலுவ லக கட்டட திறப்பு விழாவில் குசேலர் கலந்து கொண்டு வாழ்த்தி பேசி யிருக்கிறார். உழைக்கும் மக்கள் மாமன்ற அலுவலக அரங்கத்தை, எந்த ஒரு தொழிற்சங்க நிகழ்வுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அவர் அப்போது பேசி யிருக்கிறார்.இப்படியெல்லாம் தொழிற்சங்க ஒற்றுமையை காப்பாற்றியவர்கள் நமது மூத்த தொழிற்சங்க தலைவர்கள்தான்.

தொழிற்சங்க சட்டங்கள் வரைமுறை ப்படுத்தப்பட்டு, விரிவாக பயன்படுத்த தக்க அளவினதாக இருந்துள்ளன. தற்போதைய தொழிற்சங்க சட்ட மாற் றங்கள் தொழிலாளர்களுக்கு பாதிப்பு உண்டாக்குவதாக உள்ளன. 1926 ஆம் வருடம் கொண்டுவரப்பட்ட தொழிற் சங்க சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவும், சில ஷரத்துக்களை ரத்து செய்வதற்குமான வாய்ப்புகளை கொண்டிருந்தது. இப்போது போராடும் தொழிற்சங்கமும், தொழிற்சங்க தலைவர்களும் இருக்க முடியாது என்பதாக திருத்தப்பட்டு விட்டது.

நிரந்தர தொழிலாளர்களுடைய தொழிற்சங்கங்கள் ஒப்பந்த தொழி லாளர்களின் நலன்கள் குறித்து பேசுவதில்லை. நிரந்தர தொழிலாளர்களுக்கு எதிரானவர்களாக ஒப்பந்த தொழிலாளர்கள் முன்னிறுத்தப் படுகிறார்கள் என்ற போக்கு மாறவேண்டும்.

ஏஐடியுசி தலைவர் ஏ.எம்.கோபுவின் படத்திறப்பு விழாவில் கலந்து கொண்டு அவரது படத்தை திறந்து வைத்துவர் குசேலர்தான்.

கருங்காலிகளை ஏவி தொழிற்சங்க நடவடிக்கைகளை முறியடித்த காலச் சூழல் மாறி, இப்போது நீதிபதி மற்றும் காவல்துறை அதிகாரிகளை கூட்டாக வைத்தே அத்தகைய தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை சட்டபூர்வமாக முறியடித்திருகிறார்கள்.

தொழிற்சங்க மேம்பாட்டு நடவடிக் கைகளுக்கு ஆலோசனைகளை வழங்கிடும் தகுதியும் சிறப்பும் குசேலருக்கு இருந்தது என்பதை அனைத்து தரப்பினரும் உணர்ந்து நடந்து கொண்டனர். தலைவர் குசேலரின் வழிகாட்டல்களோடு செயல்பட்டு, இன்று பாதுகாப்புத் துறை தொழிற்சங்கவாதியாக சிறப்பாக செயல்பட்டு வரும் ஸ்ரீகுமார் உலக தொழிற்சங்க காங்கிரஸின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இன்று நம்மோடு இருக்கும் மூத்த தொழிற்சங்கத் தலைவர் குசேலர் தொழிற்சங்க ஒற்றுமைக்கு வழிகாட்டுதலாக இருந்து தொழிற்சங்கங்களை நெறிப்படுத்த வேண்டும் என்பதே இன்றைய காலகட்டத்தின் தேவையாக இருக்கிறது.

ஏஐடியுசியின் மூத்த தொழிற்சங்கத் தலைவர்களாகத் திகழ்ந்த எம்.கே.ரங்கநாதன் மற்றும் கரூர் சோமு ஆகியோரின் நூற்றாண்டு விழாவிலும் படத்திறப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுள்ளேன். எம்.கே. ரங்கநாதன் மதராஸ் டிராம்வே தொழிற்சங்கத்தில் சக்கரை செட்டியார், சிங்காரவேலர் ஆகிய முதுபெரும் தொழிற்சங்க ஆளுமையோடு இருந்து செயல்பட்டவர்; உழைக்கும் மக்கள் மாமன்ற மாநாட்டு அரங்கில் சித்தாந்த ஞானத் தந்தை எம்.கே.ரங்கநாதன் நூற்றாண்டு நிறைவு படத்திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டது பெரும் சிறப்புக்கு உரியதாக அமைந்திருக்கிறது என பேசினார்.

# வருவாய்க்கு ஏற்ப வசூல் படியும், மகளிர் இலவச பயணத்திற்கு ஒதுக்கப்படும் தொகைக்கு ஏற்ப வசூல் படியும் வழங்கிடுக!

## போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு ஏஐடியூசி கடிதம்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களின் தொழிலாளர்கள் சம்மேளன ஏஐடியூசி தலைவர் எம்.ஆறுமுகம், பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் ஆகியோர் போக்குவரத்து துறை அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:


மகளிர் இலவச பயணம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு கட்டணம் அச்சிடப்படாத பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இலவசமாக பயணம் செய்யும் மகளிருக்கு உரிய பயணக்கட்டணம் உத்தேசமாக தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. சாதாரண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆண் பயணிகள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

மேற்சொன்ன சூழ்நிலையில் மகளிர் இலவச பயணத்திற்கு அரசால் ஒதுக்கப்படும் நிதியில் தினசரி வசூல் படி வழங்குவதற்கு மாறாக, வசூலாகும் பணத்திற்கு இரட்டிப்பு வசூல்படி என்பது நாளடைவில் குறைந்து கொண்டே போகும். வசூல் ஆகும் பணத்திற்குத்தான் வசூல்படி என்ற கோரிக்கை தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டது. அமைச்சரின் அறிவிப்பு தொழிலாளர்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

அனைத்து பேருந்துகளிலும் 29.1.2018 கட்டண உயர்வுக்கு பின்பாக வசூல் படி ஒப்பந்த அடிப்படையில் உத்தேச வருவாய் உயர்வை மனதில் வைத்து, உயரும் வருவாயில் (80:20) 80 சதம் ஓட்டுனர் நடத்துனர்களுக்கு பலன்தரும் வகையிலும், 20 சதம் நிர்வாகத்திற்கும் மாற்றி அமைத்திட வேண்டும் என்பதுதான் தொழிற்சங்கங்களின் கோரிக்கையாகும். நாளது தேதி வரை அது நிறைவேற்றப்படவில்லை. போக்குவரத்து துறை அமைச்சரின் அறிவிப்பு தொழிலாளர்களுக்கு பலன் தரும் வகையில் இல்லை.

எனவே, அனைத்து பேருந்துகளிலும் வசூலாகும் வருவாய்க்கு ஏற்ப வசூல் படியும், மகளிர் இலவச பயணத்திற்கு அரசால் ஒதுக்கப்படும் தொகைக்கு ஏற்ப வசூல் படியும் வழங்கிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு கடிதத்தில் கூறியுள்ளனர்.



## ‘நேட்டோ’ எனும் எல்லை தாண்டிய
# பயங்கரவாதம்

- ஆனந்த் பாசு

**நேட்டோ (NATO) எனப்படும் வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பின் உச்சி மாநாடு அண்மையில், ஜூன் மாத இறுதியில் ஐரோப்பாவில் உள்ள ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகரில் நடந்து முடிந்துள்ளது.**

இந்த உச்சி மாநாட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பில், நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டொல்டென்பேர்க் பேசுகையில், ‘உச்சி மாநாடு முதல் முறையாக நேரடியாகச் சீனாவையும், நேட்டோ உறுப்பு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்குச் சீனா முன்னிறுத்தும் சவால்களையும் கவனத்தில் கொண்டிருக்கும். ‘நேட்டோ உறுப்பு நாடுகள், தெற்கு அண்டைப் பகுதியில், ரஷ்யா மற்றும் சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்கிற்குப் பதிலடி கொடுப்பதைப் பரிசீலிக்கும். இப்படிக் கூறி இருப்பது, உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தெற்கு அண்டைப் பகுதி என்பது, இந்திய மற்றும் பசிபிக் பெருங் கடலைச் சுற்றியுள்ள இந்தியாவை உள்ளடக்கிய பிராந்தியத்தையே குறிக்கிறது. வாஷிங்டன் ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட, வட அட் லாண்டிக் உடன்படிக்கை அமைப்பு, 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு இராணுவக் கூட்டணி. இரண்டாம் உலகப் போருக்குப் பிந் தைய காலகட்டத்தில், மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நிலை கொண்டிருந்த சோவியத் படைகளுக்கு எதிர் படையை இது உருவாக்க முயன்றது. இதன் இன்னொரு நோக்கம் சோவியத் யூனி யன் முன்னெடுக்கும் கம்யூனிச சித்தாந்தப் பரவலைத் தடுத்து நிறுத்துவது.

பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, நோர்வே, போர்ச்சுகல், இங்கிலாது ஆகிய நாடுகளை உள்ளடக்கிய யுனைடெட் கிங்டம் மற்றும் அமெரிக்கா ஆகிய 12 நாடுகள் இதன் ஸ்தாபன உறுப்பினர்கள். பிறகு, கிரீஸ், துருக்கி (1952) ஆகிய நாடுகளும் இந்த ராணுவக் கூட்டமைப்பில் இணைந்தன. இந்த ராணுவக் கூட்டமைப்பிற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சோவியத் யூனியன் வார்சா ஒப்பந்த அமைப்பை 1955 ஆம் ஆண்டில் உருவாக்கியது.

இவ்விரு எதிரெதிர் ராணுவக் கூட்டணிகளும், ‘பனிப்போர்’ என்று பெயர் சூட்டப்பட்ட, பிரகடனப்படுத்தப்படாத நிழல் யுத்தத்தை நடத்தி வந்தது, இன்னொரு உலக யுத்தத்திற்கு இது அடிகோலுமோ என்கிற பேரச்சத்தை உலக நாடுகளிடையே ஏற்படுத்தியது. 90 களின் தொடக்கத்தில், சோவியத் யூனியன் உலகின் ஆகப்பெரும் அரசியல் கட்டமைப்பு பிரிந்தவுடன், வார்சா ஒப்பந்த கூட்டமைப்பும் கலைக்கப்பட்டது. இந்த நிலையில், சோவியத் யூனியன் பிரிந்ததற்குப் பிறகு அதன் ஸ்தாபன நோக்கமான சோவியத் எதிர்ப்பு என்பதே நீர்த்துப் போய் விட்டதால், நேட்டோவின் இருத்தல், இயல்பாகவே கேள்விக்குள்ளாக்கப்பட்டது.

ஆனால், உலக அமைதியை முன்னிட்டு, அது கலைக்கப்படுவதற்குப் பதிலாக புதிய நோக்கத்துடனும், செயல்திட்டத்துடனும் செயல்படும் என்று பிரகடனப்படுத்தப்பட்டு, அதன் செயல்பாடுகள் தொடர்ந்தன. துரதிருஷ்டவசமாக, சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த பல ஐரோப்பிய நாடுகளும், நேட்டோ ராணுவக் கூட்டமைப்பில் உறுப்பினர் களாக இணைந்தன. இதன் மூலம், வட அட்லாண்டிக் பிராந்தியத்தைத் தாண்டி, கிழக்கு நோக்கி நேட்டோ அமைப்பு விரிவடைந்தது.

சோவியத்திலிருந்து பிரிந்த ரஷ்யாவின் அதிபர் போரிஸ் யெல்சின் இதை எதிர்த்தாலும், ஐரோப்பாவில் அமைதியைக் காப்பதற்கான




முகாந்திரத்தில் அவருடன் சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது. ஆனால், சமாதானத்திற்குப் பதிலாக, நேட்டோ அமைப்பு பல்வேறு நாடுகளின் பிரச்னைகளை ஊதிப் பெரிதாக்கி, அமெரிக்க ஏகாதிபத்தியம் புவிசார் அரசியலின் ஒற்றை துருவமாக உருவாகவே வழி வகுத்தது. இருப்பினும், பல வகையிலும் வல்லமை படைத்த ரஷ்யாவை அடக்கி ஒடுக்க, ஐரோப்பாவில் வேரூன்றிய நேட்டோ, மென்மேலும் வேர் பரப்ப முனைந்தது. இது ரஷ்யாவிற்கு ராணுவரீ தியாக அச்சுறுத்தலை ஏற்படுத்தியது.

2014 ஆம் ஆண்டிலிருந்து, உக்ரைனைக் களமாகக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியம், ரஷ்யா மீது மறைமுகமாக யுத்தம் நடத்தி வந்தது, ஒரு கட்டத்தில், பிரகடனப்படுத்தப்பட்ட ரஷ்ய–உக்ரைன் போராக வெடித்து, இன்றளவும் நடந்து வருகிறது. இதற்கிடையே, சீனா ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்தது, அமெரிக்க ஏகாதிபத்தி யத்திற்கு அரசியல் – பொருளாதார ரீதியாகவும், சித்தாந்த ரீதியாகவும், புதிய சவால்களை முன் நிறுத்தியது.

இந்தப் பின்புலத்தில், நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர், ஸ்டொல்டென்பேர்க்கின் அறிக்கை, நேட்டோவின் விரிவெல்லையை அசாதாரணமாக விரிவாக்குவதற்கு முன்மொழியப்படுகிறது என்ப தையும், நேட்டோ, ரஷ்யாவுக்கு எதிராக மட்டுமல்ல, சீனாவுக்கு எதிராகவும் செயல்படத் திட்டம் தீட்டி உள்ளது என்பதையும் தெளிவு படுத்துகிறது.

ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நான்கு ஆசியபசிபிக் நாடுகளின் தலைவர்கள் முதல் முறையாக இந்த நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்து கொண்டது, அந்த ராணுவக் கூட்டணி ஆசியபசிபிக் நாடுகள் முழுவதும் தன் ஆதிக் கத்திற்கு உட்பட்டதாக்க முனைவதையே எடுத்துக் காட்டுகிறது. ஏற்கனவே, அமெரிக்கா, ஆஸ்திரேலியாவையும், ஜப்பானையும், இந்தியாவுடன் சேர்த்து, சீனாவை இலக்கு வைக்கும் குவாட் (Quad) எனப்படும், நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தைக் குழு அமைப்பைக் கட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா கூறி வருவது போல, நேட்டோ ஒன்றும் ‘பயங்கர வாதத்திற்கு எதிரான போரில்’ மட்டும் கவனம் செலுத்தப் போவ தில்லை. மாறாக, அவ்வமைப்பின் துணைச் செயலாளர் ஜெனரல் மிர்சியா ஜியோனா, டென்மார்க் கோபன்ஹேகன் மாநாட்டில் கூறி யதைப் போல, வல்லரசுப் போட்டியில் ரஷ்யா மற்றும் சீனா மீது, ஒருமுனைப்பட்டு பல முனைகளிலிருந்தும் தாக்குதல் நடத்தும்.

சீனாவின் எழுச்சி, சீன அணுஆயுத அதிகரிப்பு, அதிநவீன இராணுவத் தளவாடங்களில் அந்த நாடு பெரும் முதலீடு செய்து வருவது போன்றவை குறித்து நேட்டோ அமைப்பு கவனம் கொள்கிறது. காரணம், உண்மையில், அவ்வமைப்பை ஆட்டி வைக்கும் அமெரிக்க ஒற்றை துருவ எதேச்சதிகாரத்திற்கு, சீனா பெரும் சவாலாக உருவாகி யிருப்பது என்பது தான்.

**நேட்டோவுடன் இணைந்து, ஆசிய-பசிபிக் பிராந்தியம் முழுவதும் ராணுவக் கூட்டணி, ராணுவதள ஏற்பாடுகளைக் கட்டமைக்கும் அமெரிக்கத் தலைமை-யிலான முயற்சிகள் குறித்து சீனா ஆழமாகக் கவலைக் கொண்டுள்ளதாகக் கூறி உள்ளது. கடந்த மாதம், பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் பிரிக்ஸ் (BRICS) உச்சி மாநாட்டில் பேசிய சீன அதிபர் ஜி ஜின்பிங், உலக அரங்கில் மீண்டும் உருவாகியுள்ள ‘பனிப்போர் மனப்பான்மையை’ நிராகரிப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

மேலும் ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள், ரஷ்யாவை ஒடுக்கும் நோக்கில் சுமத்தி உள்ள தடையாணைகளுக்கு எதிராகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மையில், சீன வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின், ஆசியாவில் எதிர்விரோத முகாம்களை உருவாக்கும் ‘மிகவும் அபாயகரமான’ முயற்சியில் நேட்டோ ஈடுபட்டுள்ளதாக வெளிப்படையாகவே குற்றஞ் சாட்டியுள்ளார்.

மேலும், ஐரோப்பாவின் ஸ்திரத்தன்மையை ஏற்கனவே சீர்குலைத் துள்ள நிலையில், நேட்டோ கூட்டணி, ஆசியபசிபிக் பிராந்தியத்தை உள்ளடக்கிய ஒட்டுமொத்த உலகிலும் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கக் கூடாது’ என்றும் கூறியுள்ளார்.

எனவே, சீனாவுடனான பொருளாதார அரசியல் உறவுகளை பலப் படுத்துவதற்குப் பதிலாக, உலக நாடுகள் பலவும் அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டணி அமைத்து, அமெரிக்காவின் ஏகாதிபத்தியப் போக்கிற்கு பலிகடாவாகி, மோதல் போக்கை வளர்த்தெடுப்பது, பனிப்போர் மனப்பான்மையையே குறிக்கிறது. இப்போது உக்ரைன் ரஷ்யப் போரினால் உலகமே பெரும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், உலகப் போர்ச் சூழல் இந்த நிலைமையை இன்னும் மோச மாக்கும். நேட்டோ உச்சி மாநாடு, அணுஆயுத நாடுகளிடையே, உல களாவிய அணு ஆயுதப் போர் அபாயத்தையே முன்னிறுத்தி உள்ளது.

இந்த மாநாட்டில் ஐரோப்பாவின் பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய இரு நாடுகள், துருக்கியின் ஆட்சேபணையைச் சரிக்கட்டி, புதிய உறுப்பினர்களாக நேட்டோ ராணுவக் கூட்டணியில் இணைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை இணையும் பட்சத்தில் நேட்டோ உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 32 ஆக உயரும்.

“நேட்டோவின் விரிவாக்கம் உலக நாடுகளிடையே பதற்றத்தைக் குறைக்காது, மாறாக அதிகரிக்கவே செய்யும். பல சகாப்தங்களாக தீர்க்கப்படாத பிரச்னைகள் மேலும் முற்றவே இது வழி வகுக்கும். இவ்விரிவு, சித்தாந்த ரீதியான மோதல்களை மீண்டும் பற்ற வைக்குமேயானால், அது மிகவும் துரதிருஷ்டவசமானது. உலக நாடுகளுக்கிடையேயான மோதல் போக்குகள் உலகின் வளங்களை எல்லாம் உறிஞ்சிவிடும் என மேனாள் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பங்கஜ் சரண் கருத்து தெரிவித்துள்ளார்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
# இடைக் கமிட்டி மாநாடுகள்






**பெருந்துறை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்துறை ஒன்றிய 37வது மாநாடு காஞ்சிக் கோயிலில் நடைபெற்றது. சி.எம். துளசிமணி, கே.என்.பொன்னுசாமி, வி.சி.சாமிநாதன் ஆகியோர் தலைமைக் குழுவாகச் செயல்பட்டனர். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.எம்.துளசிமணி கொடியேற்றி வைத்தார். ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.குமார் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

ஈரோடு தெற்கு மாவட்டச் செய லாளர் கே.ஆர்.திருநாவுக்கரசு மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசினார். ஒன்றியச் செயலாளர் ஓ.எம். தெய்வசிகாமணி வேலையறிக்கை மற்றும் வரவு செலவு அறிக்கையை முன்வைத்தார்.

இம்மாநாட்டில் ஒன்றியச் செயலா ளராக வி.சி.செந்தில்குமாரும், ஒன் றிய துணைச் செயலாளர்களாக கே.ஆர்.தங்கவேல், ஜெ.உமாநாத் சிங், ஒன்றியப் பொருளாளராக வி.சி.சாமிநாதனும் தேர்வு செய் யப்பட்டனர். மாவட்டக் குழு உறுப் பினர் எஸ்.சின்னசாமி பொதுத் தீர்மா னங்களை முன்மொழிந்து பேசினார்.

இம்மாநாட்டில் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார்.

காஞ்சிக்கோயில் கிளைச் செய லாளர் கே.என்.பொன்னுசாமி நன்றியுரை ஆற்றினார்.

பெருந்துறை புறவழிச் சாலையில் விபத்துக்களைத் தவிர்க்க காஞ் சிக்கோயில் சாலை மற்றும் துடுப் பதி சாலை சந்திப்புகளில் மேம் பாலங்கள் அமைக்கவும், சாலை யின் இருபுறங்களிலும் சர்வீஸ் ரோடு கள் அமைக்கவும் மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைத் துறை கொள் கையளவில் ஒப்பதல் வழங்கி உள்ளது. மேலும், வாவிக்கடையில் பள்ளி செல்லும் குழந்தைகளின் நலன்கருதி உயர்மட்டப்பாலம் அமைக்கவும் ஒப் புதல் வழங்கியுள்ளது. இதற்காக தொடர்முயற்சிகளை மேற்கொண்ட திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயனுக்கு பாராட்டு தெரி வித்து இம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக் கீடு செய்து உடனடியாக செயல் படுத்த வேண்டும் என மத்திய அர சையும், தேசிய நெடுஞ்சாலை கள் ஆணையத்தையும் கேட் டுக் கொண்டும் தீர்மானம் நிறைவேற் றப்பட்டது. மேலும், பெருந்துறை சிறப்பு நிலை பேரூராட்சி மற்றும் கருமாண்டி செல்லிபாளையம் தேர்வு நிலை பேரூராட்சிகளை இணைத்து பெருந் துறை நகராட்சியாக தரம் உயர்த்த வேண்டும்.


பெருந்துறையில் உள்ள அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்து வனையை பல்துறை சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவண்ணாமலை:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை 9–வது வட்ட மாநாடு, திருவண்ணாமலை வட்டம், தச்சம்பட்டு கிராமத்தில் எஸ். திருஞானசம்பந்தன் நினைவு அரங்கில் நடைபெற்றது. தச்சம்பட்டு மெயின் ரோட்டில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகம்பம் அருகிலிருந்து, மாவட்ட செயலாளர் வே.முத்தையன் தலைமையில் ஊர்வலம் தொடங்கி மாநாட்டு அரங்கில் முடிவுற்றது. மாநாட்டு கொடியினை மாவட்ட குழு உறுப்பினர் சு.கிருஷ்ணராஜ் ஏற்றி வைத்தார். பின்பு மாநாடு பி.சேகர், பி.ஜெயராமன், எஸ்.சையத்பீர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் இரா. தங்கராஜ் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். கே.வெங்கடேசன் வட்டச் செயலாளராகவும், எஸ்.அமரேசன் துணை செயலாளராகவும், பி.ஜெய ராமன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை வாழ்த்தி பெ.அன்பு, மாநில துணை ப்பொதுசெயலாளர்,(த.க.இ.பெ) த. ராசேந்திரன் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர், சு.கிருஷ்ணராஜ் மாவட்டக் குழு உறுப்பினர் பேசினர்.

மாவட்டச் செயலாளர் வே.முத்தை யன் அரசியல் விளக்கவுரை ஆற்றி னார்.

**ராயகிரி:** தென்காசி மாவட்டம் ராயகிரி இடைக் கமிட்டி மாநாடு இரா.சமுத்திரக்கனி, வைரவராஜன், சிவகுரு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில குழு உறுப்பினர் எஸ்.வேலாயுதம் அரசியல் விளக்க உரையாற்றினார். நகரச் செயலாளர் எஸ்.சமுத்திரம் வேலை அறிக்கை முன் வைத்தார். ராயகிரி நகர செயலாளராக வே.சின்ன வேலுச்சாமி ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் மாவட்ட செயலாளர் த.இசக்கித்துரை, மாவட்ட பொருளாளர் தி.சுப்பையா, மாவட்ட குழு உறுப்பினர் எம்.எஸ்.கிட்டப்பா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



## சாதி மறுப்பு திருமண முன்னோடிகள்

# ‘குஞ்சிதம் குருசாமி’

- ப.பரமசிவம்

**தனது இளமை பருவத்தில் சாதிகளை மறந்து தனது காதலை வெளிப்படுத்திய தம்பதிகளை இந்த சாதிய வெறியும், மதவெறியும் கொண்ட சமூகம் எப்படியெல்லாம் அந்த இளம் உள்ளங்களை அழித்து கொன்றுள்ளது.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சார்ந்த முருகன் சாந்தினியையும் வெட்டிக் கொன்றிருக்கிறார்கள். அதே தர்மபுரி மாவட்டம் நாயக்கன் கொட்டாய்பட்டியில் வேறு ஜாதி பெண்ணை காதலித்ததற்க்காக அந்த பெண்ணின் குடும்பம் இளவரசன் என்ற மாணவனை கொன்று ரயில் தண்டவாளத்தில் போட்டார்கள்.

அதே போல் கௌசல்யா – சங்கர் காதலித்ததற்காக பெண்ணின் குடும்பம் சங்கரை நடுரோட்டில் வெட்டிக் கொன்றார்கள். கண்ணகி முருகேசன் கடலூரைச் சார்ந்தவர்கள். காதலித்ததால் அவர்கள் இருவரையும் வெட்டிக் கொன்றார்கள். அரியலூரைச் சார்ந்த நந்தினி சதீசை காதலித்தற்காக சதீஷ் வீட்டார் நந்தினியை வெட்டிக் கொன்றார்கள். சேலம் மாவட்டம் ஓமலூரைச் சேர்ந்த கோகுல்ராஜ் எப்படியெல்லாம் ஆதிக்கச் சாதியினர் இளைஞர்படை அமைத்து அந்த இளம்வயது கோகுல்ராஜை சித்ரவதை செய்து கொன்றார்கள்.

இதில் சங்கர் கௌசல்யா வழக்கை எந்தவிதமான எதிர்பார்ப்புமில்லாமல் வாதாடி பல ஆண்டுகளாக நடந்து வழக்கை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும், இந்த சமூகத்திற்க்கும் வெளிச்சம் போட்டுக் காட்டவும் நல்ல தீர்ப்பை வாங்கிக் கொடுத்தார் இடதுசாரி சிந்தனையுள்ள நாமக்கல்லை சேர்ந்த பொ.ரத்தினம் அவர்கள்.

ரஷ்ய புரட்சியை முன்னெடுக்க ஆரம்பத்தில் கட்சியை கட்ட மாமேதை லெனின் சைபீரியாவில் ஒரு ஏழைத்தாயின் வழக்கை எடுத்து ஆயிரக்கணக்கான மைல் சென்று அந்த தாய்க்கு பல இன்னல்களுக்கிடையில் வெற்றியை தேடிக் கொடுத்து அந்த சைபீரியா முழுதும் வெளிச்சம் போட்டுக் காட்டினாராம்.

அதுபோல் ப.பா.மோகன் ஓமலூர் கோகுல்ராஜ் வழக்கை எல்லோரும் கைவிட்ட நிலையில் அந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கறிஞராக ஆஜராகி கடுமையாக வாதாடி அந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும், சமுதாயத்தையே தட்டி எழுப்பிய நல்ல தீர்ப்பை வாங்கிக் கொடுத்தார்.

சேலம் மாநகரத்தைச் சார்ந்த ஜே.கணியன் பூங்குன்றன் பட்டதாரி இளைஞர் சேலம் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சாதி மறுப்பு திருமணம் தா.பாண்டியன் தலைமையில் செய்து கொண்டவர். தான் எப்படி சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டாரோ, அதேபோல் இதுவரை அவர் முன் கையெடுத்து 320 சாதி மறுப்பு திருமணம் செய்து வைத்துள்ளார். இதைப்போன்று சிந்தித்தால் சாதிகள் அற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.

நான் 13.06.2022ல் ஒரு திருமணத்திற்க்குச் சென்றேன். அது எனது உறவினர் வீட்டுத் திருமணம். மறைந்த தோழர். ஆறுமுகம் ஒரு கம்யூனிஸ்ட் அவர் மகனுக்கு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்டான மா.சிங்காரவேலர் பெயரை வைத்திருந்தார். அந்த சிங்காரவேலுவின் மகளுக்குத்தான் திருமணம். அது சாதி மறுப்பு திருமணம்தான். பயத்தோடுதான் அந்த திருமணவிழாவிற்க்குச் சென்றேன். இரண்டு சமூகமும் ஒற்றுமையாக மண்டபமே நிறைந்து வழியும் வகையில் எந்த சலசலப்பும் இன்றி திருமணம் நடந்தேரியது. அதைப் பார்க்க மனதுக்கு சுகமாகவும் பூரிப்பாகவும் இருந்தது.



தமிழகத்தில் பொதுவுடமை இயக்கம் பரவுவதற்க்கு முன்பே ரஷ்ய புரட்சியை மேற்கோள் காட்டி 1928ம் ஆண்டிலே பேசியும் எழுதியது மட்டுமல்லாமல் லெனினைப் போல் நாமும் புரட்சியில் இறங்க வேண்டும் என்றும் அப்பொழுதுதான் சமூக மாற்றத்தையும் சாதியையும் ஒழிக்க முடியுமென்றும் முழக்கமிட்டவர்தான் குத்தூசி குருசாமி. கொள்கைளை வாய்கிழிய பேசுபவர்களை நான் எப்போதும் நம்புவதில்லை. அவைகளைச் செயல்படுத்தும் காரியத்திதை நடத்திக் காட்டுபவர்களைத்தான் நான் அதிகம் நேசிப்பவன் என்ற தனது சொல்லுக்கேற்றவாறு தனது திருமணத்தை நடைமுறைப்படுத்த விரும்பிய குருசாமி முதலில் விதவை திருமணம் செய்துகொள்ள விரும்பி 20.01.19ல் குடியரசு பத்திரிக்கையில் விளம்பரமும் செய்துள்ளார். அந்த காலத்தில் அதற்கு எந்த வரவேற்பும் கிடைக்கவில்லையாம்.

பெரியார் தலையிட்டு நீ எதிர்பார்த்தபடி விதவைப் பெண்கள் துணிந்து கல்யாணத்திற்கு ஒத்ததுக்கொள்ள மாட்டார்கள். ஒத்தக் கொள்ளவும் இந்த சமுதாயம் விடாது. அதனால் நீ மனதை மாற்றிக் கொண்டு சாதி மறுப்பு திருமணம் செய்துகொள் என்று அறிவுரைக் கூறியுள்ளார். 1929ல் சாதிவெறியும் பணத்திமிரும் பிடித்த இந்த சமூகத்தில் இதுவரை எவரும் செய்யத் துணியாத ஒன்றை செய்யத் துணிந்தார். சாதிமறுப்பு மணம் செய்து கொள்ளும் விருப்பத்தை நண்பர்களுக்கும் பெரியாருக்கும் தெரிவித்துள்ளார்.

**சொல்லிய வண்ணம் செய்யத் துணிந்த குருசாமி எல்லா நிலைமைகளையும் உணர்ந்துதான் சாதிமறுப்புமணம் செய்து கொள்வதென்று முடிவெடுத்துள்ளார். ஏளனத்திற்கோ, எதிர்ப்புக்கோ அஞ்சவில்லை. உற்றார் உறவினர்கள் எவ்வளவோ எடுத்துச் சொன்னார்களாம். தடுத்து பார்த்தார்கள் பயமுறுத்தியும் பார்த்துள்ளார்கள். குருசாமி எதற்க்கும் அசையவில்லையாம். கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்துள்ளார்.**

1929ல் உயர்தரக் கல்வியும் கல்லூரி கல்வியும் பெறுவது என்பது இந்திய நாட்டிலுள்ளவர்களுக்கு அபூர்வமாக இருந்த காலம். அதுவும் தமிழ்நாட்டில் அபூர்வம். பெண் ஒருவரை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் கூறியதன் பேரில் ஈ.வெ.ரா.பெரியார், குருசாமிக்கு ஒரு பட்டதாரிப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தார்.

சுப்பரமணிய பிள்ளை பரம வைதீகர் அப்படியிருந்தாலும் தனது பெண் பிள்ளைகளை ஆண்பிள்ளைகளுக்கு நிகராக படிக்க வைத்துள்ளார். மூத்த மகள் குஞ்சிதம் எஸ்.எஸ்.எல்.சி தேர்வில் பள்ளியில் முதல் தரமான மதிப்பெண்கள் வாங்கி தங்கபதக்கம் பரிசு பெற்றவர் 1929ல் பி.ஏ. இறுதியாண்டில் படித்துக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஈ.வெ.ரா.பெரியாரும், இராமாமிர்தம்மாளும் சுப்பிரமணியபிள்ளையை பார்த்து குருசாமிக்காக பெண்கேட்டு போனார்கள். குருசாமியின் எழுத்து அறிவை பார்த்து பெண் கொடுக்க சம்மதித்தார் சுப்பரமணியபிள்ளை.

1929டிசம்பர்8ல் ஈரோட்டில் ஈ.வெ.ரா தலைமையில் அவர் வீட்டிலேயே திருமணம் நடைபெற்றது. கல்யாணத்திற்கு சிலமணி நேரம் இருக்கும் பொழுது குருசாமி தங்கை கணவரிடமிருந்து எனது மனைவி இறந்துவிட்டாள் என்று ஒரு தந்தி வந்துள்ளது. அதற்கு குருசாமி அது கல்யாணத்தை தடுத்து நிறுத்த வந்த பொய்யான செய்தியாகும். பெரியார் திருமண நடைமுறையை விளக்கி பேச குருசாமியும் குஞ்சிதமும் உறுதிமொழி எடுத்துக் கொண்டு திருமணம் செய்து கொண்டார்களாம். குருசாமி இறந்து விட்டதாக கூறி அழுது, எண்ணெய் முழுக்குவரை முழுகி அவரை அவமானத்திற்க்கு உள்ளாக்கியுள்ளார்கள்.

அவர் உறவினர்கள் வீட்டில் நல்லது கெட்டது நடந்தால் அந்த இடத்தில், இவரை பற்றியே பேச்சு, என்னவென்று, சாதிக் கெட்டவன் என்று. அழையா விருந்தாளியாக புதுமண தம்பதிகள் பாட்டி வீட்டிற்க்குச் சென்றுள்ளார்கள். புதுமண தம்பதி களை உறவினர்கள் வெளித் திண்ணையில் வைத்துதான் சாப்பாடு போட்டுள்ளார்களாம். சாப்பிட்ட பிறகு குருசாமியே தனது மனைவியின் இலையையும் சேர்த்து எடுத்துவிட்டு அந்த இடத்தில் தண்ணீர் தெளித்து சாணம் போட்டு மொழுகிவிட்டு வருவாராம்.

திருமணம் முடிந்த சிலநாட்களில் குருசாமி குஞ்சிதம் நாகர் கோயில் போகும் வழியில் மதுரையில் இறங்கியுள்ளார். கல்லூரி மாணவராக இருந்த கே.டி.கே.தங்கமணி தலைமையில் மணமக்கள் வாழ்கவென்று கோஷம் போட்டு வரவேற்றார்களாம். கே.பாலதண்டாயுதம் அவ்வை டி.கே.சண்முகம் போன்றவர்கள் குருசாமியை உதாரணமாகக் கொண்டு சாதிமறுப்பு திருமணம் செய்து கொண்டார்களாம். பாலதண்டாயுதம் குடும்பம் மிகுந்த முருக பக்த ஐதீக குடும்பம். அதனால்தான் முருகனுடைய வேல் ஞாபகார்த்தமாகதான் பாலதண்டாயுதம் என்றே பேர் வைத்துள்ளார்கள். பாலதண்டாயுதம் எனது உறவினர்களுக்குதான் எனது சாதிமறுப்பு திருமணம் அருவருப்பு, மற்றவர்களுக்கு அதைப் பற்றிப் பெருமையே, குருசாமி சாதிமறுப்புத் திருமணம் செய்துகொண்டாரே நல்லாதானே அவர் குடும்பம் இருக்கிறது. அதனால் நான் சாதிமறுப்பு திருமணம் செய்வதால் ஒன்றும் ஆகாதென்று கூறியுள்ளார்.

குஞ்சிதம் குருசாமி 1929ல் திருவாங்கூர் சமுதாய சீர்திருத்த மாநாட்டில் இருவரும் பேசியுள்ளார்கள். அந்த மாநாட்டில் சி.அச்சுதமேனன் ஓய்வு பெற்ற நீதிபதி மன்னத்து பத்மநாபன் போன்ற முக்கிய தலைவர்களெல்லாம் இவர்கள் இருவரின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்து வாழ்ந்துக் கூறியுள்ளனர்.

எனவே, சாதிமறுப்பு திருமண தம்பதிகளுக்கு நாமும் வாழ்த்து கூறுவோம்.

தொடர்புக்கு : **94429 95040**

# ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட வேலை நாட்களை 200 ஆக உயர்த்த ராகுல் காந்தி கோரிக்கை

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தி மாகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வழங்கப்படும் வேலை நாட்கள் ஆண்டுக்கு நூறு நாளாக இருப்பதை 200 ஆக உயர்த்த வேண்டும் என கேரள மாநிலம் வயநாட்டில் நடந்த நிகழ்வில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட ஆண்டுக்கு நூறு நாள் வேலை என்பது கால வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு தக்கபடி மாற்றியமைக்க வேண்டும் என்பதை விவசாயத் தொழிலாளர் அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. கிராமப் புறங்களில் உள்ள உடல் உழைப்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரத் திட்டமாக உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை பாஜக ஒன்றிய அரசு ஆண்டுக்கு, ஆண்டு குறைத்து, திட்டத்தை சிதைத்து வருகிறது.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

இந்த நிலையில் திட்டத்தை வலிமைப்படுத்தி, விரிவுபடுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி வேலை உறுதியளிப்புத் திட்ட வேலை நாட்களை 200 ஆக உயர்த்தி, குறைந்த பட்ச ஊதியம் ரூ.400 வழங்க வேண்டும் என்று கூறியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுளுள அறிக்கையில் கூறியுள்ளார்.

## அரசு மருத்துவர்கள் போராட்டம்:-

# முதல்வர் தலையிட்டு தீர்வு காண வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

அரசு மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் லட்சுமி நரசிம்மன் கடந்த ஆட்சி காலத்தில் அலைக்கழிக்கப்ட்டதால் உயிரிழந்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. மருத்துவர்கள் முன்வைத்துள்ள நியாயமான கோரிக்கைகளை முந்தைய அரசு நிறைவேற்றாமல் போராட்டத்தை அடக்குமுறை தாக்குதல் நடத்தி முடிவுக்கு கொண்டு வந்தது.

மருத்துவர்களின் போராட்டக் களத்திற்கு சென்று ஆதரவுக் குரல் கொடுத்த எதிர்கட்சித் தலைவர், முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஓராண்டு முடிந்து விட்டது. இன்னும் அரசு மருத்துவர்கள் கோரிக்கைகள் மீது போராட்டம் தொடர்கிறது. அரசு மருத்துவர்களின் உரிமைக்கான சட்டப் போராட்டக் குழுத் தலைவர் டாக்டர் எஸ். பெருமாள் பிள்ளை தலைமையில், மேட்டூர் அருகில் உள்ள மல்லு வாடி என்ற ஊரில், மறைந்த தலைவர் டாக்டர் லட்சுமி நரசிம்மன் நினைவிடத்தில் மருத்துவர்களும், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் காலவரையற்ற உண்ணா விரதம் மேற்கொண்டு வருகின்றனர். ஜனநாயக உணர்வுகளுக்கு மதிப்பளித்து வரும் மக்களாட்சி நடைபெறும் தமிழ்நாட்டில், மருத்துவர்கள் கோரிக்கைகள் மீது விரைந்து தீர்வு காணப்படும் என நம்புகிறோம். மருத்துவர்கள் நடத்தி வரும் உண்ணாநிலைப் போராட்டத்தின் மீது முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

## குடிதண்ணீர் உரிமையைப்

# பறிக்கும் செயல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

குடிநீர் தேவை உள்பட வீட்டு உபயோகத்திற்காக கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகளை பயன்படுத்துவோர் உட்பட நிலத்தடி நீர் எடுப்போர் அனைவரும் உடனடியாக மத்திய நிலத்தடி நீர் ஆணையத்தில் ஜூன் 30 க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இயற்கையின் கொடையும், அனைவருக்கும் பொதுவான அத்தியாவசியப் பொருளான தண்ணீர் உயிரின வாழ்விற்கு இன்றியமையாத் தேவையாகும். ஆனால், ஒன்றிய அரசில் கார்ப்பரேட் ஆதரவுக் கொள்கை காரணமாக குடி தண்ணீர் விற்பனை பண்டமாகிவிட்டது.

சுற்றுச் சூழலை மாசுபடுத்தி வரும் பெரு நிறுவனங்களால் மக்கள் குடி தண்ணீரையும் அன்றாடம் காசு கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மத்திய நிலத்தடி நீர் ஆணையர், சொந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கும் கிணறுகளை பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிட்டிருப்பது, அரசியல் அமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை பறிக்கும் படுமோசமான செயலாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், மத்திய நிலத்தடி நீர் ஆணையத்தின் உத்தரவுப் பட்டியலில் “வீட்டு உபயோகத்திற்கு நிலத்தடி நீர் பயன்படுத்துவோர்” என்பதை பட்டியலில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என கட்சியின் மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# சங்கே முழங்கு!



## மாநில – விளையாட்டு

– ஞா.சிவகாமி

தமிழ்நாட்டில் வேறு மாநிலத்தவர் பலர் ஆளுநராக பதவி வகித்துள்ளனர். ஆனால், பெரும்பாலானோர் எந்தவிதமான சர்ச்சைக்குரிய, வாதத்திற்குரிய கருத்துக்களைத் தெரிவித்ததில்லை. விதிவிலக்கு உண்டு. மறுக்கவில்லை. ஆனால், இன்றைய ஆளுநரின் பேச்சு தான் சார்ந்த, தான் வளர்ந்த, தனக்குப் பிடித்த கருத்துத் திணிப்பே. தமிழ்நாட்டில் பேசுவது வியப்பே. பொதுவாக இப்படி ஆளுநர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர்களாகவே இருப்பர்.

ஆனால், இன்றைய ஆளுநர் கூறுகிறார் "அய்யப்பன் சேவை நாட்டின் சேவை"யாம், இதில் சந்தேகப்படக் கூடாதாம். ஏனெனில் இந்து ராஷ்டிரா, பாரத், முனிகளாலும், ரிஷிகளாலும், வேதங்களின், உண்மைகளின் அடிப்படையில் உண்டாக்கப்பட்டதாம்!

சனாதன தர்மமே இந்த பாரதத்தை உருவாக்கியதாம் இப்படி பேசுகிறார்.

இந்தியா என்பது பன்முகத் தன்மை கொண்ட வேற்றுமையில் ஒற்றுமையான நாடு. இதை இல்லை என்று பட்டென, சட்டென மறுக்கிறார். சனாதன தர்மம் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முன் இருந்ததாம். இது இந்தியாவிற்கு மட்டுமல்ல, உலகில் உள்ள அத்தனை மனிதர்களுக்காகவும்தான் இந்த சனாதன தர்மம்! சாதிகளே இல்லாத நாடுகள் உலகில் எத்தனை நாடுகள் இருக்கின்றன? கேட்டு அல்ல; படித்து தெரிந்து கொள்ள வேண்டும்.

**மதம் இருக்கலாம், எம்மதமும் சம்மதம்தான் தமிழ்நாட்டில்! தமிழ்நாடு ஆதிகாலத்திலிருந்தே யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கொள்கையுடைய நாடு. வந்தாரை வாழவைக்கும் நாடு. நான் டெல்லி சென்றால் என்னை மதராசி என்கிறார்கள். வட நாட்டினர் தமிழ்நாட்டிற்கு வேலை தேடி வந்தால், இருந்தால் இங்கே யாரும் இவர் குஜராத்தி, டெல்லிக்காரர்... ஒடிசாக்காரர் என்று யாரையும் ஒதுக்காது, வாழவைக்கும் நாடு தமிழ்நாடு.**

**spine of bhail is sanatana dharma** என்கிறார். பாரதத்தின் முதுகெலும்பே சனாதனம் தானாம்! எங்க ஊரிலே ஒரு பழமொழி சொல்லுவாங்க 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளிலே தெரியும்'! இந்த திரிக்கிற வேலை வேண்டாமே! ஒரு மனிதனுக்கே முதுகெலும்பு அல்லது தண்டுவடம் மிகவும் முக்கியம். இது முறிந்தால், வளைந்தால் கூன் விழும். கூனிப் போவர். ஏன், உடம்பே துண்டு துண்டாய் போகும். தண்டுவடம் தான் நம் உடலை வடம் பிடித்து இழுத்து வாழ்க்கையை நடத்தத் தேவை.

இந்து ராஷ்டிரா, பாரத்... கிராம ராஜ்ஜியம்... இதையெல்லாம் யார் உருவாக்கினார்கள்?

தமிழ் மன்னர்கள் சேரனும், சோழனும், பாண்டியனும் ஆண்ட நாடு தமிழ்நாடு. தமிழ்நாடு... பிரிக்கப்படாத அன்றைய மெட்ராஸ் பிரசிடென்சியே திராவிட நாடு. தெலுங்கு, தமிழ், மலையாளம், கன்னடம் எல்லாம் திராவிட மொழிகளே! கணவாய் வழியே வந்த வந்தேறிகளின் வழிகாட்டல்களில் அன்றைய மன்னர்கள் கட்டியதே கோவில்கள். தமிழில் கோ என்றால் மன்னன் என்று பொருள். இல் என்றால் வீடு. மன்னனின் வீடு தான் இன்று மந்திரம் தந்திரம் சொல்லும் இடமாகிப் போனது!

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சொல்கிறது. அழுத்தி ஆழமாகச் சொல்கிறது. இந்தியா மதசார்பற்ற நாடு என்று. ஆனால், தர்மத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லையாம்? இது என்ன புது தர்மம்! வண்ணமயமாக, அமைதியாக வாழ்ந்த நாட்டில் வர்ணத்தைப் பூசியவர்கள் இந்த, இந்து தர்மம் பேசும் வந்தேறிகள்! மன்னிக்கவும் புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கும், நிலம் கொடுத்து வாழ வைப்பதே தமிழர் மரபு. இதுவே தமிழர் அறம்! ஏன் மறம்... வீரம் என்பேன்!

**அரசின் கொள்கைகளே சட்டமாகின்றன. அந்த கொள்கையை, தேசிய கல்விக் கொள்கையை உயர்த்திப் பிடிக்கிறார். ஐந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பில் கட்டாயத் தேர்வு எழுதினால் என்னவாகும்? மாணவர்களின் இடைநிற்றலை அதிகமாகும். இந்தியாவில் படிக்காதோர் எண்ணிக்கை ஏராளமாகும். 'ஓ' தாராளமயமாக்கலின் வெளிப்பாடோ இந்தக் கல்வி? அதாவது சிலர் படிக்கலாம்; பலர் படிக்கக் கூடாது! இதென்ன தர்மம்?**

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

பிறப்பு அனைவருக்கும் ஒரே தன்மையுடையது. செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு காண்பது கூடாது. இதை அய்யன் திருவள்ளுவர் சொல்லுகிறார்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

இதுவும் திருக்குறள்தான்.

எனவே, பேசுவதற்கு முன், கருத்துக்களின் உண்மைத் தன்மை, பேச்சு நன்மை தருமா? தீமை தருமா? என்று எண்ணி ஆராய்ந்து பேசுவதே கற்றறிந்தோருக்கு அழகு. அதுவே மனிதர்களிடம் பழகும் நற்பண்பு என்பேன்.



-சி. பாஸ்கர்

# துயர பூமியில் துச்சாதனர்கள்!




**'பாரதியார் பாஞ்சாலி சபதத்தில்' பாஞ்சாலியை துச்சாதனன் கூந்தலைப்பற்றி அராஜகமாக இழுத்து வருவான். அரசவையில் கூடியிருப்பவர்கள் உதட்டளவில் வருத்தப்படுவார்கள். ஒருவரேனும் உரத்த குரலில் அந்த அநீதியை கண்டிக்க முன்வர மாட்டார்கள்.**

நெட்டை மரங்களாக நெஞ்சுரமற்று நிற்கும் அவர்களின் அனுதாபத்தை பெட்டை புலம்பல் பிறருக்கு துணையாகுமா? என சாடுகின்றான் பாரதி.

இன்று இதே காட்சி வளைகுடா நாடுகளில் ஒன்றான சிரியாவில் அறங்கேறி வருகிறது. இளம்பெண்கள் பெற்றோர் முன்பே மானபங்கப்படுத்தப்பட்டு கடத்தப்படுகிறார்கள். கணவர் முன்னே மனைவியை களங்கப்படுத்தும் அக்கிரமம் நடக்கிறது. குழந்தைகள் முன்னே பெற்றதாய் கொடுமைப்படுத்தப்படுகிறாள்.

ஏகாதிபத்திய நாடுகளின் கூலிப்படைகள், அரசுக்கு எதிரான கலகக்காரர்கள், அரச ஆதரவுப் படைகள் என அனைவரும் நடத்தும் கொடுமைகளால் அப்பாவி மக்கள் படும் துயரரை இரத்தக் கண்ணீரால் தான் தீட்டி விளக்க முடியும். இதற்கெல்லாம் மேலாக இஸ்லாமிய அரசை உருவாக்கப் போகிறோம் என்று கலகம் செய்யும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பெண்களுக்கு எதிரான குற்றம் சொல்லி முடியாது. போதாக்குறைக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய வரும் தொண்டு நிறுவனங்களின் ஊழியர்களும், தங்கள் பங்கிற்கு பெண்களை பலாத்காரம் செய்கிறார்கள்.

அந்தப் பகுதி பூமிக்கு வாய் மட்டும் இருந்தால் தன் துயரத்தை – துச்சாதனர்களின் துஷ்டத்தனத்தை கூறி கதறி அழும். பெண்களை கண்போல் காத்து கௌரவமாக நடக்க வேண்டும் என போதித்த நபி பெருமானின் பிரதேசத்தில் இந்த அநியாயங்கள் காட்டாறு போல ஓடுகின்றது. ஐ.நா. சபையில் மனித உரிமை ஆணையம் இருக்கிறது. மகளிர் உரிமைகளை காக்க அமைப்பு இருக்கின்றது. உலகம் முழுவதும் மகளிருக்கான அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் இன்று வரை துயரச் சூறாவளி அந்த மக்களை வாட்டி வதைப்பதில் ஏறுமுகமாகவே தொடர்ந்து வருகிறது.

அங்கிருந்து தப்பிச் சென்ற பெண்மணி ஜெர்மன் நாட்டில், "சிரியா பூவுலகின் நரகம்" என்று குறிப்பிட்டாள். அகதிகளாக அண்டை நாடுகளான துருக்கி, ஜோர்டான், கிரீஸ் போன்ற நாடுகளுக்கு தப்பிச் செல்லும் முயற்சியில் கடலில் மூழ்கி இறப்பவர்கள் ஏராளம். 'ஐலான்' என்ற அந்த தேசத்து சிறுவன் சடலமாக கடற்கரையில் கிடந்த காட்சி உலகத்தின் மனசாட்சியையே உலுக்கியது. பிரபாகரனின் மகன் சாகப்போவது தெரியாமல் பிஸ்கட் சாப்பிடும் காட்சியைப் போல் இருந்தது. கருணையின் வடிவமாகத் திகழ்ந்தவர் நபிகள். அவரின் துணைவி கதீஜா அம்மையார் ஒரு விதவை. அவரை மறுமணம் புரிந்தார். தன் போராட்டத்தில் துணை நின்ற இலட்சிய வீரர்கள் பலர் மாண்டு போனார்கள். அவர்களின் மனைவிமார்கள், இளம் கைம்பெண்களாக துயருற்றனர். அப்போது தன் சகதோழர்களை அழைத்து அப்பெண்களை மறுமணம் செய்து கௌரவமாக வாழ்வு தருமாறு கட்டளையிட்டார். தன் தலைவரின் ஆணைப்படியே நடந்து ஒரு சமுதாயப் புரட்சியை நிகழ்த்தினார்கள்.

நபி பெருமான் காலத்தில் ஆண்கள் – பெண்கள் இருபாலருமே அடிமைகளாக இருந்துள்ளார்கள். அரேபிய மண் அவர் கட்டுப்பாட்டில் வந்தபோது, அடிமை முறையை அடியோடு ஒழித்தார். இந்த புரட்சிகர நடவடிக்கை தான் அவருக்கு எதிரான பெரும் பகையாக மூண்டது. அதனை வெற்றிகரமாக, மக்கள் ஆதரவோடு முறியடித்தார். அவர் சந்தித்த அதே பகைமையை மனிதருள் மாணிக்கம் ஆபிரகாம் லிங்கன் தன் மண்ணில் அடிமைமுறை ஒழிப்பின் போது சந்தித்தார்.

முப்பெரும் மதங்களை உருவாக்கிய தீர்க்க தரிசிகள் முறையே கௌதம புத்தர், இயேசு கிறிஸ்து, நபிகள் நாயகம். முதலாமவர் இல்லறம் துறந்து துறவியானார். இரண்டாமவர் சன்னியாசியாகவே வாழ்வைத் தொடங்கியவர். நபிகள் நாயகம் சாதாரண மனிதனாக, எளிமையாக வாழ்வைத் தொடங்கினார். மெய்ஞான, ஆன்மிகத் தேடலை துவங்கி ராஜபாட்டையில் முன்னேறி மனிதகுலத்திற்கு வழிகாட்டிய மகானாக ஏற்றம் பெற்றார். எனவே, அவரின் போதனைகள் வாழ்வியலின் எதார்த்தத்தையும் உள்ளடக்கிய ஒளி விளக்காக இருந்தது. "உழைப்பவன் வியர்வை உலர்வதற்கு முன்பே அவன் ஊதியத்தைக் கொடு" என்றார்.

அவரின் ஜீவ காருண்யம் பரந்து விரிந்தது. ஒருமுறை ஒரு தடாகத்தில் அவர் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு தேள் அவரைக் கொட்டியது. அதைப் பொருட்படுத்தாமல் எடுத்து விட முயன்றார். அந்த தேள் அவரை மீண்டும் மீண்டும் கொட்டியது. அப்போது அவரின் தொண்டர்கள் இந்த முயற்சியை கை விடுங்கள் என்றனர். "அது தன் தீய குணத்தை கைவிடாமல் உறுதியாக இருப்பது போல், நான் என் நல்ல குணத்தில் உறுதியாக இருக்கிறேன்" என்றார்.

ஒருமுறை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அதுசமயம் அவரின் துண்டில் ஒரு பூனையும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. அவர் விழித்துப் பார்த்தார். அந்தப் பூனையின் உறக்கம் பாதிக்கக் கூடாது என நினைத்தார். தன்மேல் துண்டில் பூனை படுத்திருந்த பகுதியை மட்டும் கத்தியால் வெட்டினார். இவ்வித செயல்கள் மூலம் அவர் வெற்றி வாகை சூடி ஒட்டுமொத்த அரேபியாவும் அவர் காலடியில் விழுந்தது. அவரை எதிர்த்தவர்கள் சரணடைந்தார்கள். அனைவரையும் பரிவோடு மன்னித்து, அறிவுரை கூறி அரவணைத்துக் கொண்டார்.

**அவர் வாழ்ந்து காட்டிய புண்ணிய பூமியில் இஸ்லாமியர்கள் ஜியா, சன்னி என்று இரு பிரிவாக நின்று சகோதர யுத்தம் நடத்துகின்றனர். தங்களது உயிரையும் & உதிரத்தையும் அநியாயமாக பலி-யிடுகின்றனர். மசூதியில் தொழுகை நடத்தி, ஆன்மிகத்தை மேம்படுத்தி, இறை உணர்வை உள்வாங்க, நீங்காத மார்க்கமாக நபிகள் போதித்தார். ஆனால், தீவிரவாதிகள் மசூதிகளிலேயே வெடிகுண்டு வைத்து அப்பாவி மக்களை படுகொலை செய்கிறார்கள். அரேபிய பிரதேசத்தில் ஒரு விடியலை ஏற்படுத்தும் என்று உலகமே எதிர்பார்த்த 'அரேபிய வசந்தமும்' அடுத்தடுத்து முன்னேறி செல்லாமல் நீர்த்துப் போய்விட்டது.**

அந்தப்பகுதி இப்படியே துன்பச் சகதியில் உழன்றால்தான் தாங்கள் அதன் எண்ணெய் வளத்தை கொள்ளையடிக்க முடியும் என ஏகாதிபத்திய நாடுகள் திட்டமிடுகின்றன.

நபிகளின் முக்கியக் கொள்கை சமூகத்தில் அன்பு தோய்ந்த சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும் என்பதே. அதை உணர்ந்த அனைத்து நாடுகளும் ஒன்றிணைவது அவர்களுக்கு மட்டுமல்ல, உலகமே நிம்மதியாக இருக்கும். குறைந்தபட்சம் ஒவ்வொரு நாடும் ஜனநாயக வழிமுறைக்கு திரும்பினால் மக்கள் மனநிறைவோடு வாழ்வார்கள். ஏக இறைவன், ஒரே மதம், ஒரே வேதம் திருக்குரான். ஆகவே, நபி நாயகம் காட்டிய மறப்போம், மன்னிப்போம் என்ற தாரக மந்திரத்தை கையிலெடுக்க வேண்டும். சொல்லொன்னா துயரமடையும் அந்த மக்களை ஒன்றிணைத்து வழிநடத்த துருக்கியின் தந்தை என போற்றப்படும் கமால் பாட்சா – எகிப்து அதிபராக இருந்த நாசர் போன்ற சீலர்கள் தேவைப்படுகிறார்கள்.

குணத்தில் குன்றாகத் திகழ்ந்த நபிகள் மனைவி கதீஜா அம்மையார் தன் கணவனுக்கு உற்ற தோழனாக, அமைச்சராக, அன்னையாக வாழ்ந்து காட்டினார். பெண்கள் எப்படி போற்றிக் காக்க வேண்டியவர்கள் என்பதை நபிபெருமான் தன் மனைவியிடம் இருந்து கற்றுக் கொண்டார். இனியாவது சிரியா நாட்டில் நடக்கும் பெண்களுக்கு எதிரான அக்கிரமங்களை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். ஐந்து கண்டத்திலும் உள்ள மகளிர் அமைப்புகள் ஒன்று திரண்டு இயக்கம் நடத்தி இந்த அநீதியை வீழ்த்த வேண்டும்.

தொடர்புக்கு: **96007 23726**

# இல்லாத ஊருக்குப் போகாத வழிகாட்டும் அக்னிப் பாதை



- டாக்டர் யுகல் ராயலு

**சில வடஇந்திய மாநிலங்களில் இராணுவ ஆளெடுப்பு முகாம்கள் 'விழா கொண்டாட்ட நேரம்'. தகுதித் தேர்வுகளுக்குக் கலந்து கொள்ளச் செல்லும் இளைஞர்களைக் கிராமத்துப் பெரியவர்கள் வாழ்த்துவார்கள். கிராமத்துப் பெண்கள் தங்கள் மகன்களை நல்வாழ்த்துக் கூறி நெற்றியில் திலகமிட்டு அனுப்புவார்கள்.**

இராணுவ வீரர்கள் தங்கள் கிராமங்களுக்கு மதிப்பை மட்டுமல்ல, செழிப்பு மற்றும் வளர்ச்சியையும் கொண்டு வருகி றார்கள். கீழே தென்னிந்தியாவிலும் சில பகுதிகளில் வழக்கமாக இராணுவத்திற்கு ஆளெடுப்பு நடக்கிறது.

இவை அனைத்தையும் அப்படியே மாற்றிவிட்டது என்டிஏ அரசின் சமீபத்திய முப்படைவீரர்கள் ஆளெடுப்பு முறை உத்தரவு. அவர்களது எல்லாத் திட்டங்களையும்போல இந்தத் திட்டமும் பெரும் கூச்சல் சப்தத்துடன், ஆனால் உள்ளே உருப்படியாய் ஒன்றும் இல்லாமல், வந்துந்துள்ளது.

புதிய திட்டத்தை 'அக்னிபத்' என்றழைக்கிறார்கள், நெருப்பின் பாதையாம்! அப்பெயர் இந்து தத்துவத்திலிருந்து வந்தது, கடினமானது எனினும் புனிதமான பாதை என்று பொருள்படும். இந்தப் பாதையில் செல்ல ஆள் எடுக்கப்பட்ட இளம் வீரர்கள் "அக்னிவீர்", நெருப்பு வீரர் என்று பெயர் பெறுவர்! அனைத்தையும் ஒரு பிரச்சாரமாகச் செய்யும் அரசின் தனித்துவமான சிறப்பு அது, எதைச் செய்தாலும் முதலில் அது பற்றி வானளாவக் கூரைமீது ஏறிக் கூச்சலிடு!

இம் மாபெரும் தேசத்தின் நகரங்கள், கிராமங்களிலிருந்து பலபலப் பத்தாண்டுகளாக வீரர்கள் இராணுவத்திற்கு எடுக்கப் பட்டார்கள். நமது வீரர்கள் தங்கள் முன்னுதாரணமான தியா கங்கள் மற்றும் 'வில்லுக்கு விஜயன்' ஆக உச்சபட்ச வீரம் இவற் றால் தங்களின் ஆகச் சிறந்த சேவைகளைத் தாய்நாட்டிற்கு அளித்து வருகிறார்கள்! இருப்பினும் மிகுந்த தன்னடக்கத்துடன் அவர்கள் தங்களைத் தேசத்தின் சாதாரண குடிமக்கள் என்றே அழைத்துக் கொண்டனர். மேலும் நன்றி உணர்வு பொங்கும் நாடு இந்த வீர மகன்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை இறுதி வரை கவனித்துக் கொண்டது. வீரத் தியாகிகளின் குடும்பங்களை அரசு ஓய்வூதியம் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கி கவனித்துக் கொண்டது. நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பம்போல வாழ்ந்தோம். ஆனால் இப்போது அப்படி அல்ல!

மோடி அரசு மிகக் கறாராகச் சொல்கிறது, அக்னிவீர்களுக்குப் பென்ஷன் இல்லை! அவர்களது அனைத்துத் தனியார் மயத் திட்டங்கள்போலவே பாஜக சொல்கிறது, "வீரர்களின் நலவாழ்வு அல்லது அவர்களுடைய குடும்பத்தினரின் நலவாழ்வு"க்கு பட்டை நாமம். 'உங்களை நீங்களே பாதுகாத்துப் பார்த்துக் கொள் ளுங்கள்', என்பது புதிய அரசு ஜெபிக்கும் மந்திரம்.

**தாறுமாறாக, தலைகீழான திட்டம்**

ஆயுதங்களின் வலிமையால் மட்டுமே ஓர் இராணுவம் வெற்றி பெறுவதில்லை. அது அவ்வாறாயின், உலகின் எல்லா இராணு வங்களின் செயல்பாடுகளும் அதன் திறனைப் பொருத்து ஒன்றாய் இருக்கும். ஆனால் பிறகு இராணுவம் ஒரு போரில் வெல்வது, அதன் வீரர்களின் உறுதிப்பாட்டின் பலம் மற்றும் இலட்சிய உற்சாக மட்டங்களைப் பொருத்தே சாத்தியமாகிறது. வீரர்களின் அந்தப் பண்பு புதிதாக ஆளெடுக்கப்பட்ட இளைஞர்களுக்கு அளிக்கப்படும் இரண்டு ஆண்டுகளுக்கும் அதிகமாக நீளும் சோர்விலாத பயிற்சியால் கைவரப்படுவது.

அக்னிபத் திட்டம் முதலில் நான்கு ஆண்டுக்கு மட்டுமே ஆனதால், முறையான பயிற்சி அளிக்கப்படாத நிலையில், வீரர்களின் இலட்சிய உற்சாக மட்டம் மற்றும் உறுதிப்பாட்டைக் குறித்துப் பல நிபுணர்களும் கவலை தெரிவிக்கின்றனர். ஓய்வு பெற்ற லெப்டினட் ஜெனரல் டி.எஸ். ஹூடா, 2022 ஜூன்24 தேதியிட்ட தி இந்து நாளிதழ் பேட்டியில் தனது கவலையை வெளிப் படுத்தினார்: "நான்கு ஆண்டுகளுக்கு மட்டுமே படையில் சேரும் இளைஞர்கள், இராணுவப் பணியைத் தங்களின் எதிர்கால வாழ்விற்குப் படிக்கல்லாகக் கருதும் சாத்தியமே இருக்கிறது; அப்படிப்பட்ட இளைஞர்களிடம், இராணுவத்தில் நிரந்தரமாகப் பணியாற்றிய, பணியாற்றிவரும் வீரர்களிடம் நாம் பார்க்கும் சுயமரியாதை தன்னம்பிக்கை மற்றும் இலட்சிய உற்சாக மட்டங்களின் பண்புகள் எப்படி இருக்க முடியும்?"

இதற்கு முன் இளைஞர்கள் வாழ்நாள் முழுவதற்குமாக இராணு வத்தில் சேர்ந்தார்கள். இராணுவ நிர்வாகத்தின் நலவாழ்வு வழங்கு அமைப்பின் உறுதியான ஆதரவு பின்னணியில் இருக்க, நெஞ்சுரம் மிக்க படைவீரர்கள் தங்கள் இன்னுயிர்களைத் தாய் மண்ணின் சேவைக்காக அர்ப்பணிக்க ஒரு கணம்கூட தயங்கு வதில்லை. இப்பண்பு, உச்சபட்ச அர்ப்பணிப்புமிக்கப் பற்றுறுதி மற்றும் தலைச்சிறந்த தொழில்நுட்பப் பணித் திறனை இந்தியத் தரைப் படை, கப்பல் மற்றும் வான் படைகளுக்குக் கொண்டுவந்து சேர்த்தது. தேசம் தனது பாதுகாப்பு வீரர்களைக் கவனித்துக் கொண்டது, வீரர்கள் தங்களின் ஆகச் சிறந்த சேவையைத் தேசத்திற்கு அளித்தனர்.

அக்னிபத் திட்டம் நான்கு வருடங்களுக்கான ஒப்பந்தம் போன் றது. புதிதாகச் சேர்ந்தவர்கள் சுமார் நான்கு ஆண்டுகளுக்குப் பட்டாலியன் அல்லது கமாண்டர் குழுக்களின் மூத்த வீரர் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலில் செயல்படுவார்கள்.

இந்த அமைப்பு முறைமைகளில் நம்பிக்கை கொள்ள மக்களுக்கு நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் ஆகலாம் என்பது சில ஓய்வுபெற்ற அதிகாரிகளின் கருத்து.

அக்னிபத் திட்டத்தில் வான்படை வீரர்கள் அல்லது வீராங்கனை கள் தங்கள் கற்றலை நிறைவு செய்யும் நேரத்தில், துரதிருஷ் டவசமாக, அவர்களில் 75 சதவீதத்தினர் ஏர் போர்ஸ் பிரிவுக்குக் 'குட் பை' சொல்லி வெளியேற வேண்டிய கட்டாயத்தில் தயாராக இருப்பார்கள். கற்றல் திறன் பெருமளவில் வீணடிக்கப்படும், மேலும் அவர்களுக்கு


**திறனை அளிக்கச் செலவிட்ட பெரும் தொகையும் கூடுதலாக வீணடிக்கப்படும். எனவே எல்லா நேரத்திலும், தரைப்படை, கப்பல் அல்லது வான்படை வீரர்களில் பெரும்பாலோனோர் பயிற்சி பெறாத பச்சை மண்ணாகவே இருப்பர். படைகளின் தாக்கும் திறனுக்கு என்ன நேரும்? இதுவரை புதிய அக்னிபத் திட்டத்தைப் பொருத்தவரை அது சோதித்தறியப்படாத கேள்வி.**

**மாற்றாந்தாய் அணுகுமுறை**

இராணுவத்தில் அக்னிவீர்கள், தங்கள் இராணுவ உடுப்புக் களில் வித்தியாசமான முத்திரை அடையாளச் சின்னத்தை நான்கு ஆண்டுகளுக்கு அணிந்திருப்பார்கள் என்பதை அறிய பலருக்கும் அதிர்ச்சியாக இருக்கும். நான்காண்டுக்குப் பிறகு, முப்படைகளில் தொடர்ந்து பணியாற்ற யாரெல்லாம் அனுமதிக்கப்படுவார்களோ, அந்த 25 சதவீதத்தினர் மட்டுமே அதன் பிறகு அப்படைகளின் முறையான அடையாளச் சின்னத்தை அணிய முடியும்.

இம்மாதிரியான வேறுபடுத்தும் பிரிவினைகள் இந்திய இராணுவத்தில் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. அங்கே மதம், இனம்,

# இடதுசாரி பாதையில் பயணிக்கும் இலத்தீன் அமெரிக்க நாடுகள்



- அனில் ராஜிம்வாலே

**இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன. பெரு, ஹாண்டுரஸ் மற்றும் சிலி எனும் வரிசையில் தற்போது கொலம்பியாவும் ஒரு இடதுசாரி தலைவரை அதிபராகத் தேர்ந்தெடுத்துள்ளது.**

இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் உள்ள 12க்கும் அதிகமான நாடுகளில் தேர்தல் முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அரசாங்கங்கள் ஆட்சிப் பொறுப்பில் உள்ளன.

2022 மே 29 அன்று கொலம்பியாவில் அதிபர் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் களத்தில் போட்டியிட்ட ஐந்து வேட்பாளர்களில் ஒருவர் கூட 50 சதவிகிதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறவில்லை. எனவே, ஜூன் 19 அன்று இரண்டாம் சுற்று தேர்தல் நடைபெற்றது. இந்த இரண்டாவது சுற்றில் இடதுசாரி மற்றும் இதர முற்போக்கு சக்திகளின் கூட்டணி (historic pact) சார்பாக குஸ்தவோ பெட்ரோ மற்றும் வலதுசாரி வேட்பாளராக ரொடோல் ஃபோ ஹெர்னாண்டஸ் ஆகிய இருவருக்கும் இடையே போட்டி நிலவியது. பெட்ரோ அணி சார்பாக துணை அதிபர் பதவிக்கு பிரான்சியா மார்க்கசும், ஹெர்னாண்டஸ் சார்பாக மெர்லின் காஸ்டில்லோவும் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பெட்ரோ 1,12,81,013 (50.44%) வாக்குகள் பெற்றார். ஹெர்னாண்டஸ் 1,05,80,412 (47.31%) வாக்குகள் பெற்றார். குஸ்தவோ பெட்ரோ இதுவரையில் மூன்று முறை அதிபர் தேர்லில் போட்டியிட்டுள்ளார்.



கொலம்பியாவில் விகிதாச்சார தேர்தல் முறை நடைமுறையில்



உள்ளது. கொலம்பிய அதிபரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். அந்நாட்டு அரசியல் அமைப்பின் 191வது சரத்துப்படி, அதிபர் பதவிக்குப் போட்டியிடும் நபர், பிறப்பால் கொலம்பிய நாட்டு குடிமகனாகவும், 30 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

போகோடா மாநகரத்தின் முன்னாள் மேயராக பதவி வகித்த குஸ்தவோ பெட்ரோவை கடந்த அதிபர் தேர்தலில், இவான் டியூக் தோற்கடித்தார். அதிபர் தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெற்றவர் செனெட் சபை உறுப்பினராகவும், துணை அதிபர் தேர்தலில் இரண்டாவது இடத்தைப் பெற்றவர் பிரதிநிதிகள் சபையில் உறுப்பினராகவும் பொறுப்பேற்கும் நடைமுறை வழக்கம் இருக்கிறது.

வேலையின்மை, விலைவாசி உயர்வு, பணவீக்கம், ஊழல், வரி உயர்வு, சுகாதார கட்டமைப்பில் தனியார்மயம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக இவான் டியூக் அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக கொலம்பிய பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்தது. மாபெரும் மக்கள் எழுச்சியானது, சுகாதாரம் மற்றும் வரி சீர்திருத்த சட்ட முன்வடிவுகளை, அரசாங்கம் வாபஸ் பெறச் செய்தது. பொது வாக்கெடுப்பு மூலமாக குஸ்தவோ பெட்ரோ அதிபர் தேர்தல் வேட்பாளரானார். வலதுசாரி உள்ளிட்ட இதர வேட்பாளர்களும் அத்தகையதொரு செயல்முறை மூலமாகவே தேர்வாகினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெளிநாட்டில் வாழும் கொலம்பிய மக்களின் வாக்குகளும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இந்தியாவில் உள்ள கொலம்பிய வாக்காளர்களில் 35% வாக்காளர்கள் பெட்ரோவுக்கு வாக்களித்துள்ளனர்.

பெட்ரோவுக்கு வாழ்த்து தெரிவித்த ஹெர்ணாண்டஸ், ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளில் பெட்ரோ உறுதிப்பாட்டுடன் செயல்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, அர்ஜெண்டினா, சிலி, மெக்சிகோ, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் குஸ்தவோ பெட்ரோவுக்கு வாழ்த்து தெரிவிதுள்ளனர்.

இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பிய நாட்டின் மக்கள் தொகை 50 மில்லியன் ஆகும். இதில் வாக்களிக்க தகுதியுடைவர்கள் 39 மில்லியன் நபர்கள் ஆவர். மக்கள் தொகையின் படி இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் மூன்றாவது பெரிய நாடான கொலம்பியாவில், (M-19) எனும் ஆயுதக்குழுவில் கிளர்ச்சியாளராக செயல்பட்ட பெட்ரோ சிறையில் அடைக்கப்பட்டு சித்ரவதைக்கு உள் ளானவர். பின்னர், மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். ஆயுதப் போராட்ட பாதையை கைவிட்ட அந்தக் குழு 1990ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அதன் நீட்சியாக வி–19 ஜனநாயக முன்னணி என்ற அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு, அரசியல் அமைப்பு மற்றும் நாடாளுமன்ற நடைமுறைகளில் அக்கட்சி பங்கேற்க தொடங்கியது; அந்நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி எழுதியது.

உள்நாட்டுப் போர்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட கொலம்பிய நாட்டில் பெட்ரோவின் வெற்றி அதி முக்கியத்துவம் வாய்ந்தது. பல தசாப்தங்களாக அதி தீவிர இடதுசாரிக் குழுக்கள் மற்றும் ஆயுதப் போராட்ட பாதையை ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்த கிளர்ச்சியாளர்களின் தாக்குதலைக் கொலம்பிய நாட்டு அரசாங்கங்கள் எதிர்கொண்டு வந்தன. கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைப்பிரிவு (FARC) 1964ஆம் ஆண்டில் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சியின் படைப்பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது.

நீண்ட ஆயுதப் போராட்டங்கள் மற்றும் மோதல்களுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டில் ஆயுதப் பாதையை நிராகரித்துவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பிட FARC முடிவு செய்து, அரசாங்கத்துடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இதற்கான பேச்சுவார்த்தைகள் கியூப நாட்டின் தலைநகரமான ஹவானாவில் நடைபெற்றன. கியூபா, சிலி மற்றும் வெனிசுலா நாட்டின் அதிபர்கள் மற்றும் ஐ.நா.சபை பொதுச்

**கடலென இருப்பவன் தொழிலாளி - அதில் படகென மிதப்பவ**

**கடலுக்கு சினம் வந்து அலைமோதி வரும் முடிவினில் கிளை**




சாதி, மொழி என்ற வேறுபடுத்தும் தடைகளைக் கடந்து சமத்துவம் என்ற கொள்கையின்படியே எப்போதும் பெருமிதமாக ஒன்றாக நின்றார்கள். தற்காலிக அக்னிவீர்கள் மற்றும் நிரந்தரப் படைவீரர்கள் இடையே இது போன்ற பேதம் அவர்களின் நம்பிக்கை, துணிவு, மனஉறுதி உணர்வைக் குலைத்து உற்சாகமிழக்கச் செய்யும்.

மற்றுமொரு கவலைக்குரிய பகுதி, நான்காண்டு பணி முடிந்த பிறகு உள்ள காலம். இப்போது இராணுவத்தில் எடுக் கப்படுபவர்களில் நான்கில் மூன்று பங்கினர் கையில் ஒரு தொகை அளிக்கப்பட்டு வெளியேற்றப்படுவர். அக்னிவீர்களுக்கு ஓய்வூதியமில்லை, சமூக ஆதரவு இல்லை மற்றும் அடையாளமே இல்லை. விரைவிலேயே இளைஞர்களிடம் இராணுவத்தில் சேர வேண்டும் என்ற துடிப்புமிக்க ஆர்வம் தேயும், இதனால் நமது முப்படைகளுக்கு உடல் ஆரோக்கியம், தகுதி திறமையுள்ள ஆண், பெண் வீரர்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும்.

**உண்மையில் ஆதாயம் அடைபவர்கள்**

படையில் நான்கு ஆண்டுகள் இருந்த பின் வெளியேற்றப்படும் 75 சதவீதமானவர்கள் தனியார் பிரிவில் காவல் காக்கும் செக்குரிட்டி வேலைகளில் முன்னுரிமை அளிக்கப்படுவர். இவ்வாறு அக்னிபத் திட்டத்தில் உண்மையான பலனடைவோர் கார்ப்பரேட் பகுதியினர்; அவர்களுக்குக் காசு செலவில்லாமல், அரசின் வரி கட்டுவோர் பணத்தில், முழுமையாகப் பயிற்சியளிக்கப்பட்ட பாதுகாப்புப் பணியாளர்கள் நிறுவனங்களுக்குக் கிடைப்பார்கள். இன்றைய அரசின் கார்ப்பரேட் நண்பர்களுக்கு ஒரு ரூபாய் செலவில்லாமல் திறன்மிக்க பயிற்சி அளிக்கப்பட்ட பாதுகாவலர்கள் அவர்களின் வாயில் காவல் செய்யக் கிடைப்பார்கள்!

**ஆர்.எஸ்.எஸ். ஷாகா'க்களின் உறுப்பினர்களிடம் அக் னிபத் திட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் சேர ஊக்கப்படுத் தப்படுகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது. இது ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பது.**

முதலாவதாக, இது இளைஞர்கள் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள் எனவும், நரேந்திர மோடி மற்றும் அவரது அரசின் திட்டங்களில் முழு நம்பிக்கை வைத்துள்ளார்கள் எனக் காட்டுவதற்கான சமிக்ஞை.

இரண்டாவது, இந்திய இராணுவத்தின் முப்பிரிவுகளுடன் ஆர்.எஸ்.எஸ். ஆழமான உறவை ஏற்படுத்திக் கொள்ள வழிவகை காண இயல்வதாகும். இரண்டாவது அபாயகரமான பின்விளைவுகளை உண்டாக்கும். மோடி ஆட்சி ஏற்படும்வரை, நமது இராணுவம் அரசியல் ரீதியில் நடுநிலையாக இருந்து வந்தது. இராணுவத்தின் விஸ்வாசம் தாய்நாட்டுடன் மட்டுமே. பாஜக அரசு இவை அனைத்தையும் தலைகீழாக மாற்றிவிட்டது. இன்றைய நாட்களில் இராணுவத் தலைமைத் தளபதிகள் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் மொழியைப் பேசுகிறார்கள். இது மிக மிக ஆபத்தானது!

**சமூகரீதியான தாக்கம்**

நீண்ட கால அடிப்படையிலான வேலைவாய்ப்பு, அமைதி யையும் செழிப்பையும் சமூகத்தில் கொண்டுவரும் எனச் சமூகவியலாளர்கள் நம்புகிறார்கள். ஒரு சமூகத்தில் குற்றங் களைக் குறைப்பதற்கான ஆகச் சிறந்த வழி, சமூகத்தின் அனைத்து இளைஞர்களுக்கும் கல்வி அளித்து வேலையில் அமர்த்துவதேயாகும். நீண்டகால அடிப்படையில் அர்த்தமுள்ள பயனுள்ள வகையில் இளைஞர்களை ஈடுபடுத்துவதே குற்றங் களைப் பெருமளவு குறைக்கும்.

இதற்கு முன்பு 15 அல்லது 20 ஆண்டுகள் சேவையாற்றிய பிறகு ஓய்வு பெறும் ஓர் இராணுவவீரர், அவரது குடும்பம் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உறுதியான அடித்தளம் அமைத்திருப்பார். ஓய்வூதியம் குடும்ப அடிப்படைத் தேவை களைக் கவனித்துக் கொள்ளும்போது, இராணுவம் வழங்கும் நலவாழ்வு ஆதரவு அவரது குழந்தைகள் மற்றும் பெற்றோர்களைக் கவனித்துக் கொள்ளும். சமூகத்தில் ஒரு முன்னாள் இராணுவ வீரர் கண்ணியமான வாழ்க்கையை நடத்துவார், புதிய தலைமுறைக்கு ஒரு முன்னுதாரணமான மாதிரியாக விளங்குவார்.

எந்த உத்தரவாதமும் இல்லாது, சமூகத்தில் நுழைவதே ஆகும். அவர்கள் எந்தப் பாதையை தேர்ந்தெடுப்பார்கள் என்பது அப்போது நிலவக்கூடிய சமூக அரசியல் நிலையைப் பொறுத்தது.

வேலையில்லாது இருக்கும் அவலத்தின் அழுத்தம் மிக எளிதாகச் சமூகக் கட்டுகள் மற்றும் நியதிகளின் சமூக இழைப் பின்னல் கட்டமைப்புகளை அறுத்தெறியும். இதனுடன் ஆயுதப் பயிற்சியின் திறனும் இணைந்து கொள்ளும். நிரந்தர இராணுவச் சேவை ஓய்வுக்குப் பிறகு உறுதியளிக்கப்பட்ட கண்ணியமான வேலைவாய்ப்பின் காரணமாக முன்னாள் இராணுவவீரர்கள் சமூகத்தில் அரிதாகவே தெருச் சண்டைகளில் ஈடுபடுவர். அப்போதும் அவர்கள் ஒருபோதும் துப்பாக்கிகளைத் தூக்குவதில்லை. பொதுவாகப் பிரச்சனைகளிலிருந்து விலகியே இருப்பர். உறுதியளிக்கப்பட்ட சமூக நலவாழ்வு எல்லா டென்ஷன்களையும் அவர்களிடமிருந்து விலக்கி வைக்கும்.

ஓய்வுக்குப் பிந்தைய பலன்கள் எதுவும் இல்லை. உண்மையில் அவர்கள் ரிட்டையர் செய்யப்படுவதில்லை. அது பலன்கள் ஏதுமின்றி வெறுமே 'போ என கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுவது'. நான்காண்டுகளுக்குப் பிறகு இராணுவத்தில் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளப்படாதவர்களுக்குக் கையில் ஒரு தொகை கொடுப்பதாக விளம்பரம் செய்கிறார்களே, அது உண்மையில்

**அக்னிவீரர்கள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுவதே. அது அவர்களின் பணம், அதனுடன் அரசு தனது பங்களிப்பையும் அளிக்கிறது, அவ்வளவுதான். ஒவ்வொரு மாதமும் ஊதியத்தில் கழித்துக் கொள்ளப்படும் அந்தப் பிடித்தத் தொகை ரூ9ஆயிரத்துடன் அதே அளவு தொகையை அரசும் பங்களிப்புச் செய்கிறது. அதைத்தான் இறுதியில் கொடுக்கப்படும் பெருந்தொகை என்கிறார்கள்.**

25 வயதில் ஓர் இளைஞன், எந்தவித முறையான திட்டமிடுதலும் இல்லாது, பெறுகின்ற 11 லட்சம் ரூபாய் உண்மையில் அந்த முன்னாள் அக்னிவீரனுக்கும் சமூகத்திற்கும் மிகப் பெரும் ஆபத்து. அதுவே அந்த இளைஞனுக்குச் சரியான வழிகாட்டலும் இல்லாது போயின் அவன் பண்பு எடுப்பார் கைப்பிள்ளையாகிப் போகும். அப்படிப்பட்ட தீங்கு நேராது காக்கும் ஒரே உத்தரவாதம் அத்தகு முன்னாள் வீரர்கள் அனைவருக்கும் உடனடியாக வேலைவாய்ப்பு வழங்குவது மட்டுமே.

இந்தியா கடுமையான வேலையில்லாத் திண்டாடத்தில் தவிக் கும்போது இந்திய இராணுவம் சிறிது நம்பிக்கை அளித்திருக்க முடியும். ஆனால் அப்படி இருந்த நம்பிக்கைகளையும் கொன்று குழிதோண்டிப் புதைப்பது இந்திய இராணுவம் இளைய தலைமுறைக்கு இழைக்கும் துரோகம்.

இந்திய இராணுவம் எப்போதுமே எல்லா நெருக்கடியான தரு ணங்களிலும் தன்னால் இயன்ற நன்மைகளையே செய்தி ருக்கிறது, ஏனெனில் இத்தேசமும் சமூகமும் இராணுவத்தின் வீர வீராங்கனைகளை மதிக்கிறது. இன்று அந்த மதிப்பும் மரியாதையையும் அவர்களிடமிருந்து, கார்ப்பரேட்டுகளை ஆதரிக்கும் குறுகிய பார்வை கொண்ட, அரசியல்வாதிகள் மற்றும் பொருளாதார நிபுணர்களால் பறிக்கப்படுகிறது. இது நீண்டகால நோக்கில் தேச நன்மைகளைச் சீரழிக்கும். சமச்சீராக வகுக்கப்படாத இத்திட்டத்தின் விளைவுகள் நாட்டிற்குத் தெரியவரும்போது அது காலம் கடந்ததாக, கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதாய், இருக்கும். திரும்பி வருதற்கான பாதை இராது, ஆறாக் காயங்கள் அப்படியே இருக்கும்.

அக்னிபத், நெருப்பின் பாதை, இல்லாத ஊருக்குப் போகாத வழிகாட்டும் பாதை, எங்கும் அழைத்துச் செல்லாது!

தமிழில் : **நீலகண்டன்**

---

செயலாளர் ஆகியோர் முன்னிலையில் இந்த அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆயுதப் போராட்டம் முடிவுற்றதாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. ஐந்து தசாப்தங்களாக நடைபெற்று வந்த உள்நாட்டுப் போரின் விளைவாக 2,60,000 நபர்கள் கொல்லப்பட்டனர்; 70 லட்சம் நபர்கள் புலம் பெயர்ந்தனர்.

அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகள் தற்செயலான ஒரு நிகழ்வு அன்று. கடந்த இரண்டு தசாப்தங்களாக, 12க்கும் மேற்பட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி வேட்பாளர்களை அதிபர் பதவிக்கு தேர்வு செய்ததுடன் செனெட் மற்றும் பிரிதிநிதிகள் சபையில் அரசியல் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. 1960 மற்றும் 1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை. 21ஆம் நூற்றாண்டில், பொதுவாக, இராணுவம் மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதோடு, இடையூறுகள் எதுவும் செய்வதில்லை. மேலும், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் – சித்தாந்த மாற்றங்களுக்கு வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவோர் ஆவர். நகரக் கட்டமைப்புகள் அதி வேகமாக வளர்ந்து வருகின்றன. தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20ஆம் நூற்றாண்டு வர்க்கப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய வர்க்கப் பரிமாணங்களின் தோற்றத்திற்கு வித்திட்டுள்ளன. தகவல் மற்றும் தொழில்நுட்பம் முக்கியமான பாத்திரம் வகித்து வருகிறது. 'டிக் டாக் மன்னன்' என்று அறியப்படும் ஹெர்னாண்டசை எதிர்த்து இடதுசாரி கூட்டணி திறம்பட பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஊடகங்களை இடதுசாரிகள் மிகச்சிறப்பாக பயன்படுத்தினர்.

தேர்தல் பிரச்சாரத்தில் வேலையின்மை உள்ளிட்ட இளைஞர் களின் பிரச்சினைகள், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. இடதுசாரி களுக்கு ஆதரவாகப் பெண்கள் பெருமளவில் திரண்டனர். ஏழை மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். மக்கள் மாற்றத்தைக் கோரினர். இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நாடாளுமன்ற போராட்ட வடிவங்களை முற்போக்கு சக்திகள் சீறிய முறையில் ஆய்ந்தறிந்து பயன்படுத்தி வருகின்றனர். புதிய எழுச்சியுடன் இடதுசாரிகள் மற்றும் இதர முற்போக்காளர்கள் களத்தில் முன்னேறி வருகிறார்கள்.

தமிழில்: **அருண் அசோகன்**

---

# ஆங்கிலேயரது காலனியாதிக்க சட்டங்களைக் கொண்டு மாற்றுக் கருத்தாளர்களை சிறையில் தள்ளுவதா?

## அமர்த்தியா சென் கடும்விமர்சனம்



''இந்திய நாட்டின் மக்கள் ஒற்றுமையை சிதறுண்டு போகும் நெருக்கடியான அபாயகரமான கட்டத்தை, இந்தியா சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த நெருடிக்கடி நிலை முன் எப்போதும் காணப்படாதது என்று நோபல் விருது பெற்ற இந்திய அறிஞர் அமர்த்தியாசென், கல்கத்தாவில் '' அமர்த்தியாசென் ஆராய்ச்சி மையம்'' சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போது மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

கருத்தரங்கில் அமர்த்தியாசென் மேலும் கூறியதாவது ''தற்போது நமது இந்திய நாட்டில் மக்களிடையே ஏற்படுத்தப்படும் பிளவுகள், பிரிவினை போக்கும் தமக்கு மிகுந்த அச்ச உணர்வை ஏற்படுத்தி உள்ளது. இத்தகைய நெருக்கடிகளை அபாயகரமான போக்குகளை வெறும் சகிப்புத் தன்மையால் மட்டும் எதிர்கொள்ள இயலாது. இந்தியாவுக்கென்று தனித்த உள்ளார்ந்த கலாச்சாரப் பண்பு உள்ளது. அது சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுபட்டு இணைந்து ஒற்றுமைக்காகப் பணியாற்றுவதுதான் இந்த தருணத்தின் தேவை என்றும். இந்த ஒற்றுமையைக் கொண்டுதான் தற்போது நிலவும் மிக அபாயகரமான போக்கை எதிர்கொள்ள வேண்டும்.

நபிகள் நாயகத்தைப் பற்றி இழிவான கருத்துக்கள் கூறப்படும் ஒரு நெருக்கடியான மிக அசாதாரணமான காலகட்டத்தை இந்தியா கடந்து கொண்டிருக்கிறது "இந்தியா என்பது இந்து கலாச்சாரத்திற்கு மட்டுமே சொந்தமானது அல்ல, மாறாக இஸ்லாமிய கலாச்சாரமும் வளமார்ந்த துடிப்பான இந்திய வரலாற்றின் ஒரு பகுதியாகும்.

ஷாஜகானின் மூத்த மகன் தாரா ஷிகோ, அசல் சமஸ்கிருதத் திலிருந்து, பாரசீகத்திற்கு 50 உபநிடதங்களை மொழிபெயர்த்தார். இந்து மத நூல்கள், இந்து கலாச்சாரம் மற்றும இந்துமரபுகள் பற்றிய உலகம் அறியவேண்டும் என்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தார். ரவி சங்கர் மற்றும் அலி அக்பர் கான் ஆகியோரின் ராகங்களும் இசை யும் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இந்திய நாட்டின் பெருமையை நிலைநாட்டும் பணியில் ஒருங்கிணைந்து செயலாற்றினார் என்பது வரலாற்று உண்மையாகும். இப்படிப்பட்ட பல மதங்களைச் சார்ந்தோரது ஒருங்கிணைந்த ஒற்றுமைப் பணி தான் நாம் சந்திக்கும் ஆபத்துக்களை எதிர்நோக்க வல்லது என்றும், வெறும் சகிப்புத் தன்மை என்று பேச்சளவில் நின்றுவிடக் கூடாது.

யூதர்கள், பார்சிகள், கிறித்து வர்கள் என அனைத்து மதப்பகுதி யினரும் ஒன்றாக ஒற்றுமையாக வாழ்ந்த தேசம்தான் இந்திய தேசம். பெரும்பான்மை என்ற ஒன்றே அனைத்திற்கும் தீர்வாகிவிடாது.

ஜனநாயகத்தில் நீதித்துறையின் பங்கு மிக முக்கியமானது. ஆனால் இந்தியாவை துண்டாடும் வகையிலான போக்குகளை இந்திய நீதித்துறை காணாமல் கடந்து செல்வது மிகுந்த அச்ச உணர்வை ஏற்படுத்துகிறது. பாதுகாப்பானதொரு எதிர்கால தேசத்திற்கு, நீதித்துறை சட்டமன்றங்கள் (நாடாளுமன்றம்) அமு லாக்கும் அதிகாரத்துவம் ஆகியவற்றிற்கும் இடையே ஒரு சமநிலை இருக்க வேண்டும்.

ஒடுக்குமுறைக்காக ஆங் கிலேயர் கையாண்ட சட் டங்கள் இன் னமும் நீடிப் பது அசாதாரணமானது. வர லாற்றை திரிக்க முற்படும் முயற் சிகள் மேற்கோள்ளப்படும் இந்த அபாயகரமான நிலையில். ஏற் கனவே பகிரப்பட்ட நிலை நிறுத்தப்பட்ட உண்மை யான வரலாற்றையும் நாட்டையும் காக்க சாதாரண மக்களாகிய நாம்தான் முனைப்பாக செயல்படவேண்டும். களம் காண வேண் டும் என்றும் நோபல் அறிஞர் அமர்த்தியா சென் வலி யுறுத்தினார்.

தமிழில்:
**ந.சேகரன்.**


ன் முதலாளி!
டப்பது சமநீதி!

ஆகஸ்ட்
6, 7, 8, 9 இல்
திருப்பூரில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
மாநில மாநாடு
அழைக்கிறது






- ம.இராதாகிருஷ்ணன்

## தூய்மை பணி தொழிலாளர்களைப் பலியிடும் தனியார்மயம்:

# உள்ளாட்சியில் நல்லாட்சி எப்போது?

**மக்கள் சுகாதாரத்துடன் வாழ தூய்மை பணியாளர்கள் தங்கள் மதிப்பை இழந்து மிக மோசமான சூழலில், தங்கள் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் இழந்து பணிபுரிந்து வருகின்றனர். மேலோட்டமாகப் பார்த்தால் தூய்மை பணி என்பது சாதாரணமாகத் தோன்றலாம். ஆனால், உண்மையில் அவர்கள் உயிரைப் பறிக்கும் விஷக்கழிவுகளோடு தான் நாள்தோறும் பணிபுரிகின்றனர்.**

கழிவு நீர் அகற்றுவது, மக்கும், மக்காத குப்பைகளை அகற்றுவது, இறந்த விலங்குகளை அகற்றுவது, மருத்துவமனை மற்றும் பொது இடங்களில் இறந்தவர்களின் சடலங்களை அகற்றுவது; தெருக்களில் பொதுவாக காணப்படும் மனித கழிவுகள், கால்நடைகள், செல்லப்பிராணிகளின் கழிவுகள், சானிட்டரி நாப்கின்கள், அழுகிய உணவுப் பொருட்கள் அகற்றுவது; கழிவு நீர் குழாய்கள் பாதாள சாக்கடை மற்றும் வீடுகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்தல் போன்ற ஆபத்தான வேலைகளைச் செய்கின்றனர். இப்படியான பணி சூழலில் பாதுகாப்பு உபகரணங்களோ, பிற உரிமைகளோ கூட தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

இந்தியா, உலகில் மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கும் பின் தங்கி உள்ளது. அதனால் தான் தூய்மைப் பணியாளர்கள் தங்கள் வேலையை கைகளால் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆட்படுகின்றனர். பல்வேறு நோய்களோடு வாழ்கின்றனர்.

இத்தனை கடுமையாகத் தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றி வரும்போதும் கூட வீதிகளில், சாலைகளில் குப்பைகளும் ,கழிவுகளும் கிடக்கின்றன. கழிவுநீர் குழாய்கள் அடைத்துக் கொண்டு நாற்றமடிக்கிறது. சாலைகளில் சகிக்கமுடியாத நாற்றத்தோடு கழிவு குப்பைகளை அள்ளிச் செல்லும் வாகனங்களைக் காணமுடிகிறது. அவ்வாறு வாகனங்களில் அள்ளிச் சென்று குப்பைகளை மலை என குவித்து வைக்கின்றனர். அருகாமையில் வசிக்கும் மக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகின்றனர் என்னும் அவல நிலையும் நீடிக்கிறது.

உலகம் எங்கும் உற்பத்தியாகும் நவீன பொருட்களை வாங்க தூண்டும் நுகர்வு கலாச்சாரம், இத்தகைய சீர்கேடுகளுக்கு காரணமாக உள்ளது. புதிய புதிய கழிவுகளை உற்பத்தி செய்கிறது. இவற்றுக்குப் பின்னால் கார்ப்பரேட் நிறுவனங்களின் வணிக நலன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தம் லாபவெறிக்காக எந்த நிறுவனம் அதிக பொருட்களை உற்பத்தி செய்து சந்தையில் குவிக்கிறதோ, அந்த நிறுவனம் அதிக அளவு கழிவுகளையும் சேர்த்துக் குவிக்கிறது.

அதே சமயத்தில், உலகில் பல நாடுகள் வசதியானவரின் வாழ்விடங்களில் தூய்மை திட்டங்களை செயல்படுத்தி, உழைக்கும் மக்கள் வாழ்விடங்களைக் குப்பை மேடாகக் கருதி வருகின்றன. இதன்படியே, தூய்மை திட்டங்களை வகுக்கின்றன. இந்தியாவும் இதில் விதிவிலக்கு இல்லை. இதன் காரணமாக, நவீன தாராளமய பொருளாதார வளர்ச்சியின் பலன்களை அனுபவிக்கும் கார்ப்பரேட் பெருநிறுவனங்கள் மற்றும் வசதிபடைத்தவர்களும் சொகுசாக வாழ, குப்பை கழிவுகளிலும் சுகாதார சீர்கேடுகளிலும் சிக்கிச் சீரழிபவர்களாக பெரும்பாலும் உழைக்கும் மக்களே உள்ளனர்.

கடல்களின் பாதுகாப்புத் தொடர்பாக செயல்பட்டு வரும் ஓஷியான (OCEANA) என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘அமேசான் நிறுவனத்தின் காற்றடைத்த பிளாஸ்டிக் பைகள் மட்டுமே உலகை 600 முறை சுற்றும் அளவுக்கு சூழலில் கலந்து உள்ளன என்று தெரிவிக்கிறது. மேலும் 2020 ஆம் ஆண்டு மட்டும் 1.066 கோடி கிலோ கிராம் பிளாஸ்டிக் குப்பைகள் கொட்டப்பட்டுள்ளன. இது சராசரியாக ஒவ்வொரு நிமிடமும் ஒரு டெலிவரி வேன் முழுவதற்குமான குப்பையை கடலில் கொட்டுவதற்கு சமம். கவலை தரத்தக்க வகையில் அமேசானின் பிளாஸ்டிக் பைகள் மறுசுழற்சி செய்யத்தக்கவை அல்ல.



610 பில்லியன் டாலர் வர்த்தகம் செய்யும் அமேசான், வர்த்தக உலகின் ஜாம்பவானாக வால்மார்ட் நிறுவனத்தையே முறியடித்து முன்னேறிக் கொண்டுள்ளது. அதனோடு அதன் பிளாஸ்டிக் குப்பைகளும் ஒரே வருடத்தில் 29 சதம் அதிகரித்துள்ளன.

ஜெர்மனியில் அந்நாட்டு அரசின் உறுதியான உத்தரவால் மறுசுழற்சி செய்யத்தக்க பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தி பல நூறு மில்லியன் பார்சல் அனுப்பும் அமேசான் ஏனைய நாடுகளில் இதனைக் கடைபிடிப்பது இல்லை’’ என்று ஓஷியானா தனது அறிக்கையில் தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தின் ஏர் குவா லிட்டி லைஃப் இன் டெக் (AKULI)அமைப்பு தனது ஆய்வு அறிக்கையில், இந்தியாவின் கங்கை சமவெளி பகுதி தான் உலகிலேயே மிக மோசமான மாசடைந்த பகுதி என்று தெரிவிக்கிறது.

2022 ஆம் ஆண்டுக்கான சுற்றுச்சூழல் தரவரிசை பட்டியல் கொலம்பியா மற்றும் ஏல் பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதில் உலகில் உள்ள 180 நாடுகளில் திடக்கழிவு மறுசுழற்சி, கடலில் உள்ள பிளாஸ்டிக் மாசு ஆகியவற்றை உள்ளடக்கிய கழிவு மேலாண்மையில் இந்தியா 151 வது இடத்தில் உள்ளது. அதில் தமிழகம் பின்தங்கிய பல வட மாநிலங்களை விட பின்தங்கி உள்ளது. இந்தியாவைவிட சூடான், துருக்கி, ஹைத்தி, லைபீரியா, பபுவா நியூகினி, பாகிஸ்தான், பங்களாதேஷ், வியட்நாம், மியான்மர் ஆகிய நாடுகள் முன்னிலையில் உள்ளன. மொத்தத்தில் சுற்றுச்சூழல் தரவரிசையில் 180 வது இடத்தில் கடைசியாக இந்தியா உள்ளது.

உலகை அச்சுறுத்திய கொரோனா கிருமித் தொற்று வெளிப்பட்ட நேரத்தில், உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகில் உள்ள நகரங்களில் 10 சதம் நகரங்கள் மனிதர்கள் வாழத் தகுதியற்றவனாக சுகாதார சீர்கேடு அடைந்துள்ளது என்று எச்சரித்துள்ளது. நகரங்கள் மற்றும் கிராமங்களில் பொது சுகாதாரத்திற்கு முன்னுரிமை தந்து அதிக நிதி ஒதுக்கி செலவிட அரசுகள் முன் வர வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது.

இன்றைய நிலையில் சவாலான இந்த கழிவுகளை அகற்றி உரிய முறையில் உடனுக்குடன் மறுசுழற்சி செய்யப்படவில்லை என்றால் மக்கள் அனைவருக்குமே சுகாதார கேட்டை உருவாக்கும். பல்வேறு நோய்களைத் தரும். தொற்று நோய்கள் தடுக்க முடியாதவை என்று கீபிளி தெரிவித்தது.

2016 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, திடக்கழிவு மேலாண்மை என இரண்டு பிரிவுகள் உள்ளன. அதில் பெரும் நிறுவனங்கள் தங்களின் பொருட்களை பிளாஸ்டிக் பேப்பர்களில் அடைத்து விற்பனை செய்தால் ,அந்த பிளாஸ்டிக் கழிவுகளை மீண்டும் சேகரித்து அவற்றை மறுசுழற்சி செய்து பயன்படுத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை ஆறு மாதங்களுக்குள் செய்து அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கிறது.

இந்தியாவில் திடக்கழிவு மேலாண்மையில் முதல் படிநிலை கழிவுகளைத் தரம் பிரித்துப் பெறுவதும், அவற்றின் தன்மைக்கேற்ப கையாள்வதும் தான். இந்த முதல் படியைக் கூட தமிழகம் முழுமையாக நிறைவேற்றவில்லை. பார்க்கும் இடங்களில் எல்லாம் மூன்று வண்ணங்களில் குப்பை தொட்டிகளை வைத்து விட்டால் மட்டும் போதும் என்ற மனநிலையே நீடிக்கிறது. அவை தனித்தனியே பிரித்தெடுக்கப்பட்டு அதனதன் தன்மைக்கேற்ப கையாளப்பட வேண்டும். குப்பைகளைத் தரம் பிரித்துச் சேகரிக்காமல் மொத்தமாக எடுத்துச் சென்று பின்னர் அவற்றைத் தரம் பிரிக்கப் பெரும் மனித உழைப்பு தேவைப்படுகிறது.

இந்த நிலையில் கழிவு மேலாண்மைப் பணிகளைத் தனியாரிடமும் ஒப்பந்ததாரர்களிடமும் தருவது என்பதைக் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகம் அரங்கேற்றி வருகிறது. ஒன்றிய அரசும் தனியார் முகமைகள் மூலம் இதனை நிறைவேற்ற வேண்டும் என்று தான் தெரிவிக்கிறது. கடந்த சட்டமன்ற தேர்தல் பரப்புரையின் போது, இப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ‘‘இந்த ஒப்பந்த, தனியார் துறையானது ஏற்படுத்தும் சீரழிவுகளை நான் நன்கறிவேன்’’ என்று குறிப்பிட்டது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

**இந்தச் சவாலான குப்பைகளை, கழிவுகளை அகற்றும் பணி யைத் தனியாரிடம், ஒப்பந்ததாரரிடம் தந்ததன் விளைவு, அது கொள்ளை லாபத்திற்கு பயன்பட்டிருக்கிறது என்பது அனுபவம். சமூக அக்கறையோடு மக்களின் பொது சுகாதாரத்தைப் பேணு வதற்கு அது பயன்படவில்லை. இந்த அனுபவத்தில் இருந்து தான் முதல்வர் அவ்வாறு தெரிவித்தார் என்று புரிந்து கொள்ள முடிகிறது.**

கொள்ளை லாபமீட்டுவதை நோக்கமாக கொண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மீட்டு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி அமைப்புகள் நேரடியாக கழிவகற்றும் பணியை மேற்கொள்வது சமூக அக்கறையுடன் கூடிய சேவையாகும்.

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள ‘‘உள்ளாட்சியில் நல்லாட்சி’’ என்பதும் இதனால் சாத்தியமாகும். ஆனால் தற்போதும் தமிழ்நாடு அரசு தனியார்மயமாக்கல், காண்ட்ராக்ட் மயமாக்கல் என்பதை நோக்கியே பயணிக்கிறது. ஆபத்தை உணர்ந்து அதே ஆபத்தான வழியில் பயணிப்பது மக்களின் சுகாதாரத்திற்கு பாதுகாப்பற்ற தன்மையையும், தொழிலாளர்களின் வாழ்வை சீரழிப்பதையும், தனியார் கொள்ளை லாபத்தையும் ஒருங்கே பெற்றது ஆகும்.

எனவே, வியாபார நோக்கம் கொண்ட தனியார்மயமாக்கல், ஒப்பந்தமயமாக்கல் நடவடிக்கையை ஊக்குவிக்காமல், சேவை நோக்கம் கொண்டு உள்ளாட்சி அமைப்புகளே நேரடியாக இந்தப் பணிகளை மேற்கொள்ளச் செய்வதற்கு தமிழ்நாடு அரசு முன் வர வேண்டும்.

தொடர்புக்கு: **85248 67888**



# கோவில்பட்டியில் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு, தாலுகா செயலாளர் பாபு தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கட்டுமான பொருட்கள் விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கரும்பன், கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பேசினார். மேலும் கோவில்பட்டி கோட்டாட்சியர் மகாலட்சுமியிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கோவில்பட்டி நகர செயலாளர் சரோஜா, மாவட்ட குழு உறுப்பினர்கள் சேதுராமலிங்கம், பரமராஜ், லாரி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஓசூர் மாநகர மாநாடு

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகர 24–வது மாநாடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. செம்படை அணிவகுப்பு மற்றும் பேரணி மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடுகள்




## ஈரோடு வடக்கு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட முதல் மாநாடு புஞ்சை புளியம்பட்டி, கே.ஜி.மஹாலில் தோழர் தா.பாண்டியன் நினைவரங்கில் பி.என்.ராஜேந்திரன், எஸ்.கந்தசாமி, எஸ்.பூங்கொடி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைச் செயலாளர் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் மாநாட்டை தொடக்கிவைத்து சிறப்புரை ஆற்றினார்.

மாநிலக் கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன் கொடியேற்றி வைத்தார்.

மறைந்த முன்னணித் தோழர்கள் பவானி எஸ்.பி.கிருஷ்ணன், பி.ஆர்.ஆறுமுகம், பவானி சாகர் த.சுப்பையன், பர்கூர் பி.ஆர். சிவராமன், கோபி கொன்னமடை சி.துரைசாமி ஆகியோர் நினைவு ஜோதிகளை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ப.பா.மோகன் பெற்றுக் கொண்டார். தியாகிகள் ஸ்தூபியை மாநிலக்குழு உறுப்பினர் பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்டத் துணைச் செயலாளர் ஜி.வெங்கடாசலம் அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினர் தா.சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

அரசியல், அமைப்பு நிலை, வேலை அறிக்கையை மாவட்டச் செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன் முன்வைத்தார்.

மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ. நிறைவு செய்து சிறப்புரை ஆற்றினார். வரவேற்புக்குழு பொருளாளர் பி.எஸ்.கே.அரப்ஷா நன்றி கூறினார்.

மாவட்டச் செயலாளராக சு.மோகன்குமார், மாவட்ட துணைச் செயலாளர்களாக ஜி.வெங்கடாசலம், கே.சக்திவேல், மாவட்டப் பொருளாளராக பி.என்.ராஜேந்திரன் ஆகியோர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். ஈரோடு மாவட்டத்தின் நீராதாரத்தை மேம்படுத்த பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

“ஈரோடு மாவட்டத்தை வாழ்வித்து வருவது பவானியாறே ஆகும்!

கீழ்பவானி பாசனத்திட்டம், தடப்பள்ளி அரக்கன் கோட்டை பாசனத்திட்டம், கொடிவேரி பாசனத்திட்டம், அத்திக்கடவு அவினாசித் திட்டம், கசிவு நீர் பாசனத்திட்டம், நீரேற்று பாசனத்திட்டம், இன்னும் ஏராளமான குடிநீர் திட்டங்கள் என இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் அளிப்பதோடு, இலட்சக்கனக்கான மக்களின் குடிநீர் தேவைகளையும் பூர்த்தி செய்து, தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையையும் பூர்த்தி செய்து வருவது பவானியாறே ஆகும்!

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய இயலாமல் பவானியாறு தடுமாறி வருகிறது. ஏற்பட்டுள்ள பற்றாக்குறை, மக்களுக்கிடையில் பூசலையும் ஏற்படுத்தி வருகிறது.

பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் பவானியாற்றுக்கு மோயாற்றின் வழியாக 14 டிஎம்சி தண்ணீரை கூடுதலாக பெறும் வாய்ப்புள்ளது.

தமிழ்நாடு ஒரு மழை மறைவு மாநிலம்; அதே சமயம் கேரளம் ஒரு மழை மாநிலம். கேரளத்தின் சராசரி மழைப்பொழிவு 3000 மிமீட்டர். தமிழ்நாட்டின் மழைப்பொழிவு 920 மிமீட்டர் மட்டுமே.

தமிழ்நாட்டில், நீலகிரி தேவாலா காடுகளில் உற்பத்தியாகும் (சராசரி மழைப்பொழிவு 6000 மிமீட்டர்) பாண்டியாறு, மேற்கு நோக்கி ஓடி, புன்னம்புழா எனப்பெயர் பெற்று, கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலந்து, கள்ளிக்கோட்டைக்கு அருகில் பயன்பாடற்று அரபிக்கடலில் கலக்கிறது.

இந்த தண்ணீரை கிழக்கு நோக்கி திருப்பி, பவானியாற்றின் கிளையாறான மோயாற்றில் சேர்ப்பதன் மூலம் பவானியாற்றின் நீர்வரத்தை அதிகரிக்க முடியும்.

ஈரோடு மாவட்டத்தின் எதிர்கால தண்ணீர் தேவைகளனைத் தையும் தீர்க்க முடியும். மின்சாரத்தையும் தயாரிக்க இயலும்.

‘கேரளத்திற்கு மின்சாரம், தமிழகத்திற்கு தண்ணீர்’ என்ற வகையில் இரு மாநிலங்களும் பயன் பெற முடியும்.

இதற்கான ஒரு நீர் மின் திட்ட அறிக்கையை தமிழக மின் வாரியம் கேரளத்திற்கு 2006ஆம் ஆண்டே அனுப்பியும், அது பரிசீலனையிலேயே இருந்து வருகிறது.

தமிழ்நாடு அரசு இத்திட்டத்தினை நிறைவேற்ற கேரள அரசின் இசைவைப் பெற தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகளை துவக்க வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தின் எதிர்கால நீர்த்தேவைகளை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள, தமிழக அரசை இம்மாநாடு கோருகிறது.

தமிழக அரசின் கவனத்தை இப்பிரச்சனையின் பால் ஈர்க்கும் வகையில்,தொடர் இயக்கங்களை அனைத்து தரப்பு விவசாயிகள் மற்றும் பொதுமக்களைத் திரட்டி மேற்கொள்வதெனவும்,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடக்கு மாவட்ட முதல் மாநாடு தீர்மானிக்கிறது.”

## விருதுநகர்

பாசிச சக்திகளை எதிர்க்கும் துணிவு கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமே உள்ளது பிரதிநிதிகள் மாநாட்டில் சி.மகேந்திரன் பேச்சு

விருதுநகர் திருவில்லிபுத்தூரில் பிஎம்ஆர் நினைவரங்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் மாவட்ட 24வது பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. கோவிந்தன், பலவேசம், தங்கமாரியம்மாள் ஆகியோர் தலைமை வகித்தார்கள். மூத்த தோழர் சுந்தர்ராஜ் மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார். பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ வரவேற்று பேசினார். அஞ்சலி தீர்மானத்தை எஸ்.பழனிக்குமார் வாசித்தார்.

மாநாட்டை தொடங்கி வைத்து தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் பேசியதாவது, பாசிச சக்திகளை நேருக்கு நேர் நின்று எதிர்க்கும் துணிவு கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமே உள்ளது. ஹிட்லரை, முசோலினியை எதிர்த்து களத்தில நின்று போரிட்டு வெற்றிபெற்ற அனுபவம் கம்யூனிஸ்ட்டுகளுக்கு மட்டுமே உள்ளது. மற்ற கட்சிகளுக்கு அந்த அனுபவம் இல்லை.அதேபோல் நிலக்குவியலை எதிர்த்து போராடி உழுபவர்களுக்கு நிலத்தை பிரித்துக் கொடுத்ததும் கம்யூனிஸ்ட்டுகள்தான்.1000ஏக்கர்,2000ஏக்கர் நிலங்களை எடுக்க தெலுங்கானா 30 வருட போராட்டம், தஞ்சை விவசாயிகள் போராட்ட அனுபவம், வத்திராயிருப்பு விவசாயிகள் போராட்ட அனுபவம் கம்யூனிஸ்ட்டுகளிடம் மட்டுமே உள்ளது.

இம்மாவட்டத்தில் நீங்கள் பாதயாத்திரையாக 3குழுக்கள் கிராமம் கிராமமாக நடந்து சென்று முன்னேற்ற மாவட்டமாக்கு வதற்கான ஆலோசனைகளையும் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கி இருக்கிறீரகள். அதேபோல் தமிழகத்திலேயே கட்சியிலும் முதன்மை மாவட்டமாக வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மகேந்திரன் பேசினார்.




மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி, வி.அழகிரிசாமி, தகஇபெ மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் உள்ளிட்டோர் பேசினர். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் வேலை அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார். விவாதத்திற்குப் பின் வேலை அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்ட செயலாளராக பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார். பட்டாசு, தீப்பெட்டி, கைத்தறி, பாண்டேஜ் துணி, நூற்பாலை தொழில்களை பாதுகாக்க வேண்டும். விவசாய, 100 நாள் வேலைகள் உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. நகர செயலாளர் கே.மூர்த்தி நன்றி கூறினார்.

## கரூர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கரூர் மாவட்ட மாநாடு வெங்கமேடு தோழர்கள் கே.எஸ்.நேதாஜி, கே.குப்புசாமி, எஸ்.வளர்மதி ஆகியோர் தலமையில் நடைபெற்றது. எம்.லட்சுமி காந்தன் வரவேற்று பேசினார்.மாநாட்டை துவக்கி வைத்து மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் பேசினார்.மாநாட்டை வாழ்த்தி மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி பேசினார். மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம் வேலை அறிக்கை சமர்பித்து பேசினார். மாவட்ட செயலாளராக கே.என்.நாட்ராயன் தேர்வு செய்யப்பட்டார். மாவட்ட மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.


கரூர் நகரம் போக்குவரத்து நெரிசலால் சிக்கி திணறுகிறது. எனவே புதியபஸ் நிலையம் அமைக்கும் பணிகளை உடனே துவக்க வேண்டும். கரூர் அமாரவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேலப்பாளையம் கோயம்பள்ளி பாலத்தை உடனே திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். குளித்தலை அரசு மருத்துவ மனையை கரூர் மாவட்ட தலைமை மருத்துவ மனையாக தரம் உயர்த்தப்பட வேண்டும். க.பரமத்தியை தலைமையிடமாக கொண்டு புதிய தாலுகா அமைக்க வேண்டும்.

கரூர் புறவழிச்சாலை கரூர் ரயில் நிலையத்தை இணைக்கும் வகையில் உருவாக்கபட்ட சாலை பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதை உடனே துவங்க வேண்டும்.

கரூரில் ஜவுளி தொழில் பெரும் அன்னியச் செலவானி ஈட்டி தருகிறது. எனவே ஜவுளி தொழில் சார்ந்த தொழில்நுட்ப கல்லூரி கிணிறிசி,பிணிறிசி சார்பில் துவங்க வேண்டும். கரூர் மாநகராட்சி பகுதிகளில் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

கரூர் நகராட்சியின் சார்பில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர், முன்னாள் கரூர் நகர்மன்ற உறுப்பினராக செயல்பட்ட தோழர். உடையவர் வாழ்ந்த தெருவின் பெயரை “உடையவர் தெரு” என பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

கரூரில் டாக்டர் அம்பேத்கர் சிலை வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25–வது தமிழ் மாநில மாநாட்டு சிறப்பிதழ் ஜனசக்தியின் சார்பில் வெளிவர உள்ளது. 1925 டிசம்பர் 26ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கம் முதல் 24வது மாநில மாநாடு வரை வரலாற்று விவர குறிப்புகள் படங்களுடன் சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. பொக்கிஷம் போல் பாதுகாத்து அவ்வப்போது படித்து பயன் பெறலாம்.**



### விளம்பரக் கட்டணம்

| | | | | |
|---|---|---|---|---|
| அட்டை | முதல்பக்கம் | கலர் | - | 50,000 |
| அட்டை | கடைசிபக்கம் | கலர் | - | 45,000 |
| அட்டை | 2-ம் பக்கம் | கலர் | - | 40,000 |
| அட்டை | 3-ம் பக்கம் | கலர் | - | 35,000 |
| உள்பக்கம் | முழுப்பக்கம் | கலர் | - | 30,000 |
| உள்பக்கம் | அரைப்பக்கம் | கலர் | - | 15,000 |
| உள்பக்கம் | கால்பக்கம் | கலர் | - | 7,500 |
| உள்பக்கம் | க/வெள்ளை | முழுப்பக்கம் | - | 20,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | அரைப்பக்கம் | - | 10,000 |
| உள்பக்கம் | க/வெள்ளை | கால் பக்கம் | - | 5,000 |

Janasakthi Trust
பணம் செலுத்தும் விபரம்
A/C. NO. 1083 0200 0009 999
IFC. NO. 0001083
Indian Overseas Bank
Mylapore Branch
Chennai - 600 004
புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்

புதியதோர் உலகம் செய்வோம் ஜனசக்தி மக்கள் வாரஇதழ்
விளம்பரம் அனுப்ப வேண்டிய முகவரி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
16/142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை – 600 014,
செல்: 8220468816, 9444331138
இ.மெயில். info.janasakthi@gmail.com





## ஜனசக்தி சுவர் விளம்பரம்

மணப்பாறையில் நடைபெற உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி புறநகர் மாவட்ட 23வது மாநாட்டு சுவர் விளம்பரத்துடன் கட்சியின் போர்வாள் ஜனசக்தி வார இதழ் விளம்பரம் ரயில் நிலையம் மற்றும் போருந்து நிலையம் செல்லும் வழியில் எழுதப்பட்டு உள்ளது.

## இந்த வார தம்பிக்குறள்

### 77. பேயறிவு

**மக்களை நம்பாத மாவறியும் பேயறிவாம்**
**திக்கறிந்தார் செப்பிய திது.**

மக்களை நம்பாதவர்கள் பேரறிவாளர்களாக இருப்பினும், அவர்கள் பேயறிவு உடையவர்கள். என உலக அறிவறிந்த மக்கள் கூறியுள்ளனர்.(மக்களை நம்பாத அறிவு தீய அறிவே).

**மக்களை நம்புவதற்கு வேண்டுஉம் புத்தறிவு**
**மக்கிய ஆகா அதற்கு.**

மக்களை நம்பி அவர்களிடம் பெறும் அறிவை (ஆசானறிவாகக்) கொள்ளாதவர்கள் பழைமை அறிவுடையவர்கள். மக்களை நம்பவும் புத்தறிவு தேவைப்படுகிறது. (புத்தறிவு – இயக்க இயல் அறிவு)

## சுங்கச்சாவடியை அகற்றுக

மதுரையை அடுத்த கப்பலூர் சுங்கச்சாவடி, திருமங்கலம் நகர் பகுதியின் அருகில் இருப்பதால் நகர் பகுதியில் இருந்து வரும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் பெரும் அவதி அடைந்துள்ளனர். இதனை கண்டித்து சுங்க கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்று கடந்த சில நாட்களாக அப்பகுதியினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கப்பலூர் சுங்க சாவடியை அகற்றக்கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் பேனர் வைத்து ஒன்றிய அரசுக்கு எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.

## மதவெறியர்களை கைது செய்க!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொப்பம்பட்டி ஒன்றிய குழு சார்பாக வயலூர் பேருந்து நிலையம் முன்பாக பா.ஜ.க., இந்து முன்னணி அமைப்பு மற்றும் காவல்துறையை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.குமரேசன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் கண்டன உரையாற்றினார். மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.மீனாட்சி சுந்தரம், பழனி நகர செயலாளர் ஏ.கௌசல்யா, தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் இரா.சிவராஜ், தொப்பம்பட்டி ஒன்றிய து.செயலாளர் ஏ.வெள்ளைச்சாமி மற்றும் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மிடாப்பட்டி கிராமத்தில் மகுடேஸ்வரன் இல்லத்தில் அத்துமீறி தாக்குதல் நடத்திய விக்னேஷ் என்பவரை உடனடியாக கைது செய்.

21.06.2022 அன்று சட்டத்திற்குப் புறம்பாக தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரியும் இஸ்லாமிய பெண் அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் தடுத்ததோடு, அவரை கொச்சையான வார்த்தைகளால் மதக்கலவரத்தை தூண்டும் வகையில் பேசிய பா.ஜ.க. குண்டர்களை கைது செய். தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மை மக்களை சமூகத்திலிருந்து பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடு என முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

## சமாதான ஒருமைப்பாட்டுக் கழக சேலம் மாவட்ட அமைப்புக்குழு தேர்வு

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் சேலம் அமைப்புக் குழுக் கூட்டம். சேலத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கருணைதாஸ் தலைமை தாங்கினார். ஐப்சோ மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், சிறப்புரையாற்றினார். சேலம் மாவட்ட அமைப்பாளராக லோகநாதன் ,துணை அமைப்பாளராக சௌந்திரராஜன்,அமைப்புக்குழு உறுப்பினர்களாக ஜி.செங்கொடி, ஜி.கல்பனா, ஏ.மாதையன், ப.நீலகண்டன், பி.வேலன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் சேலம் மாவட்ட மாநாட்டை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## ஆட்டோ தொழிலாளர் சங்க கொடியேற்று விழா

ஈரோடு பேருந்து நிலையம் அருகே, ஏஐடியுசி ஆட்டோ தொழிலாளர் சங்க கொடியேற்றுவிழா மற்றும் பெயர்ப்பலகை திறப்பு விழா நடைபெற்றது. விழாவில், ஆட்டோ சங்க ஈரோடு வட்டார நிர்வாகிகள் கே.எஸ்.நல்லசாமி, ஏ.செல்வராஜ், ஜி.ராஜு, சி.குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏஐடியுசி ஈரோடு மாவட்ட அனைத்து வாகன ஓட்டுனர்கள் சங்க மாவட்டச் செயலாளர் எல்.சிவராமன் கொடி யேற்றிவைத்தும், சங்க மாவட்டத் தலைவர் எஸ்.டி.பிரபாகரன் சங்க பெயர்ப் பலகையை திறந்து வைத்தும் சிறப்புரை ஆற்றினர். மூத்த தோழர் எஸ்.மகாலிங்கம், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் வி.செல்வராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வட்டாரச் செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம், வட்டார துணைச் செயலாளர் எம்.கல்யாணசுந்தரம், வட்டாரப் பொருளாளர் என்.ரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.




### கூலிபாளையத்தில் ரயில்கள் நிறுத்தி செல்ல

# கே.சுப்பராயன் எம்.பி.யிடம் சிபிஎம் நேரில் கோரிக்கை



திருப்பூரை அடுத்தகூலிபாளையம் ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில் களை நிறுத்திச் செல்ல உரிய நடவடிக்கை எடுக்குமாறு மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் திருப் பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்ப ராயனிடம் கோரிக்கை மனு அளித் தனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் திருப்பூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.காளியப்பன் திருப்பூர் எம்.பி. கே.சுப்பராயன் அலுவலகத்தில் அவரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். இம்மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:

தொழில் நகரமான திருப்பூர் மிகப் பெரும் போக்குவரத்து நெருக்கடி யில் சிக்கித் தவிக்கிறது. நகரின் விரி வாக்கத்திற்கு ஏற்றவாறு போக்கு வரத்து வழித்தடங்கள் மேம்படுத்தப் படவில்லை. சாலைப் போக்குவரத்தை மட்டுமே திருப்பூர் மாநகரில் பெரும் பகுதி நம்பி இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். மாற்று ஏற்பாடாக ரயில் பயணத்தையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அதிகமாக விடப் பட்டால் திருப்பூர் மாநகரத்தின் ஒரு பகுதியும், கிராமங்களைச் சார்ந்த ஒரு பகுதி மக்களும் என ஒரு லட் சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் பெற முடியும். அதற்கேற்ப திட்டமிட வேண்டும். இந்த பிராந் தியத்தில் ரயில் வழி பயணம் துவங் கியதிலிருந்து கூலிபாளையம் ரயில்நிலையம் செயல்பட்டு வந்தது. கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இந்த ரயில்நிலையம் மூடப்பட்டது. இதற்கு இங்கு குறைந்த அளவு பயணிகள் வந்து செல்வதாக சேலம் கோட்ட ரயில்வே நிர்வாகம் காரணம் காட்டுகின்றனர்.

கூலிபாளையம் ரயில் நிலையத் தைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதிய குடியிருப்பு பகுதிகள் ஏராளமாக உருவாகியிருக்கின்றன.

கூலிபாளையம் ரயில் நிலையத் தில் இருந்து திருச்சி, பாலக்காடு தேசிய நெடுஞ்சாலை ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும், கோவை – சேலம் தேசிய நெடுஞ்சாலை எட்டு கிலோமீட்டர் தொலைவிலும் உள்ளது. சரக்கு போக்குவரத்திற்கும் இந்தஇடத் திலிருந்து மற்ற பகுதிகளுக்கு ஏற்றி செல்வதற்கு உகந்த சுற்றுச்சாலையும் அருகாமையில் உள்ளது. எனவே, கடந்த 7 வருடங்களுக்கு முன்பு இயங்கி வந்த ரயில்களை மீண்டும் கூலிபாளையம் ரயில் நிலையத்தில் நின்று செல்லும் வகையில் நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு மனுவில் கூறியிருந்தனர். இந்த சந்திப்பின்போது மாவட்டக்குழு உறுப்பினர் ஆ.சிகாமணி, வடக்கு ஒன்றியக்குழு உறுப்பினர் மகா லிங்கம், முன்னாள் ஒன்றியச் செய லாளர் கே.பழனிசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### சிபிஎம் கேரள மாநில குழு அலுவலகம் மீது

## வெடிகுண்டு வீசி தாக்குதல்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜூன் மாதம் 30 ஆம் நாள் இரவு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில குழு அலுவலகம் மீது வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்தக் கோழைத்தனமான தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்திட அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளுக்கும் அறைகூவல் விடுக்கிறோம். ஜனநாயகத்தின் மீதான இது போன்ற தாக்குதல்களைச் சகித்துக் கொள்ள முடியாது. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்திட வேண்டும். இந்தத் தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஆம்பலாப்பட்டு கோ.சக்திவேல் தந்தை தோழர் அ.கோவிந்தராசு மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தோழர், மிகுந்த கொள்கை பிடிப்பாளர், ஒரத்தநாடு, ஆம்பலாப்பட்டு தெற்கு, புலவர் குடிக்காடு தெருவில் வாழ்ந்த அ.கோவிந்தராசு(78) ஜூன் 29 அன்று இயற்கை எய்தினார். தனது மகன்கள் இருவரையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்து, மக்கள் நலன், சமுதாய மாற்றத்திற்காக ஈடுபட வைத்தவர். இவருக்கு கண்ணம்மாள் என்ற மனைவியும், மணிமேகலை என்ற மகளும், சக்திவேல், ரவிச்சந்திரன் ஆகிய மகன்களும் உள்ளனர். ரவிச்சந்திரன் அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார். சக்திவேல் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினராக உள்ளார். இவரது மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன், தேசியக் குழு உறுப்பினர் கோ.பழனிச்சாமி, தஞ்சாவூர் தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி, வடக்கு மாவட்ட



செயலாளர் மு.அ.பாரதி, ஒன்றிய செயலாளர்கள் வாசு இளையராஜா, க.பூபேஷ் குப்தா, கோ.அன்பழகன், வ.விஜயன், அ.எஸ்தர்வலீமா, மு.பால்ராஜ், கட்சி நிர்வாகிகள் வீ.கல்யாணசுந்தரம், சீனி. முருகையன், ந.பாலசுப்பிரமணியன், ம.விஜயலட்சுமி , பா.பாலசுந்தரம், சி.பக்கிரி சாமி, அ.கலியபெருமாள், சோ.பாஸ்கர், ஏஐடியூசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்டத் தலைவர் வெ.சேவையா, அரசு போக்குவரத்து சம்மேளன துணைத் தலைவர் துரை.மதிவாணன், தெரு வியாபாரிகள் சங்க மாநில பொருளாளர் ஆர்.பி.முத்துக்குமரன் மற்றும் மாவட்ட முழுவதிலிருந்தும் கட்சியின் ஒன்றிய செயலாளர்கள், முன்னணித் தோழர்கள், அனைத்து கட்சி தலைவர்கள், கோவிந்தராசு உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**ஆகஸ்ட் 6,7,8,9 திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு**

# குறுவை, சம்பா பயிர்களுக்கு போதிய இடுபொருட்கள் தட்டுபாடின்றி வழங்கிடுக!

### திருத்துறைப்பூண்டி ஒன்றியக் குழு கூட்டத்தில் தீர்மானம்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் ஊராட்சி ஒன்றியகூட்ட அரங்கில்நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக்குழுவின் தலைவர் அ.பாஸ்கர் தலைமை ஏற்று நடத்தினார். வட்டார வளர்ச்சி அலுவலர் என்.விஜயகுமார் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) எஸ்.சிவக்குமார் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கிராமபுறங் களுக்கு வளர்ச்சி திட்டபணி களுக்காக அரசு போதிய நிதி ஒதுக்கிட வேண்டும்., நடைபெற இருக் கின்ற பருவகால குறுவை மற் றும் சம்பா பயிர்களுக்கு தேவையான விதை நெல், உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவை தட்டுபாடின்றி விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும், நூறுநாள் வேலை யினை தொழிலாளர்கள் பாதிக்காத வகையில் காலை 9 மணிக்கு மேல் துவங்கிட வேண்டும்.

போன்ற முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<ins>தஞ்சை தீ விபத்தில் மரணமடைந்த முன்னாள் ராணுவ வீரர் குடும்பத்திற்கு</ins>

# ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்குக!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: தஞ்சை ஜெபமாலைபுரம் குப்பை கிடங்கிலிருந்து தீ பரவி செக்கடி தெருவில் ஒன்பது குடிசைகள் எரிந்து முழுதுமாக சேதம் அடைந்துள்ளன. பலர் தீக்காயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் படுகாயமடைந்து தீவிர சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ராணுவ வீரர் ஆரோக்கியசாமி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளார். தீ விபத்தில் மரணம் அடைந்த ஆரோக்கியசாமி குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கவும், தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டித் தரவும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு லட்ச ரூபாய் நிவாரண வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழ்நாடு அரசை கேட்டுக்கொள்கிறோம்.

ஜெபமாலைபுரம் பகுதியில் குடியிருப்புகள் இல்லாத காலத்தில் ஏற்படுத்தப்பட்டது இந்த குப்பைகிடங்கு ஆகும். குடியிருப்புகள் வந்த பிறகு அந்த குப்பை கிடங்கை மாற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும், பகுதி மக்களும் தொடர்ந்து போராடி வந்திருக்கின்றார்கள்.

குப்பை கிடங்கு தரம் பிரிப்பது, மின்சார உற்பத்தி உள்ளிட்டவைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு எவ்வித பணிகளும் முறையாக நடை பெறவில்லை.

இங்கு இருந்து வெளியேறும் புகை மண்டலங்களால் தஞ்சையின் வடக்கு வீதி, மேலவீதி, தெற்குவீதி, பழைய பேருந்து நிலையம் உள்ளிட்ட பகுதிகள் புகை மண்டலமாக காட்சியளிப்பது வாடிக்கையாக உள்ளது. தற்போது ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்திருப்பது, குடிசைகளும் எரிந்து, தீக்காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், சுகாதார சீர்கேடுகள், தொற்றுகள் பரவக்கூடிய அபாயம் உள்ளிட்ட காரணங்கள் மற்றும் பகுதி மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற அடிப்படையிலும், தஞ்சை நகரின் ஒதுக்குப்புறமான இடத்தில் குப்பை கிடங்கை காலம் தாழ்த்தாது மாற்ற வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# மேலவளவு தியாகிகள் தினம்



மதுரை மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன் உள்ளிட்ட 7 பேர் கொலை செய்யப்பட்ட 25 ஆம் ஆண்டு நினைவாக ஜூன் 30 அன்று அனுசரிக்கப்பட்டது.

மேலவளவு ஊராட்சி 1996 இல் பட்டியல் சாதியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் பட்டியல் இனத்தவர்கள் எவரும் ஊராட்சி மன்ற தலைவர் தேர்தலில் போட்டி யிடக்கூடாது என ஆதிக்க சாதியினரால் மிரட்டப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அக்டோபர் 09, 1996 மற்றும் திசம்பர் 28, 1996 ஆகிய தேதிகளில் தேர்தல் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு திசம்பர் 31, 1996 அன்று தேர்தல் நடைபெற்றது. இதில் முருகேசன் வெற்றி பெற்றார். மேலும் தனக்கும், தான் சார்ந்தவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மற்றும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இந்நிலையில் 1997 ஆம் ஆண்டு சூன் 30 அன்று மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன் மற்றும் தலித் மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றுவிட்டு, பேருந்தில் திரும்பும்போது மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன், துணைத் தலைவர் மூக்கன், ராஜா, செல்லத்துரை, சேவகமூர்த்தி, பூபதி மற்றும் சௌந்தரராஜன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். முருகேசன் தலை துண்டிக்கப்பட்டு, அரை கிலோமீட்டர் தொலைவில் உள்ள கிணற்றில் வீசி எறியப்பட்டது.

இவ்வழக்கு கிரிமினல் வழக்காக விசாரிக்கப்பட்டதே தவிர வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படவில்லை. இவ்வழக்கின் தீர்ப்பு 26 சூலை, 2001 அன்று கொடுக்கப்பட்டது. அதன்படி வழக்கில் 17 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 2008 இல், அண்ணா பிறந்தநாளில் மூன்று பேர் நன்னடத்தைக் காரணமாக திமுக ஆட்சி காலத்தில் முன்விடுதலை செய்யப்பட்டனர். மீதமுள்ள 14 பேரில் ஒருவர் உயிரிழந்த நிலையில், எம். ஜி. ஆர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மீதமுள்ள 13 பேர் அதிமுக ஆட்சிக்காலத்தில் 2019 இல் விடுதலை செய்யப்பட்டனர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அஞ்சலி

அச்சம்பவத்தின் 25ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி, மேலவளவு காலனியில் உள்ள 7 பேரின் நினைவிடமான விடுதலைக்களம் மண்டபத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், முருகேசன் குடும்பத்தினர்கள் மற்றும் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நினைவஞ்சலிக் கூட்டத்துக்கு புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ், புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் க.மெய்யர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் பி.முத்துவேல், மூக்கம்மாள், மேலூர் தாலுகா செயலாளர் பெ.சுரேஷ்குமார், தாலுகா துணைச் செயலாளர்கள் சே.சந்திவீரன், பா.நாகராஜன், தாலுகா பொருளாளர் ப.இரவி, கிழக்கு தாலுகா செயலாளர் இராமேஸ்வரி, திருப்பரங்குன்றம் தாலுகா செயலாளர் விஜயா, திருமங்கலம் தாலுகா செயலாளர் நல்லகுரும்பன், வாடிப்பட்டி தாலுகா செயலாளர் சுதாகரன், இந்திய மாதர் தேசிய சம்மேளனம் புறநகர் மாவட்டச் செயலாளர் நாகஜோதி, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்டச் செயலாளர் மூர்த்தி, பூமிநாதன், திலகர், சையது கான் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## யஷ்வந்த் சின்காவை நேரில் சந்தித்து டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ. ஆதரவு

நடைபெற உள்ள குடியரசுத் தலைவர் தேர்தலில் எதிர் கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள யஷ்வந்த் சின்கா அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழக முதல்வரை சந்தித்து ஆதரவு கோரிய போது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் ஆதரவு தெரிவித்து பேசினார்.

## தோழர் சதுரானன் மிஸ்ரா நினைவு தினம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப் பினரும் முன்னாள் இந்திய வேளாண் துறை அமைச்சருமான சதுரானன் மிஸ்ரா நினைவு நாள் கூட்டம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாகப்பட்டினம் ஒன்றிய குழு சார்பில், ஒன்றிய செயலாளர் ஜெ.ஏ.ரஹ்மான் தலைமையில் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் வழக்கறிஞர் கோ பாண்டியன் சதுரானன் மிஸ்ரா திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினார் .

பிஹார் மாவட்டத்திலிருந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக 10 ஆண்டுகள் செயல்பட்டவர்; தொழிற் சங்கவாதியாகவும் திகழ்ந்தார் . நாடாளுமன்ற உறுப்பினராக 1984 மற்றும் 1990களில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996 இல் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனதா தள ஐக்கிய முன்னணி அரசில் மத்திய விவசாய அமைச்சராக 1998 வரை பணியாற்றினார்.

விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். விவசாயத் தொழிலாளர்களுக்கு நூறு நாள் வேலைத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்திய வரலாற்றில் முதல் கம்யூனிஸ்ட் மத்திய அமைச்சராக இருந்த இந்திரஜித் குப்தாவுடன் சேர்ந்து இவரும் ஒருவராக திகழ்ந்தார். தனது 86வது வயதில் 2011 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் நாள் காலமானார் என சதுரானன் மிஸ்ரா பற்றி கருத்துரைத்து பேசினர். மாவட்ட பொருளாளர் வி.இராமலிங்கம், விவசாயிகள் சங்க ஒன்றிய செயலாளர் சுப்ரமணியன், நகரச் செயலாளர் பி.கே.பி. குணாநிதி, மாதர் சம்மேளத்தின் ஒன்றிய செயலாளர் இ.சுமதி மற்றும் எம்.கே.சக்திவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர். ஒன்றிய துணைச் செயலாளர் கே.இ. இலரா நன்றி தெரிவித்து பேசினார்.




<ins>பரமக்குடி தெளிச்சாத்தநல்லூரில்</ins>

## கலை இலக்கியப் பெருமன்ற புதிய கிளை

பரமக்குடி புறநகர் பகுதி, பரமக்குடி ஒன்றியம் தெளிச்சாத்த நல்லூர்ரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் புதிய கிளை துவக்க விழா வே. சேதுராஜன் தலைமையில் நடை பெற்றது.தெளிச்சாத்தநல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர் சுமதி பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற நோக்கங்கள், செயல் பாடுகள் குறித்தும், மாவட்டச் செயலாளர் ந.சேகரன் உரையாற்றினார். துவக்க விழாவை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் எழுத்தாளர் நீ.சு.பெருமாள், வக்கீல் லிங்கமூர்த்தி, எழுத்தாளர் உரப்புளி நா.ஜெயராமன், தன்னம்பிக்கை பேச்சாளர் கே.செந்தில், ஏஐடியூசி தலைவர் செல்வராஜ்உள்பட பலர் பேசினர்.

தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் நூலை குறித்து தலைமை ஆசிரியர் (பணி நிறைவு) சோணைமுத்து ஆய்வுரை நிகழ்த்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தெளிச்சாத்தநல்லூர் கிளைக்கு தலைவராக, வழக்குரைஞர் லிங்கமூர்த்தி,செயலாளராக என் சிவராமன், பொருளாளராக வே.சேதுராஜன், துணைத்தலைவராக ஆசிரியர் சேவியர் இணைச்செயலாளராக ராம்கோ மனோகரன் ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தெளிச்சாத்தநல்லூரில் ஊராட்சி சார்பில் புதிய நூலகம் அமைக்கக் கோரியும், ஊராட்சிக்குட்பட்ட சோமநாதபுரம் கிளை அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகத்தை தொய்வின்றி இயங்கிட ஆவண செய்ய வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆகஸ்ட் 6,7,8,9 திருப்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு**

## அன்புச்செல்வி சிறுவர் கதை

தமிழக இலக்கிய உலகில் சிறுவர்களுக்கான கதைகளும், இலக்கியங்களும் மிக குறைவாகவே வருகிறது. அந்தக் குறையைப் போக்குவதற்காக சிலர் சிறுவர் இலக்கியங்களை படைத்துக் கொண்டு உள்ளனர். தமிழக அரசு கொண்டு வந்த தொட்டில் குழந்தைகள் திட்டத்தின் சிறப்பை விளக்கும் விதமாக அன்புச்செல்வி என்கிற இந்த சிறுகதை வெளிவந்துள்ளது.

“ ஆயிரம் உறவுகள் அமைந்தாலும் அது ‘அம்மா’வைப் போல் வருமா? மனித உயிர்கள் இம்மண்ணில் பிறக்க தன்னைத் தந்து மறுபிறவி எடுக்கும் பெண்ணவள் இங்கே அம்மா ஆகிறாா் “ ஆனால் இப்படிப்பட்ட தாயின் முகம் காண முடியாத குழந்தைகள் இந்த உலகத்தில் வாழ நேர்வது எப்பேர்பட்ட கொடுமை?




இதைவிடப் பெரும் கொடுமை, பிறக்கும் குழந்தை, பெண் குழந்தையாக இருந்தால் அந்தக் குழந்தைக்கு கள்ளிப்பால் கொடுத்து கொல்லும் கொடுமை. இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் திட்டம் தான் முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களால் கொண்டு வரப்பட்ட தொட்டில் குழந்தை திட்டம்

பிறந்தது முதல் தாய் முகம் காண மழலைகளும் வாழ்கின்ற பூமியில், அக்குழந்தைகளின் ஏக்கம், பசி, தாகம்,பட்டினி என பட்டியலுக்குள் அடங்கா இன்னல்களைத் தாங்கி வளரும் குழந்தைகளின் வாழ்க்கை எப்படி? எவ்விதம் என கேள்விகள் பல எழுகின்றன?

“நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி...! சின்னஞ் சிறு கைகளை நம்பி ஒரு சரித்திரம் இருக்குது தம்பி...! “ இப்படி நாடு நம்பியிருக்கும் நல்ல பிள்ளைகளை அன்பு காட்டி அரவணைத்து வளர்ப்பதற்கு தாய் இல்லையென்றால் அந்தப் பிள்ளைகளின் கதி என்ன ஆகும்? இதுவே சமூக தீமைகளுக்கு அடி உரம் ஆகும். அப்படி ஆகிவிடக் கூடாது என்பதற்காக தான் தமிழக அரசு தொட்டில் குழந்தைகள் திட்டத்தை கொண்டு வந்தது.

குப்பை மேட்டில் அனாதையாக கிடந்து கண்டெடுக்கப்பட்ட ஒரு பெண் குழந்தை, இந்த சமூகத்தை மாற்றுவதற்கு எவ்வாறு பயன்படும் என்பதை இந்த அன்பு செல்வி என்கிற கதையில் நூலாசிரியர் நெல்லை செல்வம் விவரித்திருக்கிறார். இந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்திருக்கிறது இது மூன்றாவது பாகம். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்

– இன்சுவை பாரதி


**ஆசிரியர் : நெல்லை செல்வம்**
**வெளியீடு : நெல்லை செல்வம், எண் 9, சிவன் கோயில் தெற்கு தெரு,கொக்கிரகுளம், திருநெல்வேலி – 627009**
**பக்கங்கள் : 192 விலை: ரூ.100**

# நூல் நயம்

## அடுக்கம்

மறைந்த எழுத்தாளர் டி. செல்வராஜ் அவர்கள் எழுதிய கடைசி நாவல் அடுக்கம். இந்த நூல் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக உயர்ந்த ஒருவர் சந்திக்கும் இடர்பாடுகள், சமூகப்பிரச்சனைகள், சாதிய ஒடுக்குமுறைகள், அவமதிப்புகள் இவைகளைக் குறித்தெல்லாம் ஒரு மாவட்ட ஆட்சியரின் கண்ணோட்டத்திலிருந்து சொல்லப்பட்டுள்ளது.

அரசு இயந்திரத்தின் முதன்மைப் பங்கான ஆட்சிப்பணி, காவல்துறை ஆகியவற்றை பின்னணியாகக் கொண்டு அதிகார வர்க்கத்தின் உள் முரண்பாட்டையும், அரசு அதிகார வரம்பிற்குள் அரசியல்வாதிகளின் இடையூறுகளையும், அதன் மோசமான விளைவுகளையும் படம்பிடித்து காட்டுகிறது இந்த நாவல். இதில் அரசு அதிகாரிகள் அடையும் அவமானங்களை காட்டுவதை விடச் சமூக மாற்றத்திற்கான அவர்களின் போராட்ட உணர்வை உயர்த்திப் பிடிக்கிறது. அரசு இயந்திரத்தின் சிக்கலான இயக்கத்தை காட்டுவதோடு, அதிகார வர்க்கத்திற்குள் தொழிற்படும் சாதியம், பெரும் தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவது,விவசாயம் அழிந்து போவது, பழங்குடியினர் விளிம்புநிலை படுத்தப்படுவது, கிரானைட் கொள்ளை ஆகிய சமகால பிரச்னைகளும் இந்த நாவலில் விரிவான சித்தரிப்பை பெற்றுள்ளன.




இன்று வளர்ச்சி என்கிற பெயரில் சமூகத்தில் அடித்தட்டில் இருக்கிற மக்கள் எவ்வாறெல்லாம் சுரண்டப் படுகிறார்கள் என்பதை இந்நாவல் சித்திரிக் கிறது. இயற்கையை சீரழிக்கும் நவீன தொழில்மயமாக்கம் மானுடத்தின் முன்னேற் றமா?அல்லது அழிவின் ஆரம்பமா? என்ற கேள் வியை நாவலின் கதை தலைவன் நாராயணன் எழுப்பு கிறார். கதைத் தலைவன் நாராயணன் நெஞ்சம் மட்டும் அல்ல !. இதைப் படிக்கிற ஒவ்வொரு இந்தியரின் நெஞ்சும் குமுறுகிறது. இயற்கையை சூறையாடும் பெரும் நிறுவனங்களால் எத்தனை மலைகள்? எத்தனை காடுகள்? எத்தனை ஆறுகள்? இந்தியாவில் அழிக்கப்பட்டுவிட்டன என்பதை எண்ணி நாம் வேதனைப்பட தான் முடிகிறது. இயற்கையை பாதுகாக்க போராடுபவர்களை அரசு தயாராக வைத்துள்ள வேறு வேறு முத்திரைகளை குத்தி வேட்டையாட படுகிறார்கள். இவற்றையெல்லாம் சமாளித்து தான் சமூகத்தை காக்க போராட வேண்டியிருக்கிறது.

இந்த நாவலின் மூலமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளை, சாதியின் பெயரால் சந்திக்கும் இடர்பாடுகளை மக்கள் முன் கொண்டு வந்துள்ளார் எழுத்தாளர் செல்வராஜ் அவர்கள். இந்த நாவல் அவரது மறைவுக்குப் பின்னால் வந்தாலும் அவர் மக்கள் மனதில் மறையாது நிலை பெறுவதற்கு இந்த நாவல் அடித்தளமாக இருக்கும். இந்நாவலை அனைவரும் வாங்கிப் படிக்குமாறு வேண்டுகிறோம் .

**– சமரன்**

**நூலாசிரியர் : டி. செல்வராஜ்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி,சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 280 விலை: ரூ.280**


**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில்




# அதிகரிக்கும் பணவீக்கம்!

உலக நாடுகளில் தொடர்ந்து பணவீக்கம் அதிகரித்து வருகிறது. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் கடந்த 30 வருடங்களில் இல்லாத அளவு விலைவாசி அதிகரித்து வருகிறது என்று **Pew Research Center** எனும் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதத்தில் அமெரிக்காவில் பணவீக்கம் 8.6% ஆக இருந்தது. 1981 ஆம் ஆண்டில் இருந்து இது வரையில், இதுவே உச்சபட்ச பணவீக்கம் ஆகும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டதாக அதிபர் ஜோ பிடன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா மட்டுமின்றி உலகின் பல நாடுகளில் விலைவாசி உயர்வு உச்சத்தைத் தொட் டுள்ளது. 2022 முதலாம் காலாண்டு நிலவரப்படி, துருக் கியில் பணவீக்கம் உலக நாடுகளிலேயே அதிக அளவில் உள்ளது. துருக்கியில் பணவீக்கம் 54.8% ஆக உள்ளது. விரைவில் இது 70% ஐ நெருங்கும் என எதிர்ப்பார்க் கப்படுகிறது. அர்ஜெண்டினாவில் பணவீக்கம் 60% ஐ நெருங்கப் போகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பணவீக்கம் மிக வேக மாக அதிகரித்து வரும் நாடுகளில் இஸ்ரேல் முதல் இடத்தில் உள்ளது. இஸ்ரேலில் பணவீக்கம் 4.1% ஆக உள்ளது. இஸ்ரேலுக்கு அடுத்து பணவீக்கம் அதிகரித்து வரும் நாடாக இத்தாலி உள்ளது. 2020 ஆம் ஆண்டு இத்தாலியில் 0.29% ஆக இருந்த பணவீக்கம் 2022 ல் 5.67% ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் 2022 மே மாதத்தின்படி பணவீக்கம் 15.88 % உள்ளது.

**Pew Research Center -** ஆய்வின்படி, 37 நாடுகளில், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சராசரி வருடாந்திர பணவீக்க விகிதம் 2020 முதல் காலாண்டில் இருந்ததை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது எனத் தெரிய வந்துள்ளது. இதற்கு கரோனா ஊரடங்கு மற்றும் உக்ரைன் – ரஷ்யா போர் ஆகியவை பிரதான காரணம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

கரோனா காலக்கட்டங்களில் வேலையிழப்பு பெருமளவு நிலவியது. மேலும் பொருட்கள் விநியோக சங்கிலிகள் பாதிக்கப்பட்டதால் உலக அளவில் தேக்க நிலை நிலவியது. இந்த நிலையில் மெல்ல மெல்ல பொருளாதாரம் மீட்டெடுக்கப்பட்ட சூழலில்தான் உக்ரைன் – ரஷ்யா இடையே போர் மூண்டது. இதையெடுத்து சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. கச்சா எண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவே தொடர்ந்து உலக நாடுகளில் பணவீக்கம் அதிகரித்து வருகிறது.

மேலும், ரஷ்யா மற்றும் உக்ரைனிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியை நம்பியிருக்கும் நாடுகள் தற்போது கடும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றன. குறிப்பாக, லெபனான், துனிஷியா, லிபியா, எகிப்து ஆகிய நாடுகள் கடும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு அந்நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

## விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டம்:
# ஈக்வடார் அரசாங்கம் அடிபணிந்தது!

அதிகரித்து வரும் உணவு மற்றும் எரிபொருட்கள் விலை உயர்வு காரணமாக கடந்த 15 நாட்களுக்கும் மேலாக ஈக்வடார் நாட்டில் மக்கள் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. சாலை மறியல் போன்ற போராட்ட வடிவங்கள் தீவிரமடைந்து, வாகனங்கள் எரிப்பு, கல்வீச்சு என்று வன்முறைகளும் வெடித்தெழுந்தன; எண்ணற்றோர் காயமடைந்துள்ளனர். சிலர் உயிர் இழந்துள்ளனர்.



விலைவாசியைக் கட்டுக்குள் வைப்பது, எரிபொருட்கள் விலையைக் கட்டுப்படுத்துவது, உர மானியம் வழங்குவது, வங்கி கடன் வசூலிப்பை நிறுத்தி வைப்பது, பழங்குடி மக்கள் பிரதேசங்களில் சுரங்கப் பணிகளை மேற்கொள்ளாமல் இருப்பது உள்ளிட்ட 10 கோரிக்கைகளை வலியுறுத்தி ஈக்வடார் நாட்டின் பூர்வகுடிமக்கள் குழு தீவிர தொடர் போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

15 நாட்களுக்கும் மேலாக நடை பெற்ற போராட்ட நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர ஈக்வ டார் நாட்டின் அரசாங்கமும், பூர்வ குடிமக்கள் குழுவும் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் விளைவாக , பெட்ரோல் மற்றும் டீசல் விலை குறைக்கப்படும். மேலும், இந்த ஒப்பந்தம் எண்ணெய் ஆய்வுப் பகுதிகளை விரிவாக்குவதற்கும் வரம்புகளை அமைக்கும் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள், தேசிய பூங்காக்கள் மற்றும் நீர் ஆதாரங்களில் சுரங்க நடவடிக்கைகளை தடை செய்யும். பூர்வகுடிமக்கள் குழுவின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண அரசாங்கத்திற்கு 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

“அரசு கொள்கைகள் ஏழைக ளின் பிரச்சனையை தீர்க்கவில்லை என்றால், மக்கள் எழுச்சி பெறுவார்கள்” என்று போராட்டக் குழு வினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.



–மு.வீரபாண்டியன்

# ஜி7! பணக்கார நாடுகளின்
# ஆதிக்க அரங்கம்!?

**ஜெர்மனியில் சில தினங்களுக்கு முன் ஜி7 நாடுகளின் அதிகாரபூர்வமான கூட்டம் நடைபெற்றது. ஜி7 நாடுகளில் அங்கம் பெறாத போதும், அழைப்பாளர்களாக இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் பங்கேற்றன.**

ஜி7–ல் அங்கம் பெரும் கீழ்காணும் நாடுகளான அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, கனடா, ஜப்பான், இத்தாலி ஆகிய 7 நாடுகளும் பணக்கார நாடுகள். நேட்டோ இராணுவக் கூட்டமைப்பிலும் இவை அங்கம் பெறுகின்றன.

உலகை ஆதிக்கம் செய்து, செல்வ செழிப்புள்ள இந்நாடுகளுக்கு வளர்முக நாடுகளின் அறிஞர்கள் சிலர் பெயர் சூட்டியுள்ளனர். ஆழ்ந்த அரசியல் பொருள் கொண்ட, அந்த பெயர் **(Rich Club)** "பணக்கார கிளப்" என்பது. அதாவது பணக்கார நாடுகளின் கேளிக்கை விடுதி. இன்னும் சில அறிஞர்கள் "உலக ஆதிக்க அரங்கம்" என்கிறார்கள். ஆரம்ப காலங்களில் அமெரிக்கா தவிர்த்து, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, கனடா, ஜப்பான் போன்ற நாடுகள் உலகை ஆதிக்கம் செய்தன; காலனிப்படுத்தின; விடுதலை இயக்கங்களை அடக்கி ஒடுக்கின.

பின்னர் விடுதலையை ஒடுக்கும் பணியில் அமெரிக்கா இணைந்து கொண்டது. விடுதலையை ஒடுக்குவது அமெரிக்கா சொல்லில் சர்வதேச பணி...!

உலகில் இவர்கள் தலையீடு இல்லாத நாடுகள் இல்லை. வர்த்தக ரீதியிலோ, இராணுவம் அல்லது அரசியல் ரீதியிலோ இவர்கள் தலையிடுவது மட்டுமல்ல, தங்கள் ஆதிக்கத்தின் கீழ் நாடுகளை சுற்றி வளைப்பது இவர்களின் நோக்கம்.

இப்போதும் கூட ஜி7 ஜெர்மணியில் ஏன் கூடினார்கள்? அவர்கள் நலன் தான்! இந்த ஏழு நாடுகள் தான் உலகை தீர்மானிக்குமாம்!


கூட்டத்தின் பேசுபொருள் இதனை நிரூபிக்கிறது.

1. உக்ரைனுக்கு அதி நவீன ஆயுத உதவி, இராணுவ நிதி உதவி
   (ரஷ்யாவை தோற்கடிப்பது)
2. ரஷ்யாவில் எரிசக்தி, எண்ணெய், தங்கம் உள்ளிட்டவைகளுக்கு தடை விதிப்பது
   (ரஷ்யாவின் எண்ணெய்க்கு இவர்கள் விலை நிர்ணயம் செய்வது)
3. ஜி7 நாடுகளின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவது
   (பணவீக்கத்தை உலகிற்கு பரவலாக்கி தாங்கள் தப்பிப்பது)
4. சீனாவின் ஒன் ரோடு – ஒன் பெல்ட் எனும் வரலாறு காணாத வர்த்தகத் திட்டத்தை முடக்குவது.
   (சீனாவிடம் நட்பு கொண்ட நாடுகளுக்கு பண உதவி செய்து சீனாவைத் தனிமைப்படுத்துவது)

இப்போது புரிகிறதல்லவா ஜி7 அவசரக் கூட்டம். இந்த 7 பணக்கார நாடுகளுக்குத்தான் இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் பரிசளித்திருக்கிறார்.

வாரணாசியின் கலைப்பொருட்கள், மொராதாபாத்தில் கைவினைபொருட்கள், நிஜமாபாத்தின் மண்பாண்ட பொருட்கள், உ.பி.யின் வாசனைப் பொருட்கள் என இந்திய கலை பொருட்களை வழங்கி உள்ளார். இந்த கலை பொருட்கள் யாவும் தொன்மைமிக்கவை. நேர்த்தியும், கலையும் மிகுந்தவை. இதன் இன்னொரு சிறப்பு இவையாவும் இந்து – முஸ்லீம் கைவினைஞர்களால் செய்யப்பட்டது. இந்த கலைப் பொருட்களில் இந்தியாவின் பன்முகம் அடங்கியுள்ளது.

முகலாயர்கள் இந்தியாவின் மீது படையெடுப்பதற்கு முன்னரே, மேற்கண்ட பகுதியில் இந்திய மக்கள் கைவினைப் பொருட்களில் தேர்ச்சி பெற்றிருந்தனர். முகலாயர்கள் இதனை கண்டு வியந்தனர்; கற்றுக்கொண்டனர். முகலாய கலைகள் இந்தியக் கலைக்குள் நிரம்பியது. அதுதான் இன்றைய வடிவம்.




அதுதான் பிரதமர் அளித்த பரிசு. சரி, 7 நாடுகளின் தலைவர்கள் பிரதமருக்கு என்ன கொடுத்தார்கள்?

எப்போதும் இந்த ஜி7 நாடுகள் தங்கள் சொந்த அரசியல் கரங்களால் கிண்டிய அல்வா அரசியல் "புவிசார் அரசியல் அல்வா" அதைத்தான் இந்தியாவிற்கு பரிசாக கொடுத்து இருப்பார்கள்.

ஜி 7 நாடுகள் இந்தியாவை உளப்பூர்வமாக அங்கீகரிக்கும் நாடுகள் இல்லை.

எனவேதான் அவர்கள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியாவின் பெயரை முன்மொழிவது இல்லை. அவர்களின் பட்டியலில் ஜெர்மனியும், ஜப்பானும் தான் இருக்கிறது.

இந்த ஜி 7 நாடுகளைவிட இந்தியா பெரிய ஜனநாயக நாடு. காலனி ஆதிக்கம் செய்யாத நாடு. பிற நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாத நாடு. அனைத்திற்கும் மேலாக அணிசேரா நாடு. இந்தியாவின் கலாச்சாரமும், புவிப்பரப்பும், மக்கள்தொகையும் என எதனைக் கணக்கிட்டாலும் ஒரு தவிர்க்க இயலாத நாடு இந்தியா.

**இதனை அங்கீகரித்து, பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியாவை முன்மொழிகிறோம் என சொல்லுமா ஜி.7. கீழ் இறங்கி சொன்னால் இந்த 7 நாடுகளும் தில்லாலங்கடி நாடுகள். ஜனநாயக வேடம் தரித்த ஆதிக்க நாடுகள். இரண்டு நாடுகள்தான் அன்றிலிருந்து இன்றுவரை இந்தியாவை நிரந்தரமாக பாதுகாப்பு கவுன்சிலில் இணைக்க வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றன.**

ஒன்று ரஷ்யா, இரண்டு கியூபா

சரி, 7 நாடுகள் கூடினார்கள் அல்லவா!? அவர்கள் என்ன பேசி இருக்க வேண்டும்.

உக்ரைன், ரஷ்யா போர் கூடாது. இதனை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். லட்சக்கணக்கான மக்கள் போரினால் புலம் பெயர்ந்து விட்டார்கள். உயிர்பலிகள் கூடுகிறது. இது வரலாற்று துயர். எனவே, பேச்சுவார்த்தை மூலம் போரை முடிவுக்குக் கொண்டுவரலாம் என பேசியிருக்க வேண்டும். அதற்கு மாறாக "பிராக்ஸி யுத்தம்" (ஒரு நாட்டை பின்னாலிருந்து தூண்டி போர் செய்வது) நடத்துவோம் என்பது, உக்ரைனுக்கு அதிநவீன போர்க் கருவிகள் தருவது என்பது எப்படி சரியாகும்!?

போருக்குக் காரணம் நேட்டோதான் என்பது வெளிப்படையாகிறது. ரஷ்யா, உக்ரைனோடு மட்டுமல்ல, 7 நாடுகளோடு போர் புரிகிறது. ஆப்கானில் நிலநடுக்கம், ஆயிரக்கணக்கில் மக்கள் வீடு வாசல் இழந்து விட்டனர், எப்படி உதவுவது என்று ஒரு சொல் உண்டா!?

அமெரிக்காவில் எல்லைப்புற புலம்பெயர் மக்கள் கன்டெய்னர்களில் 40க்கும் மேற்பட்டோர் செத்து கிடக்கிறார்கள். "மானுட துயர் குழு" இது பற்றி வாய் திறந்தார்களா? பணக்கார நாடுகள் இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு ஏதாவது செய்ய நினைத்தார்களா இவர்கள்!


ஜெர்மனியில் ஜி 7 என்று கூடியவர்கள் தான் மாண்ட்ரில் "நேட்டோ" நாடுகள் என கூடுகிறார்கள். ஜெர்மனியில் கூடும்போது ஜி 7, மாண்ட்ரிட்டில் கூடும்போது நேட்டோ.

எத்தனை முகம் இவர்களுக்கு. அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்பது போல உலகமும், 7 திருடர்களும் என்று சொல்லலாம்!

தொடர்புக்கு: **98408 54707**

## வலை வீச்சு









JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 09.07.2022 at Egmore RMS 1 / Patrika Channel. Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

### அக்னி பாத் திட்டத்தை ரத்து செய்யக்கோரி

# இடதுசாரி இளைஞர், மாணவர் அமைப்பினர் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்





அக்னிபாத் திட்டத்தை எதிர்த்து இடதுசாரி இளைஞர் மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் ஜூலை 4 அன்று பெருந்திரள் ஆர்ப்பாட்டத்திற்கு அறை கூவல் விடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், அனைத்திந்திய மாண வர் பெருமன்றம், இந்திய மாண வர் சங்கம், புரட்சிகர இளைஞர் கழகம், அகில இந்திய மாணவர் கழகம், அகில இந்திய ஜனநாயக இளை ஞர் சங்கம், அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம், அகில இந்திய மாணவர் பிளாக் ஆகிய அமைப்புகளின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அக்னிபாத் என்ற பெயரால் காண்ட்ராக்ட் முறையில், இந்திய இராணுவத்திற்கு ஆளெடுக்கும் புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தை வெளியிட்டுள்ளது ஒன்றிய அரசு. 17.5 வயதிலிருந்து 21 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 46,000 இளைஞர்கள் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம். சிலமாத பயிற்சி மட்டுமே கொடுத்துவிட்டு நாட்டை பாதுகாக்கும் வேலை வழங்குகிறார்கள். இத்திட்டத்தில் குறைந்த சம்பளம், 4 ஆண்டு ஒப்பந்தம், பென்சன் கிடையாது.

மேலும், அக்னிபாத் திட்டம் பல அபாயங்களைக் கொண்டுள்ளது, ஆயுதப் படைகளின் நீண்டகால மரபுகள் மற்றும் நெறிமுறைகளைத் தகர்க்கிறது மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட வீரர்கள் நாட்டைப் பாதுகாக்க சிறந்த பயிற்சியும் ஊக்கமும் எப்படிப் பெறுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கார்ப்பரேட் முதலாளித்துவ துறை கூட 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுதப் படையில் இருந்து விலகிய வழக்கமான ராணுவ வீரர்களை தங்களுடைய நிறுவனங்களில் எவ்விதத்திலும் பணியமர்த்துவதில்லை. எனவே, அக்னிபாத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் வீரர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் எதுவுமே இருக்காது.

மோடி அரசே, இந்திய இளைஞர்கள் அனைவருக்கும் நிரந்தர மற்றும் நிலையான, கண்ணியமான வேலைவாய்ப்பை உறுதி செய்!

இராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு வீரர்களை எடுக்கும் அக்னிபாதை திட்டத்தை ரத்து செய்!

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்று! படித்த இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புகளை வழங்கு!

பல்வேறு அரசு நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனே நிரப்பு!

வேலைவாய்ப்பின் மீதான பாசிச ஆட்சியின் தாக்குதலை எதிர்ப்போம்!

என்ற முழக்கத்தோடு செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, திருச்சி, திண்டுக்கல், தேனி, மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை புறநகர், மதுரை மாநகர், நெல்லை, தென்காசி, ராமநாதபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதில் ஏராளமான இளைஞர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பல்வேறு மாவட்டங்களில் தொடர் போராட்டங்களுக்கு இடதுசாரி இளைஞர் மாணவர் அமைப்பினர் திட்டமிட்டு வருகின்றனர்.







Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.